





# சொன்னது நீ தானா?



**1**

**வி**டியல் தன் முகவரியை பூமியில் பதிக்கத் தொடங்கியது. மழை வந்து முத்துக் குளித்திருந்த மரங்களில்... சின்னப் பறவைகள் கலகலத்வனி செய்து பூபாளம் பாட ஆரம்பித்தன.

அதிகாலையில் எழுந்து கொள்ளும் வழக்கம் கொண்டவள் மீரா. சிறு வயதிலிருந்தே பறவைகளின் 'கலகலத்வனி'யைக் கேட்டு ரசிப்பதில் அவளுக்கு அலாதி சுகம்.

அதைக் கேட்கும்போதே இனம் புரியாத குதூகலமும் சுறுசுறுப்பும் பரவசமும் தொற்றிக் கொள்வதைப் போல் உணருவாள் மீரா.

''மீரா! இந்தக் காலத்துப் பொண்ணா இருந்தாலும் விடியக் காத்தால டாண்ணு எந்திரிச்சுடறே... ஸ்நானம் பண்ணிட்டுப் பிரம்ம முகூர்த்தத்திலே பூஜை அறையில விளக்கேத் திடறே...

''எனக்கு சூடா பனை வெல்லத்தைத் தட்டிப் போட்டு காபி காய்ச்சிக் குடுத்திட்டுத் துறுதுறுன்னு வளைய நீ வர்றதைப் பார்க்கும்போது... எனக்கு ரொம்பவே பெருமையா இருக்கும்மா...'' என்று அடிக்கடி தாத்தா சதாசிவம் அவளைப் பாராட்டுவார்.

''இதுக்கெல்லாம் காரணம் நீங்க தானே தாத்தா? உங்க வளர்ப்புலே வளர்ந்து நிக்கிறேன் நான்.

''ஒரு காலத்துல இராணுவத்துல பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றவர் நீங்க... நேரம் தவறாமை, உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பரிவு, பாசம், இரக்கம் மனித நேயம், கருணை, பண்புன்னு... அத்தனை நல்ல குணங்களையும் ஒட்டு மொத்தமா குத்தகைக்கு எடுத்துக் கிட்ட தினுசுல நீங்க நடமாடறதைப் பார்த்து... சின்ன வயசிலேர்ந்து நான் பிரமிச்சுப் போயிருக்கேன்.

''உங்க பராமரிப்புலே வளர்ந்த பேத்தி நான். அன்பும் கவனமும் கண்டிப்பும் கறாருமா என்னை வளர்த்துட்டு... இப்படி என்னைப் பாராட்டறது சரியில்லையே தாத்தா?

''எல்லா கிரடிட்டும் உங்களைத்தான் சாரும். காலங் கார்த்தால நான் சுறுசுறுப்பா வளைய வர்றதுக்கு... இன்னொரு காரணமும் இருக்கு தாத்தா.

''இதோ... தோட்டத்துலேர்ந்து பறவைங்க 'கீச் கீச்'னு கலகலத்வனி செய்யறதைக் கேட்கும்போது... எனக்கு அப்படியே உடம்புலே சார்ஜ் ஏத்திக்கிட்டாப்பல ஒரு தெம்பும் சுறுசுறுப்பும் பரவுது தாத்தா...

''கொஞ்ச நேரத்துக்கு கலகலத்வனி பண்ணிட்டு, சொல்லி வச்சாப்பல பறவைங்க எல்லாம் கை கோர்த்தாப்பல... ஒண்ணா சேர்ந்து இரை தேடப் பறந்துடுங்க...

''எதைப் பத்தியும் விசனப்படாம சுதந்திரமா அதுங்க பறந்து போறதைப் பார்க்கும்போது... நமக்கு இறக்கைக்



கட்டிப் பறக்க மாட்டோமான்னு உள்ளூர ஏக்கம் ஜனிக்குது தாத்தா'' என்று தணிந்த குரலில் தக்க பதிலைக் கூறுவாள் மீரா.

இன்றும் அதே கலகலத்வனி தான்!

அதைக் கேட்டு ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. தாத்தா சதாசிவத்திற்கு நேற்று தான் 'காரியம்' முடிந்திருந்தது.

உலகமே இருண்டு விட்டாற் போலிருந்தது.

'தாத்தா சதாசிவம்தான் உலகம்' என்று இதுநாள் வரை வாழ்ந்து விட்டவள் மீரா.

எண்பது வயது கிழவராக இருந்தாலும் கைத்தடியை ஊன்றிக் கொண்டு கம்பீரமாகத் தான் வளைய வந்தார் சதாசிவம்.

அந்தக் காலத்தில் இராணுவத்தில் உழைத்து உரமேற்றிய உடம்பு. காய்ச்சல், தலைவலி என்று ஒருநாளும் முடங்கிப் படுத்ததில்லை.

தியானம், யோகா, உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி இவைகளைக் கடைப்பிடித்து வந்தவர் தான்.

இராணுவ வீரர் என்பதால் எதையும் தாங்கும் இதயம் கொண்டவராய் வலம் வந்தாலும்... உள்ளூரக் கவலை அவரை செல்லாய் அரித்துக் கொண்டிருந்தது நிஜம்!

சதாசிவம் - முத்தம்மாள் தம்பதியினருக்கு புத்திர சோகம் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தது.

கறிவேப்பிலை கொத்தாக இருந்த ஒரே மகன் சத்திய சீலனுக்கு புற்றுநோய் வந்திருப்பது தெரிந்ததும்... இருவரும் ஆடிப் போய் விட்டனர்.

பேத்தி மீராவுக்கு அப்போது நான்கு வயதிருக்கும். மருமகள் சாந்தாமணி இரண்டாம் முறையாக கருவுற்றிருந்தாள்.

என்ன செலவானாலும் பரவாயில்லை... ஒரே மகனை மரணத்தின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்றியே தீர

வேண்டும் என்று வைராக்கியத்துடன் பிரபல மருத்துவ மனைகளை நோக்கி அவர் படையெடுக்கத் தான் செய்தார்.

ஹீமோ தெரபி - மருந்து மாத்திரைகள், ஸ்பெஷலிஸ்ட்களுக்கு தர வேண்டிய கட்டணம்... என்று பணம் தண்ணீராய் செலவழிந்ததில் கையிருப்பு கரைந்தது.

மேற்கொண்டு செலவிற்கு அவர் தமது நிலத்தையும், வீட்டையும் விற்கவும் ஏற்பாடு செய்தார்.

என்ன செய்து என்ன பிரயோஜனம்? அன்புக்குகந்த கணவர் சத்திய சீலன் கொஞ்சம் கொஞ்சமாக மரணத்தின் விளிம்பிற்குச் செல்வதை... கண் கொண்டு பார்க்க முடியாமல் துடித்துப் போனாள் காந்தாமணி.

சத்திய சீலன் பெயருக்கு ஏற்றாற்போல் நல்ல குணம் படைத்தவர் ஆயிற்றே?

எப்பேர்ப்பட்ட உத்தமர்?

அப்பா சதாசிவத்திற்கு தப்பாமல் பிறந்த பிள்ளை ஆயிற்றே?

கட்டும் செட்டுமாக வாழ்ந்தவர். யாருக்கும் மனதால் கூடத் தீங்கு நினைக்காதவர்.

தயாள மனம், இளகிய உள்ளம் படைத்தவருக்கா புற்று நோய் வர வேண்டும்?

காந்தாமணி உள்ளூர கதறித் தீர்த்தாள்.

கணவர் இறந்த பின்னால் இரு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு... ஒரு விதவையாய் வாழ்க்கையில் போராட வேண்டும் என்பதை நினைக்கும் போதே அவளுக்குக் குலை நடுங்கியது.

அந்த அவல நிலையை அவளால் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை.

'ஊகூம்... அவரின்றி என்னால் வாழ முடியாது. அவர் விரைவில் கண்ணை மூடிவிடுவார் என்பது நிச்சயம்...



'ஆனால் அந்தக் காட்சியைக் காணும் திராணி எனக்கில்லை. அவருக்கு முன்னால் நான் போய்விட வேண்டும்.

'பூவோடு பொட்டோடு சுமங்கலியாகக் கண்ணை மூடும் பாக்கியத்தைக் கொடு பகவானே!' என்று வேண்டிக் கொள்ள ஆரம்பித்தாள் காந்தா.

விளைவு... வாழ்க்கையில் பிடிப்பு விட்டுப் போனதால் இரண்டாவது பிரசவத்தில் ஜன்னி கண்டு இறந்து விட்டாள்.

அந்த சிசுவும் இறந்து விட்டது.

எதிர்பார்த்த அதிர்ச்சி, நோயின் தீவிரம்... எல்லாமாகச் சேர்ந்து சத்திய சீலனை ஒரேயடியாகக் கண்ணை மூட வைத்து விட்டது.

வீட்டையும் நிலத்தையும் விற்ற பணத்தை வைத்து வைத்தியச் செலவு செய்து வந்த கையோடு... அடுத்தடுத்து மருமகள், மகனை வாரிக் கொடுத்து 'காரியத்தை' நடத்திய சதாசிவம் – முத்தம்மாள் தம்பதியினர் நடைப் பிணங்களாயினர்.

அவர்களுக்கு இருந்த ஒரே பிடிப்பு மீரா தான்!

எஞ்சியிருந்த தொகையை பேங்கில் போட்டு வைத்தனர். சதாசிவத்துக்கு பென்ஷன் வந்து கொண்டிருந்தது.

சத்திய சீலன் மில்லில் வேலை பார்த்து வந்தவர். ஒர்க்காம்பன்சேஷன், இன்ஷூரன்ஸ் என்று கணிசமாக ஒரு தொகை கிடைத்தது.

சொற்ப வாடகைக்கு அந்தக் காலத்தில் இந்த வீட்டில் குடி வந்தனர். வீட்டின் சொந்தக்காரர் சதாசிவத்துக்கு சிநேகிதர் என்பதோடு... அவர் தமது மகனோடு அமெரிக்காவில் வாசம் செய்து கொண்டிருந்தார்.

எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்லை. சதாசிவம் இருக்கும் வரை சொந்த வீட்டில் இருப்பது போல் நிம்மதியாக வாழ்ந்தாகி விட்டது.

அவரது மறைவுக்குப் பின்... மீரா இதே வீட்டில் நிம்மதியாக இருக்க முடியுமா?

தாய் தந்தையரை சிறு வயதிலேயே இழந்து அனாதை யாகி விட்டவள் மீரா.

தாத்தா பாட்டியின் நிழலில் வளர்ந்தவள் தான். பெற்ற வர்களின் அன்பு மழையில் நனையக் கொடுத்து வைக்கா தவள் தான்!

ஆனால் கடவுள் அவளுக்கு ஈடு இணை இல்லாத சவுந்தரியத்தை வாரி வழங்கி விட்டிருந்தார்.

நீண்ட கூந்தல், நீள் வட்ட முகம், அகன்ற விழிகள் கூர் மூக்கு, ரோஜா இதழ்கள், சங்குக் கழுத்து, சிறுத்த இடை என்று... சிற்பி செதுக்காத பொற்சிலையாய் காண்போர் கண்களைக் கட்டிப் போட்டாள்.

பாட்டி முத்தம்மாள் இவளது பத்தாவது வயதிலேயே போய் சேர்ந்து விட்ட பின்பு... தாத்தா சதாசிவம் தான் இவ ளுக்கு சகலமும் என்றாகிப் போனார்.

அவரை 'தாத்தா' என்பதைவிட 'தாயுமானவர்' என்றழைத் தால்.. சாலப் பொருத்தமாக இருக்கும்.

மீரா ப்ளஸ் - டூ முடித்து விட்டு அஞ்சல் வழிக் கல்வி மூலம் பி.ஏ. இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

கூடுதல் தகுதிக்காக பக்கத்துத் தெருவிலிருந்த கம்ப் யூட்டர் சென்டரில் சேர்ந்து கம்ப்யூட்டர் கோர்ஸ்களை கற்று வந்தாள்.

பேத்தி மீராவை ஒரு நல்ல இளைஞனுக்குக் கட்டிக் கொடுத்து விட்டுத்தான் கண்ணை மூட வேண்டும் என்று உயிரைப் பிடித்து வைத்திருந்தார் சதாசிவம்.

''உன்னைக் கரை சேர்த்துட்டா எனக்குக் கவலையே இல்ல மீரா. நல்ல பையனாப் பார்த்து அவன் கையில உன்னை ஒப்படைச்சுட்டா... என் பாரமே இறங்கிடும் இல்லையா?

''உன்னோட தங்கமான குணத்துக்கு ஒரு குறையும் வராது. நீ அமோகமா இருக்கப் போறே... அதைப் பார்த்துட்டு



தான் இந்தக் கிழவன் கண்ணை மூடுவான்'' என்று நம்பிக்கையோடு பேசுவார் சதாசிவம்.

''அப்படி அப சகுனமா பேசாதீங்க தாத்தா. எனக்கு பகீர்னு இருக்கு. எனக்கு உங்களை விட்டா... யார் தாத்தா இருக் காங்க? தயவு செய்து சாவைப் பத்தி நீங்க பேசவே பேசாதீங்க'' தழுதழுத்தபடி தாத்தாவைக் கடிந்து கொண்டது... இன்றைக்கு ஞாபகத்தில் வந்தது.

''சரி... ஏன் கண் கலங்கறே? புத்திசாலிப் பொண்ணு நீ! சாவே வராம சாசுவதமா நான் இப்படியே இருந்திட முடியுமா கண்ணு?

''உன்னை நல்ல இடத்துல ஒப்படைக்காம... நான் போக மாட்டேன். நீ அமோகமா வாழறதைப் பார்க்காம... நான் போயிட மாட்டேன் போதுமா ராஜாத்தி?'' என்று அவ்வளவு நம்பிக்கையுடன் அன்று தாத்தா ஆறுதல் கூறினாரே?

அந்த நம்பிக்கையில் மண்ணள்ளிப் போட்டாற் போல்... திடுதிப்பென்று அவருக்கு மாரடைப்பு வந்து பட்டென்று போய் சேர்ந்து விட்டாரே?

அவர்களுக்கு சொல்லிக் கொள்ளும்படியாக சொந்தங் கள் என்று யாருமில்லை.

வந்த உறவுத் தலைகளும் 'காரியம்' முடிந்ததும்... சொல்லாமல் கொள்ளாமல் கழன்று கொண்டனர்.

'இளம் பெண் மீரா. கல்யாணத்திற்குக் காத்திருக்கிறாள். சொத்து பத்து, சொந்த வீடு என்று எதுவுமில்லை. பெற்றவர் களை சிறு வயதிலேயே இழந்து விட்ட அனாதை வேறு!

'ஆதரவாய் வளர்த்த தாத்தாவும் போய் விட்டார். இவளைக் காப்பாற்றிக் கரை சேர்க்கும் பொறுப்பு... நம் தலையில் விழுந்து விட்டால்... என்ன செய்வது?

'விலை வாசி ராக்கெட் மாதிரி கிர்ருனு ஏறிப் போய் கிடக்கும் இந்தக் காலத்தில்... இவளுக்கு அடைக்கலம்

கொடுத்துக் காப்பாற்ற நமக்குக் கட்டுப்படி ஆகாதே?' என்ற பயத்தில்... தாமரை இலை மேல் தண்ணீர் போல் பட்டும் படாமலும் துக்கம் விசாரித்து விட்டு நழுவி விட்டிருந்தனர்.

குளித்து முடித்து விட்டு பின் பக்கத்துத் தோட்டத்திற்குள் புகுந்தாள் மீரா.

பறவைகளின் கலகலத்வனி சற்று அதிகரித்திருந்தது.

சுகந்த நறுமணத்தைப் பரப்பிக் கொண்டு... கொத்துக் கொத்தாக புஷ்பித்திருந்த சம்பங்கிப் பூக்கள் காற்றுக்கு அழகாய் தலை அசைத்துக் கொண்டிருந்ததை... நின்று நிதானித்து லயித்துப் பார்க்கும் மனநிலையில் அவள் இல்லை.

துரித கதியில் பூக்களைப் பறித்துக் கொண்டு கூடத்து சுவரில் மாட்டியிருந்த தாத்தா சதாசிவத்தின் படத்தின் முன் நின்றாள்.

முந்தானையால் மிருதுவாக இல்லாத தூசியைத் துடைத்தவள்... கலங்கிய கண்களுடன் பூக்களைப் படத்தில் சொருகி வைத்தாள்.

''நான் கம்ப்யூட்டர் கிளாஸிலிருந்து திரும்பி வர்றதுக்குள்ளே... வாசல்லே வந்து நின்னு பத்து வாட்டியாவது தெருமுனையை எட்டிப் பார்ப்பீங்களே தாத்தா?

'நீ பத்திரமா வீடு வந்து சேர்ற வரைக்கும்... வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டிருக்கேன்னு... அடிக்கடி நீங்க சொல்வீங்களே தாத்தா?

'இப்போ... இந்தப் பரந்த உலகத்துல என்னைத் தனியா அம்போன்னு தவிக்க விட்டுட்டுப் போயிட்டீங்களே தாத்தா?

'தாத்தா! தர்ம சிந்தனையோட வாழ்ந்த உத்தமர் நீங்க! உங்க வாக்கு எப்பவும் பலிதமாகுமே?

'உனக்கொரு குறையும் வராது. நீ அமோகமா வாழப் போற மீரா. அதைப் பார்த்துட்டுத்தான் நான் கண்ணை மூடுவேன்னு... அடிக்கடி சொல்வீங்களே தாத்தா?



'அது பலிக்காமலே போயிடுச்சே தாத்தா?

'நீங்களே உலகம்னு நான் வாழ்ந்துட்டேன். இப்போ... நாதியத்துப் போய் நிக்கிறேனே? எப்படி வாழப் போறேன் நான்?

'ஒரு பொண்ணு தனியா இருக்கிறாள்னு தெரிஞ்சா... பல ஆபத்துகள் வந்துடுமே தாத்தா?

'என்னோட இளமையும் அழகுமே எனக்கு எதிரிகளாய் மாறிடுமே? எனக்கு பயமா இருக்கே... என்னையும் உங்க கூடவே அழைச்சுட்டுப் போயிருக்கக் கூடாதா?'

உள்ளூரக் கதறியபடி புலம்பியவளை... அந்தக் குரல் கலைத்தது.

''விடிஞ்சு போச்சு. நான் கிளம்பறேன் மீரா. துக்கம் நடந்த வீட்டுல நீ தனியா இருக்கியேன்னு... இத்தன நாளா ராத்திரி துணைக்கு வந்து படுத்திருந்தேன்.

''உங்களுக்கு எதுக்கும்மா சிரமம்? நான் தைரியமா தனியா இருந்துப்பேன்னு சொல்றியே?... இன்னிக்கு இருந்து நீ பத்திரமா தாழ்ப்பாள் போட்டுட்டுப் படுத்துக்கோ...

''வீட்டுல வேலையை முடிச்சுட்டு நிதானமா வர்றேன். சரியா?'' கலைந்த கூந்தலைக் கோதி கொண்டையிட்டபடியே கேட்டாள், எதிர்வீட்டுப் பர்வதம் அம்மாள்.

''ரொம்ப நன்றிம்மா... என்னைப் பத்தி நீங்க கவலைப் படாதீங்க. நான் பத்திரமா இருந்துப்பேன். இந்த உலகத்துல நாம்ப தனியாத் தானே பிறந்தோம்? தனியாத் தானே போகப் போறோம்?


''எந்த உறவும் நிலையானதில்ல... நாம தானே தனியா நின்னு எல்லாத்தையும் திடமா எதிர் கொள்ளணும்?''

உள்ளூர நெஞ்சம் வெடித்து விடுவது போல் துயரம் அழுத்திக் கொண்டிருந்தாலும்... எதையும் முகத்தில் வெளிப் படுத்தாமல் இதழ்களை மிருதுவாய் முறுவலித்தாள் மீரா.

"சின்ன வயசு தான். ஆனா பக்குவப்பட்ட பொண்ணு. ரொம்ப தெளிவா இருக்கே... அதான் நல்லது. நான் வரட்டுமா?" அவளது தாடையைத் தொட்டுத் தடவி விட்டு அந்த அம்மாள் நடந்து விட்டாள்.

"தாத்தா! பாவம்னு இரக்கப்பட்டு கொஞ்ச நாள் ராத்திரி துணைக்குத் தங்கினாங்க... இப்ப அவங்களும் போயாச்சு... இனிமே நான் ராத்திரி தனியா தான் இருக்கணும். ராத்திரி... பகல்... இனி எப்பவுமே நான் தனியா அனாதையா இருக்க வேண்டியது தான்.

"எவ்ளோ கஷ்டம் வந்தாலும் தாங்கிக்கலாம் தாத்தா... ஆனா தனிமை ரொம்ப ரொம்பக் கொடுமையான விஷயம்... அது தான் என்னை பூதாகாரமா நின்னு பயமுறுத்துதே!" விசும்பியபடி மானசீகமாக அவள் பேசியபோது... தாத்தாவின் படத்தில் வைத்த சண்பகப் பூங்கொத்து சரிந்து பொத்தென்று விழுந்தது.



## 2

**கா**லை ஐந்து மணிக்கு எழுந்து வாக்கிங் சென்று விட்டு... சரியாக ஆறு மணிக்கு தமது பங்களாவுக்குள் நுழைந்தார் கங்காதரன்.

"கங்காதரன் சார் வாக்கிங் கிளம்பிட்டாருன்னா... சரியா அஞ்சு மணியாகுதுன்னு அர்த்தம். திரும்பி வந்தாருன்னா மணி ஆறு!

"குளிச்சு ரெடியாகி வெளியில கிளம்பினாருன்னா... மணி ஒன்பது. ஆபீசுக்குப் போயிட்டு ராத்திரி அவர் திரும்பறப்போ... மணி கரெக்டா பதினொண்ணு ஆயிடும்.

"அடிமட்டத்துல இருந்து வந்த மனுஷன் தான்... அவர் இப்போ பெரிய கோடீஸ்வரரா கொடி கட்டிப் பறக்கிறாரே? அதுக்குக் காரணமே... அவரோட விடா முயற்சி, உழைப்பு,



நேரம் தவறாமை, பணிவு, நிதானம் தான்" என்று இவரைப் பார்த்த மாத்திரத்தில்... தெருமுனையில் உள்ள டீக்கடையில் கூடியிருப்பவர்கள் தங்களுக்குள் கிசுகிசுப்பது வழக்கம்.

கங்காதரன் யோசனையுடன் பரந்த ஹாலைத் தாண்டி நடந்து பூஜையறைக்கு வெளியே நின்றார்.

மனைவி சாந்தா குளித்து முடித்து பளிச்சென்று நெற்றியில் குங்குமம் துலங்க வெள்ளிக் குத்து விளக்கை ஏற்றி விட்டு சம்மணமிட்டு அமர்ந்து மெல்லிய குரலில் ஸ்லோகத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

வழக்கமாக கங்காதரன் வாக்கிங் சென்று விட்டு வந்ததும்... தமது அறைக்குள் புகுந்து எளிய உடற்பயிற்சிகளைச் செய்வார்.

இன்று அறைக்குச் செல்லப் பிடிக்காமல் ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தார்.

அவரது முகத்தில் கவலை அப்பிக் கிடந்தது.

கங்காதரன் அடிமட்டத்திலிருந்து வந்தவர்தான். ஆனால் அதிர்ஷ்ட தேவதை அவரது பக்கம் இருந்ததால்... அவர் மண்ணைத் தொட்டாலும் அது பொன்னானது.

இறைவன் கொடுத்த வரமாக சாந்தா அவருக்கு மனைவியாக வாய்த்து விட்டிருந்தாள்.

மெத்தப் படித்தவள் தான்... இருந்தாலும் கணவனின் குறிப்பறிந்து நடந்து கொள்ளும் அன்பு மனைவி.

படித்த மனைவியை வீட்டோடு முடக்கிப் போட அவருக்கு மனமில்லை.

வேலைக்குச் செல்லவும் தொடர்ந்து மேலே படிக்கவும் அவர் பச்சைக்கொடி காட்டி விட்டிருந்தார்.

அவர் சாந்தாவுக்கு அளித்திருந்த சுதந்திரத்தின் பயனாக... இதோ... இன்றளவும் கல்லூரி விரிவுரையாளராக கம்பீரமாகப் பணியாற்றிக் கொண்டு தான் இருக்கிறாள்.

கங்காதரன் - சாந்தா தம்பதியினருக்கு ஐந்தாறு ஆண்டு களுக்குப் பின்பு பிறந்தவன் தான் கோகுல கிருஷ்ணன்.

ஏக போக ஆண் வாரிசு கோகுல் மீது பாசத்தைக் கொட்டி வளர்த்தனர்.

அவன் ஆசைப் பட்டதெல்லாம் சட்டென்று கிடைத்தன. நினைத்ததெல்லாம் நடந்தன.

எதற்காகவும் ஏங்கித் தவித்ததில்லை. கோகுல் தனது அம்மாவைப் போன்றே ஜாடையில் மட்டுமில்லை... படிப் பிலும் கெட்டிக்காரனாகத் தான் இருந்தான்.

பணத்திலேயே புரண்டு வளர்ந்த பிள்ளைக்குப் படிப்பு வருவது என்பது... மிகவும் அதிசயம் அல்லவா?

பெற்றவர்கள் பெருமிதத்தில் புளகாங்கிதம் அடைந்து விட்டனர். 'அழகான பிள்ளை... படிப்பிலும் வெளுத்து வாங்குகிறான்... வாழ்க்கையில் நமக்கென்ன குறை?' என்ற இறுமாப்பு கூட தலை காட்டி விட்டது!

ஆனால் கோகுல்...?

'தான் நினைத்ததெல்லாம் நிறைவேறியே தீரும்' என்ற அலட்சிய மனப்போக்குடன் உலா வரத் தொடங்கினான்.

கேட்ட பொருள் கிடைத்து விட்டால்... அதுவும் நினைத்த மாத்திரத்தில் கிடைத்து விட்டால்... அந்தப் பொருளுக்கே மதிப்பு இல்லாமல் போய் விடும். இது உலக நியதி!

கோகுல் படித்தவன் தான்... பண்பானவன் தான்... பெற்றவர்களுக்கு மதிப்பு கொடுத்து நடக்கும் பிள்ளை தான்!

ஆனால் அவனிடம் இருந்த முரட்டுப் பிடிவாதமும், வீம்பும், வறட்டு கவுரவமும்... கொஞ்சம் கொஞ்சமாக அவனை அதல பாதாளத்தில் தள்ளி விடுமே?' என்று ஏகத்திற்கும் பயந்தார் கங்காதரன்.

சமீப காலமாக மகனை நினைத்து நினைத்து உள்ளூர மருகியதில்... தூக்கத்தைக் கூடத் தொலைத்து விட்டிருந்தார்.



மகனை நினைத்து கணவர் கவலைப் படுவதை உணர்ந்து... சாந்தாவும் உள்ளூர உருகிக் கொண்டு தான் இருந் தாள்.

கங்காதரன் பிரபல கோடீஸ்வரர்... பல கம்பெனிகளுக்கு சொந்தக்காரர்.

இத்தனை கம்பெனிகளுக்கும் ஏக போக வாரிசாக இருந் தும் கோகுல்... பிரபல நிறுவனம் ஒன்றில் சாஃப்ட்வேர் என்ஜினீயராகப் பணியாற்றி வந்தான்.

''கோகுல்! என்னப்பா இது? அப்பாவோட சேர்ந்து நம்ம கம்பெனிகளின் நிர்வாகத்தை நீ பாத்துக்கக் கூடாதா?

''எவனோ ஒரு மூணாம் மனுஷனுக்கு... உன்னோட படிப்பும் திறமையும் உழைப்பும் பயன் படணுமா?

''எங்களுக்கு இருக்கிறது... நீ ஒரே பிள்ளை... நீ தானே நிர்வாகத்தை ஏத்துக்கிட்டு உங்கப்பாவோட சுமையை இறக்கி வைக்கணும்?

''அவருக்கும் வயசாகிட்டே போகுது இல்லையா? அந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு வந்து... நம்ம கம்பெனி களைக் கட்டிக் காப்பாத்தற வேலையைப் பாரு... கோகுல்!'' என்று சாந்தா மகனிடம் மன்றாடாத குறை தான்!

''இதே கேள்வியை நான் திரும்ப உங்க கிட்டே கேட்கலாம் இல்லையா?''

''நீயும் ரொம்பப் படிச்சவ தானேம்மா? உன்னோட படிப்பையும் திறமையையும் அப்பாவோட பிஸினஸுக்கே நீ பயன்படுத்தியிருக்கலாமே?

''அவருக்குக் கை கொடுத்திருக்கலாமே? ஏன் பண் ணலை? உனக்குன்னு ஒரு செல்ஃப் சாட்டிஸ்பேக்ஷன் வேணும்னு நீ நெனச்சதாலே தானே... இன்னமும் காலே ஜுக்கு வேலைக்குப் போயிட்டிருக்கே?

''அதே மாதிரி தான் எனக்கும் இருக்கு... ப்ளீஸ்மா... புரிஞ் சுக்கோ! நமக்கு இருக்கிற அத்தன கம்பெனிகளும் அப்பா வோட உழைப்புல உருவானது இல்லையா?

''எனக்கு... நான் சுயமா ஏதாவது சாதிக்கனும்னு ஆசைம்மா... கம்ப்யூட்டர்லே எனக்கு நிறைய சாதிக்கனும்னு ஒரு வெறி... இப்போ நா ஒர்க் பண்ற கம்பெனியிலே... நா உருவாக்கற பிராஜெக்ட்டுக்கு அமோக வரவேற்பு இருக்கு.

''இங்க மட்டுமில்லாம... ஜப்பான், ஜெர்மனி, சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி, லண்டன் நாடுகள்லே கூட அதே ஆபீஸ் இருக்கு... நல்ல டேலண்டான இளைஞன் அப்படிங் கிறதால... வெளிநாட்டுல இருக்கிற ஆபீஸ்கள்லே இருந்து... பிராஜெக்ட் பிரிப்பேர் பண்றதுக்கு எனக்கு அழைப்பு விடுக்கிறாங்க...

''சர்வதேச அளவுல எனக்குன்னு ஒரு பேரை உருவாக் கிட்டு வரேன். சர்வதேச அளவுல எனக்குப் பேர் கிடைச்சா... அது உனக்குத் தானேம்மா பெருமை?

''ப்யூச்சர்லே பெரிய அளவுல ஒரு கம்பெனியை உரு வாக்குவேன். அது உலக அளவுல பேசப் படனும். இது தான் என்னோட லட்சியம், கனவு!

''அதுக்கு நீ தடை சொல்லாதம்மா... அப்பாவுக்கு எடுத்துச் சொல்லும்மா... என் சார்பா நீ தான் பேசணும்.

''நம்ம கம்பெனிகளோட நிர்வாகத்தை நான் எப்ப வேணும் னாலும் ஏத்து நடத்தலாம். அதுலே எந்தப் பிரச்சினையும் இல்ல... சரியா?

''அப்பாவுக்கு வயசாயிடுச்சுன்னு சொல்லாதம்மா... அவர் சிங்கம் மாதிரி கம்பீரமா வளைய வந்துட்டிருக்காரு...

''எக்ஸர்சைஸ், வாக்கிங் பண்ணி ட்ரிம்மா... பார்க்க எனக்கு அப்பா மாதிரியா இருக்காரு...?

''புதுசா பார்க்கிறவங்க எங்க ரெண்டு பேத்தையும் அண் ணன் தம்பின்னு நெனைப்பாங்க... நீ மட்டும் என்னவாம்?

''தலையில ஒண்ணு ரெண்டு கம்பி நரையைத் தவிர்த் துட்டா... நீ கூட பார்க்க எனக்கு அக்கா மாதிரி அவ்ளோ



'யங்கா' இருக்கியே?'' என்று குரலில் பாசம் வழிந்தோட உச்சி குளிரப் பேசி... அம்மாவின் வாயை அடைத்து விடுவான் கோகுல்.

சாந்தாவுக்குப் பாசத்தில் மனம் பாகாய் கரைந்து விடும். அதற்கு மேல் வாதாடத் தோன்றாமல் மவுனமாகி விடுவாள்.

கோகுல் வாட்டசாட்டமான இளைஞன். படித்தவன், திறமைசாலி!

வீம்பு, பிடிவாதம், வறட்டு கவுரவம் கொண்டவன் தான். ஆனால் இதுவரை எந்த வம்பு தும்புக்கும் போனதில்லை. சக பணக்கார இளைஞர்களிடம் காணப்படும் கெட்ட பழக்கங் களுக்கு அடிமையானதில்லை என்ற திருப்தி பெற்றவளுக்கு இருந்தது நிஜம்!

மகனை அவன் போக்கில் விட்டுப் பிடிக்க வேண்டியது தான் என்று கணவரிடம் சொல்லி அவரையும் சமாதானப் படுத்தினாள் சாந்தா.

ஆனால் அந்த திருப்தி வெகு காலம் நீடிக்கவில்லை.

கோகுல் திடுதிப்பென்று காதல் வலையில் சிக்கி விட்டிருந்தான்.

காதல் தெய்வீகமானது தான்.. ஆத்மார்த்தமானது தான்... புனிதமானது தான். காதல் என்ற உணர்வை... கங்காதரன் - சாந்தா தம்பதியினர் அடியோடு வெறுப்பவர்கள் அல்ல.

காதலை அங்கீகரித்து முறைப்படி திருமணம் செய்து வைக்கவும் அவர்கள் தயாராகத் தான் இருந்தனர்.

ஆனால் கோகுல் 'காதல்' என்ற பெயரில் கண்ணை மூடிக்கொண்டு பாழுங் கிணற்றில் விழுந்து விட்டிருந்தான்.

அலுவலகத்தில் தன்னுடன் வேலை பார்த்து வந்த சஞ்சனா என்ற அழகியின் மீது உயிரையே வைத்து விட்டான் கோகுல்.

காதல் அவனது கண்ணை மறைத்து விட்டிருந்தது.

சஞ்சனாவின் அசரடிக்கும் அழகு... அவனை அவளது காலடியில் வீழ்த்தி விட்டிருந்தது.

அவளது வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கி விட்டிருந்த கோகுல்... அவளது உண்மையான சொரூபம் கொஞ்சம் கொஞ்சமாய் தெரிய வந்தபோது... சர்வமும் கலங்கி மனம் கசந்து போனான்.

குதூகலமாய் கும்மாளமிட்டபடி வளைய வந்த பிள்ளை... எதையோ பறி கொடுத்தாற் போன்று சோக முகத்துடன் அறைக் குள்ளேயே அடிக்கடி முடங்கிக் கொண்டதைப் பார்த்த கங்காதரனுக்கு அடிவயிறு சுருண்டது.

சஞ்சனாவுக்கும் - கோகுலுக்கும் ஏதோ மனக்கசப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பது மட்டும் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக பளிச்சென்று புரியத் தான் செய்தது.

சஞ்சனாவைப் பார்த்த மாத்திரத்தில் பிடிக்காமல் போய் விட்டாலும்... மகன் கோகுலுடன் அன்னியோன்யமாக வாழ்ந் தால் போதும் என்று மனதை சமாதானம் செய்து கொண் டிருந்தனர் கங்காதரன் - சாந்தா தம்பதியினர்.

ஆனால் கோகுல் மனரீதியாக பாதிப்புக்குள்ளான கார ணத்தை வெளிப்படுத்தாமல்... தனக்குள் மருகிக் கொண் டிருந்ததைத் தான் அவர்களால் காணச் சகிக்கவில்லை.

இது போதாதென்று... விரைவில் சஞ்சனா அருமை மகன் கோகுலின் தலை மீது பெரிய இடியை இறக்குவாள் என்று அவர்கள் கனவிலும் கருதவில்லை.



# 3

தோட்டத்திலிருந்து சுதந்திரமாய் புகுந்த காற்று, ஜன்னல் திரைகளை நடன மாட வைத்தது.

படுக்கையில் புரண்டு படுத்த கோகுல் மெல்ல எழுந்து அமர்ந்து எதிர்ச் சுவரில் மாட்டப்பட்டிருந்த பிரமாண்டமான அலங்காரக் கடிகாரத்தை ஏறிட்டான்.



மணி ஏழரை!

இரவெல்லாம் தூங்காமல் கண் விழித்திருந்ததால்... கண்கள் இரண்டும் அக்னி துண்டங்கள் பட்டது போல் ஜிவு ஜிவென்று எரிந்தன.

மண்டையைப் பிளந்து பெரிய பாறாங்கல்லை வைத்துத் தைத்து விட்டாற் போன்று... தலை பாரமாய் கனத்து வலித்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அடித்துப் புரண்டு அலுவலகத்திற்கு ஓட வேண்டிய அவசியம் இல்லை.

தலை மாட்டிலிருந்த தனது செல்போனை சட்டென்று எடுத்தான் கோகுல்.

நேற்று மாலையிலிருந்து இந்த நிமிடம் வரை சஞ்சனா விற்கு நூறு முறையாவது டயல் செய்திருப்பான்.

'ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருக்கிறது' என்ற அறிவிப்பு திரும்பத் திரும்ப வந்து கழுத்தை அறுத்தது.

"மை டியர் சஞ்சு! ஏன் என்னை இப்படி வதைக்கிறே? நான் உன்னை... என் உயிருக்கும் மேலா நேசிக்கிறேன் தெரியுமா?

"நீயும் அப்படித்தானே இருந்தே? கடந்த ரெண்டு மாசமா உன் கிட்ட நிறைய மாற்றங்கள் தெரியுதே?

"அடிக்கடி என்கிட்ட கோவிச்சுக்கிறே? முகத்தைத் தூக்கி வச்சுக்கிட்டு பாராமுகமா நடந்துக்கிறே...

"என்ன காரணம்னு தெரியாம நான் தவியாய் தவிக்கிறேன் தெரியுமா?

"உன் மனசு நோகும்படி நான் எதுவுமே பேசலையே? அடிக்கடி ஆபீசுக்கும் லீவு போட்டுட்டுப் போயிடறே?

"என்ன காரணம்? வீட்டுலே ஏதாச்சும் பிரச்சினையா? இல்ல... உனக்கு உடம்புக்கு முடியலையா?

''டார்லிங்! எதுவா இருந்தாலும் மனசு விட்டுப் பேசுடா...

''கடந்த சில நாட்களா நமக்குள்ளே ஏதோ விரிசல் ஏற்பட்டிருக்கு... அதை நெனைச்சு நான் எப்படித் தவிக்கிறேன் தெரியுமா?

''இந்த விரிசல் விலகிக்கிட்டே போய்... நமக்குள்ளே பெரிய பிளவு ஏற்பட்டு விடுமோன்னு... எனக்கு ரொம்பவே பயமா இருக்கு சஞ்சு!

''உனக்குப் பிடிச்ச மாதிரி ஹேர் ஸ்டைலை நான் மாத்திக்கிட்டேன்.

''உனக்குப் பிடிச்ச மாதிரியே டிரஸ் பண்றேன். உனக்காக நான் என்னையே மாத்திக்கிட்டேனே?

''இன்னும் நான் என்ன செய்யணும் சஞ்சு? இப்படி என்னை நிமிர்ந்து கூடப் பார்க்காம... பேசாம, கண்டுக்காம போனா என்ன அர்த்தம் டியர்?

''இந்த சித்ரவதையை என்னால தாங்கிக்க முடியலைடா... ப்ளீஸ் சஞ்சு! இன்னிக்கு... அதுவும் இப்பவே எனக்கு என்ன காரணம்னு தெரிஞ்சாகணும்.

''சொல்லு சஞ்சு! மை டார்லிங்... என்னைப் பார்த்தா உனக்குப் பாவமா இல்லையா?

''கமான்... கம் அவுட்!''

என்று முந்தா நாள் உணவு இடைவேளையின்போது அவளருகே சென்று... உரிமையாய் அவளது பூங்கரத்தைப் பற்றி மெல்ல தன்னருகே இழுத்தான்.

சஞ்சனா... காண்போர் கண்களை வசியம் செய்து கட்டிப் போடும் அபாரமான அழகுக்கு சொந்தக்காரி!

விசால விழிகளும், பாதாம் பால் நிற சருமமும் அவளைப் பேரழகியாக்க... தன் எழிலை உணர்ந்திருந்த அவளும் குதிரை போல மிடுக்காய் தான் நிற்பது வழக்கம்!



''ஷிட்! எனக்கு இஷ்டம் இல்லைன்னா... விட்டுரணும் கோகுல்! அதை விட்டுட்டு... இப்படி வந்து என்னை 'கம்பெல்' பண்றது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலை... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் மீ'' அவள் பேசுகையில், தூக்கிக் கட்டிய கூந்தல் அலட்சியமாய் சுழன்றது.

''சஞ்சு! இந்த மாதிரி பதில் வந்தா... நான் என்னன்னு புரிஞ்சுக்கிறது? இஷ்டம் இல்லைன்னா... என் கிட்ட பேசறது உனக்குப் பிடிக்கலையா?

''இல்ல... நம்ம காதல்லே 'இஷ்டம்' இல்லைன்னு... நான் அர்த்தம் எடுத்துக்கவா?

''அப்படி திடீர்னு இஷ்டம் இல்லாம போறதுக்குரிய காரணத்தை நான் தெரிஞ்சுக்கணும் சஞ்சு!

''நீ இப்படியே பாராமுகமா நடந்துகிட்டா... குழப்பத்திலேயும் தவிப்பிலேயும் நான் செத்துடுவேன் போலிருக்குடா.

''உன் மனசு நோகும்படியா... நான் ஒரு நாளும் நடந்துக்கிட்டதே இல்லையே?

''எதுலே இஷ்டம் இல்லைன்னு... தெளிவா முடிவா சொல்லிடு சஞ்சு... ப்ளீஸ்'' முகத்தில் பரிதாபம் வழிந்தோட ஏகத்திற்கும் குழைந்தபடி கேட்டவனை எரிச்சலுடன் ஏறிட்டாள் சஞ்சனா.

''ப்ச்! திரும்பத் திரும்ப இப்படிக் கேள்வி கேட்டு என்னை இரிடேட் பண்ணாதீங்க கோகுல்!

''பெரிய ஜீனியஸ் நீங்க... ஸச் எ டேலண்டட் கைய்'னு ஆபீஸ்லே எல்லாரும் உங்களைப் பாராட்டறாங்களே?

''இதைக் கூடவா... உங்களால புரிஞ்சுக்க முடியலை? இஷ்டம் இல்லைன்னா... அது எல்லாத்துக்கும் இஷ்டமில்லைன்னு அர்த்தம்! போதுமா? இன்னும் விரிவா விளக்கமா சொல்லணுமா?''

''எ... என்ன சொல்றே சஞ்சு? நீ... நீ விளையாட்டுக்கு தானே இப்படியெல்லாம் பேசறே? இனிமே விளையாட்டாக்

கூட இப்படிப் பேசாதேடா... என்னால தாங்க முடியலை'' பேசியபடி அவளது கரத்தைப் பற்றி தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டான் கோகுல்.

வெடுக்கென்று வெறுப்புடன் கையை உருவிக் கொண் டாள் சஞ்சனா.

''கோகுல்! என்னது இது? பைத்தியக்காரத்தனமா பிஹேவ் பண்றீங்க? இது ஆபீஸ்... நாலு பேர் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்படி நடந்துக்காதீங்க...

''காரணம் கேட்கறீங்க... இஷ்டமில்லைன்னு பட்ட வர்த்தனமா சொன்னா... அது விளையாட்டுக்குதானேன்னு கேட்கறீங்க? நான் விளையாடலை...

''சீரியஸா தான் பேசறேன். இது சரிப்பட்டு வராது கோகுல். நான் உங்க வீட்டுக்கு பல வாட்டி வந்திருக்கேன்ல?

''உங்க பேரண்ட்ஸ் ஒப்புக்கு என்னை வரவேற்று இரண்டொரு வார்த்தை பேசிட்டு நகர்ந்துடுவாங்க.... நீங்க கவனிச்சிருப்பீங்களே?

''அவங்களுக்கு என்னைப் பிடிக்கலைங்கிறது... எனக்கு நல்லாவே புரிஞ்சு போச்சு. என் மனசுக்கு இது சரியாப் படலை. அதான் விலகிட்டேன்.''

''ச... சஞ்சு! நீ சொல்ற காரணத்தை என்னால ஏத்துக்க முடியலையேடா... எங்கப்பா அம்மாவுக்கு நான் ஒரே பிள்ளை. என் ஆசைக்கு அவங்க குறுக்கே நிக்கலையே?

''கல்யாணத்துக்கு அப்புறம் உன் இஷ்டப்படியே நாம்ப... நம்ம ஆபீசுக்குப் பக்கத்துலேயே தனிக் குடித்தனம் வந்துட லாம்னு நீ சொன்னதுக்குக் கூட நான் தலையாட்டினேனே?

''என் மேல அவங்க எவ்ளோ பாசம் வச்சிருக்காங்க... தெரியுமா? எனக்கும் அவங்க மேல உயிர் தான்... இருந் தாலும் உன் மேல... ஐ மீன் உன் காதலுக்காக... நான் அவங் களை விட்டுப் பிரிஞ்சு வரவும் தயாரா இருக்கேனே... அப்புறம் என்ன?



''ஊகூம்... நான் நம்ப மாட்டேன். வேற ஏதோ ஒரு வலுவான காரணம் இருக்கு. இதெல்லாம் நொண்டிச் சாக்கு சஞ்சு!

''உண்மையான ரீசன் எனக்குத் தெரிஞ்சாகணும். சஞ்சு! ஒண்ணை மறந்துட்டுப் பேசிட்டு இருக்கே... நானுண்டு என் வேலையுண்டுன்னு இருந்த என்னை நீ தான் முதல்லே சுத்திச் சுத்தி வந்தே...

''முதல்லே நீ தான் என்கிட்ட ப்ரப்போஸ் பண்ணினே... 'நம்ம காதல் தெய்வீகமானது கோகுல்! அடுத்த ஜென்மத் துக்கும் நம்ம பந்தம் தொடரணும்னு... பீச்சுலே என் தோள்லே சாய்ஞ்சுகிட்டு நீ பேசினியே... மறந்துட்டியா?

''கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்கும் மேலா நாம்ப உயிருக்கு உயிரா...'' அவன் பேசி முடிக்கும் முன் சட்டென்று கை நீட்டி இடை மறித்தாள் சஞ்சனா.

''ஸ்டாப் இட் கோகுல்! இதுக்கு மேல நீங்க எதையும் எனக்கு ஞாபகப் படுத்த வேணாம்...

''நீங்க இனிமே எவ்ளோ முயற்சி பண்ணினாலும்... அது விழலுக்கு இறைத்த நீர் தான்... ஓகே கோகுல்! உங்களுக்கு உண்மையான ரீசன் தெரிஞ்சாகணும். அவ்ளோ தானே?

''கமிங் சன்டே அன்னிக்கு நான் தெளிவா சொல்லிட றேன். நாளைக்கு நான் ஆபீசுக்கு வரமாட்டேன்.

''சன்டே அன்னிக்கு எல்லாக் குழப்பத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வச்சுடலாம். போன் பண்ணுங்க. நான் சொல் லிடறேன். பை!'' விருட்டென்று நடந்தவளைப் பார்த்து... அதிர்ச்சியில் கல்லாய் சமைந்து நின்றிருந்தான் கோகுல்.

துணி கொண்டு துடைத்துப் போட்டு விட்டாற் போல்... சகலத்தையும் சஞ்சனாவால் எப்படி மறக்க முடிந்தது?

அப்பா கங்காதரனும் அம்மா சாந்தாவும் எவ்வளவு நல்லவர்கள். சஞ்சனா ஒரு நவ நாகரீக யுவதி. தன்னுடைய

பேரழகும் கவர்ச்சியான வனப்பும் வெளிப்படும்படியான ஆடைகள் அணிந்து... காண்போரைக் கிறங்கடிப்பதில் அவளுக்கு அலாதி சுகம்!

கோகுல் பலமுறை அவளைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்ததுண்டு. வீட்டில் பெரியவர்கள் இருப்பார்களே... அவர் களைக் காணச் செல்லும் போதாவது அடக்க ஒடுக்கமாய் சேலை உடுத்தி பாந்தமாய் அவள் வந்ததே இல்லை.

யாருக்காகவும் எதற்காகவும் தன்னுடைய கொள்கைகளை விட்டுக் கொடுக்காத சுபாவம் கொண்டவள் என்பதால்... கோகுலும் அவளை 'இப்படி நடந்து கொள்... அப்படி நடந்து கொள்' என்று வற்புறுத்தியதும் இல்லை.

கோகுலின் பங்களாவிற்கு வரும் போதெல்லாம்... நாகரீக உடை அணிந்து தான் வருவாள். 'சுடிதார் அணிந்து வந்தா லென்ன?' என்று கேள்வி கேட்க அவனுக்கு மிகவும் தயக்கம்.

முழங்கால் வரை ஒட்டிய முக்கால் பாண்ட் அணிந்து... சிக்கென்று உடலைக் கவ்விப் பிடிக்கும் சிறு சட்டையும் மாட்டிக் கொண்டு வந்திருக்கிறாள்.

அப்பாவும் அம்மாவும் சஞ்சனாவை ஏற இறங்கப் பார்த்து விட்டு அர்த்த பாவனையுடன் ஒருவருக்கொருவர் பார்வைப் பரிமாற்றம் செய்து கொள்ளும்போது... கோகுல் தர்ம சங்கடத்தில் உள்ளூர தவித்திருக்கிறான்.

ஆனாலும் அவர்கள் முகம் சுளித்து ஒரு வார்த்தை கூடப் பிரஸ்தாபித்ததே இல்லையே?

'அப்பேர்ப்பட்ட பெற்றவர்களை விட்டு விட்டுத் தனிக் குடித்தனம் செல்லக் கூடத் தயாராய் தானே இருந்தேன்?'

'என்ன காரணத்தைச் சொல்லப் போகிறாள்? என்னை நிராகரித்து விடுவாளோ? 'சரிப்பட்டு வராது... இஷ்டம் இல்லை' என்கிறாளே?

'இதுவரை சஞ்சனா இப்படி விட்டேற்றியாக... விஷத்தைக் கக்கியது போல் புண்படும்படிப் பேசியதே இல்லையே?'



தலைக்குள் வண்டு குடைந்ததில்... ஞாயிற்றுக்கிழமை வரை தாக்குப் பிடிக்க முடியாமல் நேற்று மாலையிலிருந்தே அவளது செல்போனுக்கு முயற்சித்தான்.

ஏமாற்றம் தான் முற்றுகையிட்டது.

'சஞ்சுவின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று... அவளைப் பார்த்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாமா?' என்ற யோசனை அவனுக்குள் ஜனித்த வேளையில்... அவனது செல்போன் அலறியது.

தரையில் மின்னி மின்னிச் சிரித்த அவளது பெயரைப் பார்த்ததும் அவனது வயிற்றில் பால் வார்த்தாற் போலி ருந்தது.

"மார்னிங் சஞ்சு! எத்தன வாட்டி நா ட்ரை பண்ணினேன் தெரியுமா? சொல்லுடா... நைட்டெல்லாம் தூக்கமே வராம தவிச்சுட்டிருந்தேன் டார்லிங்" படபடத்தான் கோகுல்.

"இனிமே என்னைப் பார்க்கவோ... என் கிட்ட பேசவோ ட்ரை பண்ணாதீங்க கோகுல். இன்னிக்கோட எல்லாத்துக்கும் புல் ஸ்டாப் வச்சுடணும்.

"ஏன்னா... மிஸ்டர் நிரஞ்சனுக்கு நான் மனைவியாகப் போறேன். என்னோட ஒண்ணு விட்ட மாமா பல வருஷங் களுக்கு முன்னால அமெரிக்காவில பிஸினஸ் பண்ணி... அங்கேயே செட்டில் ஆயிட்டாரு. அவரோட ஒரே மகன் தான் நிரஞ்சன். பெரிய கோடீஸ்வரர்.

"ரெண்டு மாசத்துக்கு முன்ன... அவங்க இந்தியாவுக்கு வந்திருந்தபோது எல்லா ரிலேட்டிவ்ஸ் வீட்டுக்கும் வந் தாங்க... எங்க வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்ததும்... அவங்க குடும்பத்துக்குப் பிடிச்சுப் போச்சு.

"குறிப்பா நிரஞ்சன் என்னை ரொம்ப டீப்பா லவ் பண்ணவே ஆரம்பிச்சுட்டாரு. அடிக்கடி என்னை மீட் பண்ணினாரு...

"சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு... அவங்க பேரண்ட்ஸ் என்னை அவங்க வீட்டு மருமகளாக்கிடணும்னு முடிவு பண்ணி எங்க வீட்டுல பேசினாங்க...

''இன்னும் ரெண்டு வாரத்துல எனக்கும் நிரஞ்சனுக்கும் மேரேஜ்... அதுக்கடுத்த வாரமே நாங்க யு.எஸ். போயிடு வோம்...''

''ச... சஞ்சு! நீ எப்படி இதுக்கு சம்மதிச்சே? நம்ம காதல்? அடுத்த ஜென்மத்துக்கும் இந்த பந்தம் தொடரும்னு நீ சொன்னதெல்லாம்?'' அவனது குரலில் கோபமும் ஏமாற்ற மும் போட்டி போட்டுக் கொண்டு வெளிப்பட்டன.

''எஸ்... நான் இல்லேன்னு சொல்லலையே? உங்களை யும் நிரஞ்சனையும் என்னோட மனத் தராசுல வச்சு எடை போட்டுப் பார்த்தேன்.

''உங்களைவிட எல்லா விதத்திலேயும் அவர் பெட்டர்னு தோணுச்சு. குறிப்பா வெளிநாட்டு வாழ் இந்தியக் கோடீஸ் வரர் ஆச்சே?

''என்னோட அழகுக்கு கிடைச்ச வெகுமதி இது... அதான் உங்களை... உங்க காதலை உதறிட்டேன்.

''நீங்க பெரிய ஜீனியஸ் மட்டுமில்ல... டீசண்ட் டைப்பும் கூட... நாசுக்கா விலகிடுங்க... ஏதோ கொஞ்ச நாள் ஜாலியா பழகினோம்... பீச், பார்க், மகாபலிபுரம்னு சுத்திப் பொழுதைப் போக்கினோம்.

''அவ்ளோதான்... அத்தோடு முடிஞ்சு போச்சுன்னு நெனச்சுட்டு... நான் மறந்தாச்சு.

''நீங்களும் என்னைப் புரிஞ்சுகிட்டு ஒதுங்கிடுவீங்கன்னு நம்பறேன். குட் பை ஃபார் எவர் கோகுல்.''

வானமே இடிந்து தலையில் விழுந்து விட்டாற் போலி ருந்தது. நெஞ்சில் சம்மட்டியால் ஓங்கி அடித்தாற் போன்ற வலியில் துடித்துப் போனான் கோகுல்.

கண்கள் குபுக் என்று ஊற்றெடுத்தன.

அவமானத்தால் தேகமே தீப்பிடித்து விட்டாற் போன்று திகுதிகுவென்று எரிய ஆரம்பித்தது.



தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் விசுக்கென்று தலை தூக்கியது.



## 4

**வி**யப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந்தாள் மீரா. வீட்டைப் பூட்டி விட்டு கம்ப்யூட்டர் கிளாஸுக்குச் செல்லலாம் என்று அவள் எத்தனித்தபோது... வாசலில் வந்து நின்ற படகுக் காரிலிருந்து உதிர்ந்த வர்களை உற்றுப் பார்த்தாள்.

அவளது ஒன்று விட்ட சித்தப்பா விநாயக மூர்த்தியும் அவரது மனைவி கமலாவும் சோகம் பூசிய முகங்களோடு உள்ளே வந்தனர்.

''மீரா செல்லம்! சதாசிவம் அப்பா தவறிப் போன விஷ யமே எங்களுக்கு இன்னிக்குத் தான் தெரிய வந்துச்சும்மா...

''விஷயத்தைக் கேள்விப் பட்டதும் பதறியடிச்சுக்கிட்டு நாங்க வந்தோம்.

''நா... நாங்க இன்னிக்கு இந்த நிலைமையில இருக் கோம்னா... அதுக்குக் காரணமே சதாசிவம் அப்பா தான்!

''அந்தக் காலத்துல வறுமையில வாடின எங்களுக்கு... அவர் எவ்ளோ உதவி பண்ணியிருக்காரு. தெரியுமா?

''பி.யு.சி. வரைக்கும் அவர் தான் என்னைப் படிக்க வைச்சாரு. அந்தப் படிப்பை மூலதனமா வச்சுத்தான்... நான் உசந்து இன்னிக்கு சமூகத்துல பெரிய மனுஷனா நட மாடிட்டிருக்கேன்.

''உங்க தாத்தா ஒரு தெய்வம் அம்மா! கடைசி நிமிஷத்துல அவரோட பாதத்தைத் தொட்டு வணங்கற கொடுப்பினை... எனக்கு இல்லாமப் போயிடுச்சே மீரா.

''ஆமா... தாத்தாவும் போனதுக்கு அப்புறம் நீ தனியாவா இந்த வீட்டுல தங்கியிருக்கே?

''ஏம்மா நீ இப்படி அநாதரவா நின்னு தவிக்கணும்னு உனக்கென்ன தலையெழுத்தா?

''இந்த சித்தப்பாவை எப்படி மறந்தே நீ...? உன்னை இந்தக் கோலத்துல ஒத்தையா பார்க்கும்போதே... என் நெஞ்செல்லாம் கலங்குதே ராஜாத்தி! கிளம்பு எங்க கூட...

''எட்டு மாசத்துக்கு முன்ன... திருநீர்மலைக் கோவிலுக்கு நாங்க வந்தப்போ... தாத்தாவைப் பார்த்துட்டு அப்படியே என்னோட விசிட்டிங் கார்டை உன் கையில கொடுத்தேனே?

''என்னோட செல்போனுக்கு ஒரு போன் அடிச்சிருந்தா... அடுத்த நிமிஷமே நான் பறந்து வந்திருப்பேனே?'' உரிமையாய் அதட்டினார் விநாயக மூர்த்தி.

''அ... அந்த விசிட்டிங் கார்டை நான் எப்படியோ மிஸ் பண்ணிட்டேன் சித்தப்பா. என்னை மன்னிச்சுடுங்க.''

மீராவுக்கு ஏற்பட்ட துயரத்திலிருந்து அவள் இன்னமும் மீண்டு வராமல் தத்தளித்துக் கொண்டிருந்ததில்... உண்மையில் இந்த ஒன்று விட்ட சித்தப்பாவின் ஞாபகமே தலை காட்டவில்லை என்பது நிஜம்.

அந்தக் காலத்தில் ஒரு நிறுவனத்தில் மானேஜராய் வேலைக்குச் சேர்ந்து நாணயமாய் நடந்து கொண்டு... முதலாளியின் அன்பையும் கவனத்தையும் கவர்ந்தவர் விநாயக மூர்த்தி.

மனம் குளிர்ந்து போன முதலாளி தமது ஒரே மகளை இவருக்கே கட்டி வைத்து... எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்து விட்டு கண்ணை மூடி விட்டாராம்... இதையெல்லாம் தாத்தா சதாசிவம் அவ்வப்போது பழைய நினைவுகளைக் கிளறியபடி... அவளிடம் சுவாரசியமாய் சொல்லியிருக்கிறார்.

தான் படிக்க வைத்ததால் தானே விநாயக மூர்த்தி... இன்று உயர்ந்திருக்கிறான்... தமக்கு இக்கட்டு வந்த தருணத்தில்



அவனிடம் சென்று... செய்நன்றிக்கு ஈடாக பண உதவி பெற வேண்டும் என்று சதாசிவம் ஒருக்காலும் நினைத்ததே இல்லை.

நன்றியை மறக்காமல் எப்போதாவது விநாயக மூர்த்தி... பழ வகைகள் இனிப்பு காரம் வாங்கிக் கொண்டு இந்தப் பக்கம் எட்டிப் பார்த்து விட்டுப் போவார்.

அவரைக் கைப் பிடித்த கமலாவுக்கு பணக்கார மமதை...

அவளை இரண்டொரு வாட்டி தான் மீரா பார்த்திருக்கிறாள்.

''எங்களுக்கு ஒரே பொண்ணு தான்... பேரு தாரா! உன் வயசு தான் அவளுக்கும்... கிளம்பும்மா... நம்ம வீட்டுக்குப் போகலாம்.

''இந்த சித்தப்பா இருக்கும்போது நீ இப்படி அனாதையா இருக்கணும்னு அவசியமில்ல... கமலா! என்னம்மா அப்படிப் பார்த்துட்டே இருக்கே... நீயும் கூப்பிடும்மா...''

''வயசுப் பொண்ணு... அதுவும் இவ்ளோ அழகா இருக்கே... தனியா இந்தக் காலத்துல இருந்தால... அது நல்லதுக்கு இல்லம்மா...

''இனிமே நீயும் எங்களுக்கு மகள் தான். உங்க தாத்தாவைப் பத்தி அடிக்கடி இவர் ரொம்பப் பெருமையா சொல்லியிருக்காரு...

''அவரோட பேத்தியை நாங்க விட முடியுமா? எங்களுக்கு உன்னை ஒண்டியாப் பார்க்கவே கஷ்டமா இருக்கு. வாம்மா... நம்ம வீட்டுக்குப் போகலாம்.

''உன்னை மேல படிக்க வச்சு நல்ல எடத்துல கட்டிக் கொடுக்க வேண்டியது... எங்க கடமை! வாம்மா'' அன்பொழுகப் பேசியவாறு மீராவின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள் கமலம்.

சட்டென்று பதில் சொல்ல முடியாமல் தர்ம சங்கடத்துடன் திணறிய மீரா... மெல்ல தூணோரமாய் வந்து நின்ற எதிர் வீட்டு பர்வதத்தை ஏறிட்டாள்.

வாசலில் கார் வந்து நின்றதுமே எட்டிப் பார்த்த பர்வதத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை.

'பணக்கார தோரணையில இருக்கிற தம்பதிங்க யாரு? மீரா வீட்டுலே தனியா இருக்காளே?' என்ற அக்கறையில்... பரபரப்புடன் அவளும் வீட்டிற்குள் வந்து விட்டிருந்தாள்.

பர்வதத்தின் கணவர் அந்தப் பகுதியின் கவுன்சிலர் வேறு.

திருநீர் மலைக் கோவிலின் எதிர்ப்புறத்திலிருந்த நெருக்கமான குடியிருப்பில் வசித்தவர்கள் அவர்கள்.

அண்டை அசலாக இருந்த போதிலும்... அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் நெருங்கிய உறவினர்களைப் போன்று நேசமாய் உரிமையாய் உறவாடுவது வழக்கம்!

''மீரா கண்ணு! இதுல யோசிக்கிறதுக்கு ஒண்ணுமே இல்ல ராஜாத்தி. காலம் கெட்டுக் கிடக்கு. ராத்திரியிலே நம்ம வீட்டுல வந்து படுத்துக்கோன்னு... நாங்க சொன்னாலும் நீ மறுத்துடறே.

''உனக்குத் துணையா நான் வந்து இங்க படுத்தாக்க... 'உங்களுக்கு எதுக்கும்மா வீண் சிரமம்?'னு சங்கடப் படறே...

''தாத்தா இறந்து போன விஷயம் எல்லாருக்குமே தெரியும். நாளைக்கு எவனாவது ஒருத்தன் நல்லா தண்ணியடிச்சுட்டு வந்து... நடு ராத்திரியில வந்து கதவைத் தட்டிட்டா... வயசுப் பொண்ணு நீ பதறிப் போயிட மாட்டியா?

''ஆயிரம் தான் தாயா புள்ளையா நாம்ப பழகினாலும்... அது சொந்த பந்தத்துக்கு ஈடாகாது தான்.

''விஷயத்தைக் கேள்விப்பட்டு பதறியடிச்சுட்டு வந்திருக்காங்க... அக்கறையா பாசமா உன்னை மகள் மாதிரி பார்த்துக்கிறோம்னு... உன்னை வருந்தி வருந்திக் கூப்பிடறாங்க...

''அப்புறம் என்ன? கிளம்பு தாயி... நாங்க அப்பப்போ உங்க சித்தப்பா வீட்டுக்கு வந்து உன்னைப் பார்த்துக்கிறோம். பெரியவங்க உன்னோட பதிலுக்காகக் காத்திருக்காங்க... பாரு!



''சட்டுன்னு உன்னோட முடிவைச் சொல்லும்மா'' உரிமையாய் மீராவின் தோளைத் தொட்டு அசைத்தாள் பர்வதம்.

நான்கு சட்டங்களுக்கு அடங்கி புன்னகை சிந்திக் கொண்டிருந்த தாத்தா சதாசிவத்தின் மீது... அவளது சோகம் ததும்பும் விழிகள் பதிந்தன.

'செய்த உதவிக்கு பிரதிபலனை எப்போதும் எதிர்பார்க்கவே கூடாது' என்ற உறுதியான கொள்கை உடையவர் தாத்தா சதாசிவம்.

அவர் என்றைக்கோ பண உதவி செய்து படிக்க வைத்த நன்றிக் கடனை ஈடு செய்வதற்காக... விநாயக மூர்த்தி அவளுக்கு அடைக்கலம் தர முன் வந்திருக்கிறார்.

''அதை ஏற்றுக் கொண்டு அவரது வீட்டிற்கே சென்று விடலாமா? 'எவ்வளவு கஷ்டங்கள் அடுக்கடுக்காக வந்து அலைக்கழித்த போதிலும்... சுய கவுரவத்தை விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்தீங்களே தாத்தா?

''உங்க பேத்தி நான்! அவங்க வீட்டுக்கே போயிட மனசு தடுக்குதே?

''தனியாக நான் தொடர்ந்து இதே வீட்டில் தங்கவும் முடியாது. கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போய் வரும் வழியில்... ரோட்டோர ரோமியோக்களுக்கு துணிவு துளிர்த்துப் போய் விசிலடித்து ஜாடையாகப் பாடி வாலாட்ட ஆரம்பித்து விட்டார்களே?

''நான் தனியாக இருக்கும் விஷயம் தெரிந்ததால் வந்த துணிவு தானே இது?

''துணிவு வலுப்பெற்று நாளைக்கே வீட்டருகே வந்து வம்பு செய்ய மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

''சித்தப்பாவுடன் செல்ல தன்மானம் தடுக்கிறது. இங்கேயே துணிச்சலுடன் தனியாக வாழத் தீர்மானித்தால்... என் மானத்திற்கு உத்திரவாதம் கிடையாது போலிருக்கிறதே?

'நான் என்ன செய்யப் போகிறேன் தாத்தா?'

மீராவின் உள்ளத்தில் பட்டிமன்றப் போராட்டமே நடந்து கொண்டிருந்தது.

'சுய கவுரவத்தைப் பார்த்தால்... என் பெண்மைக்கு ஆபத்து வந்து விடலாம். அதன் பின் அவமானப் பட்டு நான் உயிரோடு இருக்க முடியுமா?

'ஊகூம்.. சித்தப்பா வீட்டிற்கே சென்று விட வேண்டியது தான் வேறு வழியில்லை...'

''என்னம்மா யோசிக்கிறே?'' சித்தப்பாவின் பரிவான குரல் அவளைக் கலைத்தது.

'அவள் என்ன சொல்லப் போகிறாளோ?' என்ற படபடப்பில் ஆர்வமாய் அவளது முகத்தையே ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தவரை... சிறு முறுவலுடன் ஏறிட்டாள் மீரா.

''பெரியவங்க நீங்க... இவ்வளவு எடுத்துச் சொல்லிக் கூப்பிடறீங்க... நான் மறுக்க முடியுமா சித்தப்பா?

''உங்க இஷ்டப்படியே நான் நம்ம வீட்டுக்கே வந்துட றேன்.'' அவள் மெல்லிய குரலில் தயக்கமாய் கூறியதும்... விநாயக மூர்த்திக்கு மனதிலிருந்த பெரிய பாரம் இறங்கியது போலிருந்தது.

இது காலம் வரை, வாழ்ந்து வந்த வீட்டை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து செல்லப் போவதை நினைக்கும் போதே... மீராவுக்கு அடிவயிற்றைப் பிசைவது போல் இனம் புரியாத சங்கடம் ஏற்பட்டது நிஜம்!

'வாழ்க்கையில் எத்தனை துன்பங்கள் வந்து அலைக் கழித்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளலாம்.

'ஆனால் 'தனிமை' என்பது மிகவும் கொடுமையான விஷ யம். கவலையாய் இருந்தால் இதமாய் நான்கு வார்த்தைகள் பேசி ஆறுதல் படுத்தக் கூட ஆளில்லாமல் இருப்பது என்பது நரகம் தான்' என்ற கருத்து கொண்டவள் மீரா.



அதனால் துணிந்து சித்தப்பா வீட்டிற்குச் செல்ல முடிவெடுத்து விட்டாள். விதி சிரித்தது...! அவள் அங்கு போன பின்பு... கஷ்டங்கள் வாட்டி வதைத்த பின்பு... 'தனிமை எவ்வளவோ மேல்' என்ற முடிவுக்கு வருவாள் என்பதைக் கனவிலும் கருதவில்லை.



5

**மா**ம்பலத்தில் அந்த பங்களாவுக்குள் சித்தப்பா - சித்தியுடன் நுழைந்த மீரா அசந்து தான் போனாள்.

தலை எது வால் எது என்று விளங்கிக் கொள்ள முடியாதபடி ரோமம் அடர்ந்த நாய்க்குட்டி ஒன்றுடன் கொஞ்சிக் கொண் டிருந்த இளம் பெண்ணை வியப்புடன் ஏறிட்டாள் மீரா.

நவ நாகரீக உடையில் உதட்டில் சாயப் பூச்சும், நகப் பூச்சுமாக இருந்தாள். கன்னங்களில் செல்வத்தின் செழிப்பு... உடலிலும் அதன் வளமை தெரிந்தது. கூந்தலைக் கழுத்து வரை வெட்டி விட்டிருந்தாள்.

கண்கள் வியப்பில் விரிய தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மீராவை அலட்சியமாய் திரும்பிப் பார்த்தவள் ''யாருப்பா இந்தப் பொண்ணு?'' என்று விநாயக மூர்த்தியிடம் கேட்டாள்.

''இவ தான் மீரா. சதாசிவம் அப்பாவோட பேத்தி! உன்கிட்ட கூட நான் அவரைப் பத்தி சொல்லியிருக்கேனே? அவரு சமீபத்துல தவறிட்டாரு.

''இந்தப் பொண்ணுக்கு அம்மா அப்பா கூட கிடையாது. வயசுப் பொண்ணு தனியா இருந்தா... மனசு கேட்கலை. அதான் கூட்டிட்டு வந்துட்டோம்...'' என்றவர் மீராவை ஏறிட்டார்.

''மீரா! இவ என் பொண்ணு தாரா... இனிமே நீயும் எங்களுக்கு மகள் தான். இங்க வந்துட்டேயில்ல... இனி நீ கலகலப்பா சிரிச்சுப் பேசி வளைய வரணும்.

''பக்கத்துல இருக்கிற கம்ப்யூட்டர் கிளாசுல நீ நாளைக்கே ஜாயின் பண்ணிக்கோ... நான் ஏற்பாடு பண்ணிடறேன். சரியா? கமலா! மீராவை உள்ளே கூட்டிட்டுப் போ... கெஸ்ட் ரூம் தயாராத்தானே இருக்கு? மீரா அங்க தங்கிக்கட்டும்.''

மீரா அரக்கப் பரக்க விழித்தபடி கமலாவைத் தொடர்ந்து நடந்தாள்.

அவளது வாழ்நாளில் இவ்வளவு பெரிய பங்களாவை அவள் பார்த்ததே இல்லை.

வளைந்து நெளிந்து சென்ற மாடிப் படிகளில் தயக்கமாய் ஏறினாள்.

மாடியில் வலது பக்கத்திலிருந்த முதல் அறையை சுட்டிக் காட்டினாள் கமலம்.

''இதான் உன் ரூம்! இது நாள் வரை நீ வாழ்ந்த சூழ்நிலை வேற... ஆனா இனிமே சென்னை வாசிங்க மாதிரி பரபரப்பான வாழ்க்கை முறைக்கு உன்னை நீ பழக்கப் படுத்திக் கணும்.

''என்னை எடுத்துக்கோ... நான் லேடீஸ் கிளப்புல மெம்பரா இருக்கேன். அடிக்கடி லேடீஸ் மீட்டிங்கை அட்டெண்ட் பண்ணணும்.

''சோஷியல் சர்வீஸ் பண்றதுக்காக நாலு எடங்களுக்குப் போய் அல்லாடணும்.

''சமயத்துல யார் வீட்டுலேயாவது 'கெட் - டு - கெதர்' நடக்கும். அதுல கலந்துக்கணும்.

''நம்ம வீட்டுலே அடிக்கடி 'கெட் - டு - கெதர்' வச்சுக் கணும்... லேடீஸ் கிளப்புல இருக்கிற மெம்பர்ஸ் எல்லாருமே பிரியப்படுவாங்க...



''அதுக்குக் காரணம் என்னன்னா... நான் ஆர்கனைஸ் பண்ற விதம்... நான் சுறுசுறுப்பா அவங்களை உபசரிக்கிற விதம் தான்!

''எனக்கு சோம்பி உட்காரவே பிடிக்காது. சதா ஏதாவது ஒரு வேலை செய்துட்டே இருக்கணும்.

''அதிலும் வீட்டுலே இருக்கிறதை விட வெளியில தான் எனக்கு அதிக வேலைகள் இருக்கும்.

''சின்ன வயசிலேர்ந்தே எனக்கு சமூக சேவை செய்யற திலே அவ்வளவு ஈடுபாடு!

''கிளப்புக்காக... கல்ச்சுரல் பரோகிராம்ஸ் ஏதாவது இருந்தா... அதையெல்லாம் இழுத்துப் போட்டுக்கிட்டு செய்யறதாலே... எனக்கு ரொம்ப நல்ல பேர்.

''மத்தவங்க மாதிரி தயங்கி ஒதுங்கிப் போகாம... ஆர்வமா உத்வேகமா நான் செயல்படறதாலே... தொடர்ந்து நாலஞ்சு வருஷமா 'சிறந்த சமூக சேவகி' அப்படிங்கிற பட்டத்தை தலைவியும், செகரட்டரியும் எனக்கு கொடுத்துட்டு வர்றாங்க...

''இதைப் பார்த்து மத்த மெம்பர்கள் வயிறு எரியத்தான் செய்யறாங்க...

''எனக்கு சதா துறுதுறுப்பா இருக்கத் தான் பிடிக்கும்'' மோவாயை சிறிது உயர்த்தி தனது அருமை பெருமைகளை அவிழ்த்து விட்டாள் கமலா.

''கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு சித்தி'' முகம் மலரக் கூறினாள் மீரா.

''என்னை நீ அம்மான்னே கூப்பிடலாம். என் பொண்ணு தாரா இருக்காளே? அவ என் அளவுக்கு இருக்க மாட்டா... ஐ மீன்... அசமந்தம்!

''கெட் டு கெதர் நம்ம வீட்டுல நடந்தா... விருந்து தடபுடலா இருக்கும்.

''அந்த மாதிரி சமயங்கள்லே கூடமாட இருந்து எனக்கு ஹெல்ப்பே பண்ண மாட்டா... லேட்டா எந்திரிப்பா... குளிச்சு டிரஸ் பண்ணிட்டு செல் போன்லே பிரண்ட் கிட்டே அப்படி என்னதான் பேசுவாளோ?

''கொஞ்ச நேரத்துல எதையும் கண்டுக்காம... எனக்கு என்னன்னு காரை எடுத்துக்கிட்டு கிளம்பிப் போயிடுவா...

''வார நாட்களா இருந்தா... சுத்தம்! டாடா காண்பிச்சட்டு காலேஜுக்குப் போயிடுவா...

''வேலைக்காரங்களை வச்சுக்கிட்டு நான் ஒண்டியா எல்லாத்தையும் சமாளிக்கணும். திணறிப் போயிடுவேன் தெரியுமா?

''தாராவை ஒரே பொண்ணாச்சேன்னு செல்லங் கொடுத்து வளர்த்தது தப்பாப் போச்சு! அதான் இப்படிப் பொறுப்பில்லாம வளர்ந்து நிக்கிறாள்னு... உங்க சித்தப்பாவும் நானும் ஃபீல் பண்றதுண்டு. சரி...

''உன்னோட புடவைங்களை இந்த வார்ட் ரோபில அடுக்கி வச்சுக்கோ மீரா'' என்றபடி நகரப் போனவளின் கையைப் பிடித்தாள்.

''இனிமே நீங்க திணறவே தேவையில்லம்மா... நான் தான் இங்க வந்துட்டேனே? சமையல்லே இருந்து சகல காரியங் களிலும் நான் கூட இருந்து உதவறேன் அம்மா'' என்றவளின் குரலில் ஆர்வமும் பாசமும் நிரம்பி வழிந்தன.

கமலா போன பின்பு... பார்வையாலேயே அந்த அறையை வலம் வந்தாள் மீரா.

கட்டில் மெத்தையுடன் ஜன்னல் திரைச் சீலைகளுடன் விசாலமாக இருந்த அறையை பார்த்ததும்... அவளையும் அறியாமல் கண்கள் பனித்தன.

'சித்தி கமலாவிற்கு விசாலமான மனசுதான். ஏழை... அதுவும் அடைக்கலமாக வந்த அனாதைப் பெண்ணை மதித்து பரிவுடன் உபசரிக்கிறாளே?'



மீரா ஒரே ஒரு சூட்கேஸைத் தான் தன்னுடன் எடுத்து வந்திருந்தாள்.

தாத்தாவுடன் வசித்த வீட்டில் பரணை அடைத்திருந்த பழைய பெரிய பித்தளை, அண்டா, பானைகளை இறக்கி மொத்தமாகக் கட்டி... எதிர் வீட்டு பர்வதத்திடம் ஒப்படைத்து விட்டிருந்தாள்.

''இந்தக் காலத்துல பித்தளை சாமான்களை யார் புழங்கி இருக்காங்க?... மத்த வேண்டாத சாமான்களோடு சேர்த்து விலைக்குப் போட்டுடறேன்.

''கேஸ் ஸ்டவ், குக்கர், மிக்ஸி, கிரைண்டர் இத்யாதிகளை மட்டும் மூட்டையாகக் கட்டி எங்க வீட்டு ஸ்டோர் ரூம்லே வச்சுட்டுப் போ...

''பாத்திரங்களை வித்த பணத்தை... நானே நேர்லே கொண்டு வந்து தரேன். அப்பப்போ உன்னை வந்து பார்த்துக்கிறோம் மீரா!

''உன்னோட படிப்பு முடிஞ்சு உனக்கு நல்ல இடம் தகைஞ்சு வந்ததும்... நம்ம வீட்டு ஸ்டோர் ரூம்லே வச்சிருக் கிற பொருட்களை கொண்டு வந்து குடுத்துடறேன்.

''பத்து நாளுக்கு ஒரு வாட்டியாவது போன்ல பேசு மீரா! நானும் போன் பண்றேன். சரியா?''

''சரிம்மா... பெரிய பித்தளை சாமான்களை பாட்டி காலத்துல இருந்து ஆண்டு வந்தாங்க... அவற்றை விற்று வந்த பணத்தை அப்படியே திருநீர் மலைக் கோவில்லே... நடத்தப் படற அன்னதானத் திட்டத்துக்கு... ஒரு நாள் உபயமா கொடுத்துருங்க.

''தாத்தாவோட பர்ஸுல கடைசியா கொஞ்சம் பணம் வச்சிருந்தாரு. அதையும் சேர்த்துக் கொடுத்துருங்க... தாத்தா பெரிய மனக் குறையோட தான் மரணமடைஞ்சிருக்காரு...

''அவரோட ஆத்மா சாந்தி அடையணும். அதான் என்னோட வேண்டுதல் பர்வதம் அம்மா'' கண்கள் உடைப்பெடுத்து

வழிய பாங்க் பாஸ் புக்கை பத்திரமாக தனது ஹேண்ட் பேக்கில் போட்டுக் கொண்டாள்.

"இந்த நிலைமையில இருக்கும் போது கூட... பணத்தைத் தூக்கி அன்னதானத் திட்டத்துக்கு தரச் சொல்றே பாரு, உன்னோட தயாள குணத்துக்கு... எல்லாம் நல்ல படியா நடக்கும். உன்னோட கழுத்துல தாலி ஏறிடுச்சுன்னா... தாத்தாவோட ஆத்மா சாந்தி அடைஞ்சுடும்.

"அவருக்கு அந்த ஒரு குறை தானே? வீட்டை விட்டுப் போறப்போ... கண் கலங்கக் கூடாது. சிரிச்ச முகத்தோட புறப்படணும். சரியா ராசாத்தி?" என்று பர்வதம் கூறியதும் புறங்கையால் கன்னத்தில் வாய்க்கால் போட்டுக் கொண்டு இறங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இதமாகப் புன்னகைத்தாள் மீரா.

யாரிடமும் எந்த உதவியும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற உறுதியான கொள்கை உடையவர் சதாசிவம் தாத்தா.

'நம்மால் முடிந்த வரை பிறருக்கு உதவ வேண்டும். கொடுத்து உதவ கையில் எதுவும் இல்லையென்றாலும்... சரீரத்தாலாவது உழைத்து உதவிட வேண்டும் என்ற அவரது எண்ணம்... மீராவின் ரத்தத்தில் ஊறிப் போயிருந்தது என்று தான் சொல்ல வேண்டும். சித்தப்பா வீட்டில் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தாள்.

சூட்கேஸிலிருந்த புடவைகளை எடுத்து வார்ட் ரோபில் அடுக்கி வைத்தாள். ஹாண்ட் பேக்கிலிருந்த தாத்தாவின் சிறிய புகைப் படத்தை எடுத்து கட்டிலின் தலை மாட்டின் அருகிலிருந்த சிறு டேபிளின் மீது வைத்தாள்.

அடைக்கலம் கிடைத்து விட்டது என்ற சிறு நிம்மதி மனதிற்குள் முளை விட... தன்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்துடன் மாடியிலிருந்து இறங்கினாள்.



கூடிய விரைவில் அந்தச் சிறு நிம்மதியும் மாயமாய் மறைந்து... சித்தப்பா வீட்டில் சித்ரவதைப் படப் போகின்றாள், என்பதை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை தான்.



## 6

கோகுல் குட்டி போட்ட பூனையாய் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான்.

மனசாட்சி ரம்பமாய் அறுத்துக் கொண்டிருந்தது.

அந்தக் காலடி ஓசையைக் கேட்டதுமே... அவனது நெஞ்சு இரண்டாகப் பிளந்து விடும் போல் வேகமாய்த் துடித்தது.

அப்பா கங்காதரனின் விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன. "உனக்கே இது நல்லாயிருக்கா கோகுல்? பெத்த தாயை இப்படி சுருண்டு படுக்க வச்சுட்டியே?

"தவமாய் தவமிருந்து உன்னைப் பெத்ததுக்கு... நீ செய்யற கைம்மாறு இது தானா?

"எவ்ளோ கம்பீரமா புத்துணர்ச்சியா வீட்டையும் நிர்வகிச்சுட்டு... காலேஜுக்கும் போயிட்டிருந்த சாந்தாவை... இப்படிப் பேச்சு மூச்சு இல்லாம படுக்க வச்சுட்டியே?

"எவளோ ஒருத்தி உனக்கு துரோகம் பண்ணிட்டு... எவனையோ கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்டாள். அவ பண்ணின துரோகத்தையே மனசுல நெனச்சுக்கிட்டு... பெத்தவங்க நெஞ்சுல நெருப்பள்ளிக் கொட்டிட்டு இருக்கியே?

"உனக்கு இது நியாயமா படுதா கோகுல்? உங்கம்மா இந்தக் குடும்பத்துக்கே அச்சாணி மாதிரி... என்னோட வளர்ச்சிக்கு அவ எவ்ளோ உறுதுணையா இருந்தா தெரியுமா?

"அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா... எ... என்னால தாங்கிக்கவே முடியாதுப்பா... நானும் போய் சேர்ந்துட்டா

உனக்கு ரொம்ப நிம்மதியாப் போயிடும் இல்லையா?'' தழுதழுத்தபடி கேட்ட கங்காதரன், கோல்டு பிரேமிட்ட கண்ணாடியைக் கழற்றி... கண்களை கர்ச்சிப்பால் ஒற்றிக் கொண்டார்.

அவர் கேட்ட ஒவ்வொரு கேள்வியும்... சுருக் சுருக் என்று ஊசி குத்தினாற் போல் மனதைத் தைத்தது.

மெல்லிய குற்ற உணர்வு மனசுக்குள் கோடு இழுத்தது.

அன்று மாலை ஆறரை மணிக்கு மேல் தான் அவன் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியிருந்தான்.

மாடி அறைக்குள் அவன் புகுந்து கொண்டதுமே... அம்மா சாந்தா நுரை பொங்க காபியை ஆற்றி வைத்துக் கொண்டு வந்து விட்டாள்.

''கோகுல்! காபி சாப்பிடுப்பா'' என்று கூறிவிட்டு காபியை உறிஞ்சிக் குடித்த மகனைக் கண் கொட்டாமல் ஏறிட்டாள்.

''கோகுல்! இன்னமும் எத்தனை நாளைக்குத் தான்... நீ இப்படி விரக்தியா நடமாடப் போறே?

''உன்னை உதறிட்டுப் போனவளையே... நீ இன்னும் நெனச்சுட்டு உன் வாழ்க்கையை வீணடிச்சுட்டு இருக்கிறியேப்பா?

''அவ உனக்கு டாடா காட்டிட்டுப் போயி... ஆறேழு மாசங்களாச்சு. இன்னமும் வேதனையில, அதிர்ச்சியில இருந்து மீள முடியாம இருக்கியே?

''உன்னை நெனச்சு நானும் அப்பாவும் தினமும் வேதனையில வெந்துட்டிருக்கோம்னு தெரிஞ்சும்... நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறது நியாயமாப்பா?

''அந்த சஞ்சனா முன்னாடி நீ வாழ்ந்து காட்ட வேணாமா? உன் குணத்துக்கு ஏத்தவளா... பொறுப்பானவளா பார்த்து நாங்க கட்டி வைக்கிறோம்.



''இந்த வம்சம் விளங்க வேணாமா கோகுல்? உன்னோட ஜாதகத்தைப் பார்த்தோம். இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே உனக்குக் கல்யாணத்தை முடிச்சிடணுமாம்...

''இல்லேன்னா... ஏழெட்டு வருஷங்களுக்கு விவாக பிராப்தம் கிட்டவே கிட்டாதாம்...

''கேட்டதும் எங்களுக்கு பகீர்னு ஆயிடுச்சு கோகுல்! அத்தனை வருஷங்களுக்கு அப்புறம் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க... நாங்க உயிரோட இருக்கிறோமா? இல்லையோ? யார் கண்டா?

''என் மேல உனக்கு அளவு கடந்த பாசம் இருந்ததுன்னா... 'சம்மதம்'னு ஒரு வார்த்தை சொல்லுடா கண்ணா!''

வாத்சல்யத்துடன் அவனது கரங்களைப் பற்றிக் கொண்டாள் சாந்தா.

துசுக்கென்று ஆத்திரம் மூக்கில் ஏறி உட்கார... எரிச்சலுடன் கைகளை உருவிக் கொண்டான் கோகுல்.

''ஏம்மா இப்படி தினமும் உயிரை வாங்கிட்டிருக்கீங்க? என்னை நிம்மதியா இருக்க விட மாட்டீங்களா?

''எனக்கு என்னம்மா குறைச்சல்? அழகு இல்லையா? அறிவு இல்லையா? திறமை இல்லையா? வசதி இல்லையா?

''அந்த சஞ்சனாவை நெனச்சாலே... உடம்பெல்லாம் ஆசிட் பட்டாற்போல் திகுதிகுன்னு அவமானத்தால எரியுதும்மா...

''நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருந்தவனை... அவ தான் வலிய வந்து காதலிச்சா... அத்தனையையும் மறந்துட்டு உதறிட்டுப் போயிட்டாளே?

''இன்னமும் அவ நெனப்புல இருந்து என்னால மீளவே முடியலைம்மா... அவ கூடப் பழகினது... அவ துரோகம் பண்ணிட்டுப் போனது... அவ கொட்டின வார்த்தைகள்... எல்லாமே என்னை வாட்டுதும்மா...

''ஆம்பிளை நான்... ஆற்றாமை தாளாம தவிச்சுட்டிருக்கேன். ஒரு பொண்ணால எப்படிம்மா? இப்படி நடந்துக்க முடிஞ்சது? 'உங்களை விட பெட்டர் சாய்ஸ்'னு... என்கிட்டேயே சொன்னாளே?

''புண்பட்ட மனசுல இன்னமும் ரணம் ஆறவே இல்லை... என்னை விட்டுருங்க... எதுக்கும் கம்பெல் பண்ணாதீங்க...

''எனக்கு 'பெண்' என்கிற வார்த்தையைக் கேட்டாலே... வெறுப்பா வருதும்மா...

''எனக்கு இப்ப மட்டுமில்ல... எப்பவுமே கல்யாணமே வேணாம்... திட்ட வட்டமா உறுதியா இறுதியா நான் சொல்றேன்... நல்லா கேட்டுக்கோங்க அம்மா! இனி ஒரு முறை என் கிட்ட வந்து இது விஷயமா பேசினீங்கன்னா... அப்புறம் என்னை நீங்க பார்க்கவே முடியாது.

''எங்கேயாவது கண் காணாத தேசத்துக்கு நான் போயிடுவேன். இந்த ஜென்மத்துக்கும் யார் கண்ணிலும் படவே மாட்டேன். தெரிஞ்சுக்கோங்க...''

படபடவென்று ஊசிப் பட்டாசாய் பொரிந்து தள்ளி விட்டு பால்கனிக் கதவைத் திறந்து தோட்டத்தை வெறித்தான்.

கோபமும் ஆத்திரமும் போட்டி போட்டுக் கொண்டு மண்டைக்குள் மரங்கொத்திப் பறவைகளாய் கொத்தின.

முதுகு காட்டி நின்ற மகனைப் பரிதாபமாய் ஏறிட்டாள் சாந்தா.

'என் வம்சம் தழைக்கவே தழைக்காதா?

'கோகுல் வாழ்நாள் முழுவதும் தனி மரமாகவே நிற்கப் போகிறானா? தவமிருந்து பெற்ற ஒரே ஆண் வாரிசு கோகுல்.

'அவனை நான் மாலையும் கழுத்துமாக கண் குளிரப் பார்க்கவே முடியாதா?

'கல்யாணப் பேச்சை எடுத்தாலே... ஊரை விட்டே ஓடி விடுவேன் என்கிறானே?



'சஞ்சனா போனில் கடைசியாகப் பேசியதும்... கீழே இறங்கி வந்து எப்படி அழுது புலம்பினான்?

'ஏண்டா உயிரோட இருக்கோம்னு இருக்கும்மா... பேசாம தூக்க மாத்திரையைச் சாப்பிட்டு கண்ணை மூடிடலாம்னு இருக்கு அப்பா!' என்று விரக்தியின் விளிம்பில் நின்று பேசிய மகனை... சமாதானப்படுத்தி ஆறுதல் கூறித் தேற்றி... அவனை சகஜ நிலைக்குக் கொண்டு வர பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்ததே?

'இப்போது தற்கொலை எண்ணம் கடவுள் புண்ணியத்தில் தலை தூக்கவில்லை.

'அதற்கு பதில் ஊரை விட்டே ஓடி விடலாம் என்ற எண்ணம் ஜனித்து விட்டதே?

'அவன் கண் காணாத தேசத்திற்குச் சென்று விட்டால்... அப்புறம் எங்கள் கதி என்னவாகும்?'

சாந்தாவுக்கு மேனி பதறியது. பெற்ற பாசத்தில் கண்கள் குளமாக... மவுனமாக வெளியேறி நடந்தாள். மாடியை விட்டு இறங்கினாள்.

கை, கால்கள் உதறலெடுத்தன. கடைசி நான்கு படிக்கட்டுகள் இருக்கும்போது... தலை கிர்ரென்று சுற்றியது.

தடாலென்று மயங்கி விழுந்தாள். படிக்கட்டின் கூர் முனையில் வேகமாய் மோதிக் கொண்டதில்... நெற்றியோரம் பெரிய நெல்லிக்காய் அளவில் வீங்கிக் கொண்டது.

வீடு அமளி துமளிப் பட்டது.

கோகுலுக்கு பயத்தில் அடி வயிறு சுருண்டு கொண்டது.

சதா தொண தொணக்கிறாள் என்று அம்மாவின் மீது எரிந்து விழுந்தானே தவிர... அவள் உருண்டு விழுந்து பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறாள் என்றதும்... பாசத்தில் பரிதவித்துத் தான் போனான்.

குடும்ப மருத்துவர் மின்னலாய் விரைந்து வந்து சாந்தாவை ஆராய்ந்து விட்டு... பி.பி. எக்கச்சக்கமாய் எகிறிப்

போய் விட்டதாகக் கூறியதும்... கோகுல் கிலியில் ஆடிப் போய் விட்டான்.

இன்ஜெக்ஷன் போட்டு அருகிலிருந்து கவனிக்க ஒரு நர்ஸையும் அமர்த்தினார் டாக்டர்.

"பயங்கரமான மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்காங்க... நான்கு மணி நேரத்துக்கு ஒரு தடவை இன்ஜெக்ஷன் போட்டாகணும்.

"ட்ரிப்ஸ் வேற போட்டிருக்கேன். யாரும் கிட்டப் போய் தொந்தரவு பண்ணாதீங்க... எமர்ஜென்ஸின்னா கூப்பிடுங்க... ஓடி வரேன். நாளைக்கு நார்மலாகிடுவாங்கன்னு நம்பு வோம்."

கங்காதரனின் தோளைத் தட்டி ஆறுதல் கூறி விட்டு நடந்து விட்டார் மருத்துவர்.

குற்ற உணர்வு புழுவாய் குடைய... தன் அறைக்குள் வந்து அடைந்து கொண்டான் கோகுல்.

சற்று நேரத்தில் அப்பா மாடியேறி வந்து 'உனக்கே இது நியாயமாப் படுகிறதா?' என்ற ரீதியில் கேள்விகள் கேட்டு தழுதழுத்ததும்... கையைப் பிசைந்து கொண்டு நின்றான்.

"சீக்கிரமா நாங்க ரெண்டு பேரும் போய் சேர்ந்துடறோம். யாரும் உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டாங்க கோகுல். நீ நிம்மதியா உன் பாட்டுக்கு இருக்கலாம்" குரலுடைந்து பிசிறு தட்ட கிசுகிசுப்பாய் கங்காதரன் கூறியதும்... அவன் தாள மாட்டாமல் தந்தையின் கால்களைப் பற்றிக் கொண்டான்.

"அப்பா! போதும்பா... நானே குற்ற உணர்வுல செத்துட் டிருக்கேன். நீங்க வார்த்தையாலேயே என்னைக் குத்திக் கொல்றீங்களேப்பா?

"ஸாரிப்பா... வெரி ஸாரி! நான் பண்ணினது தப்பு தான். அம்மாவை ரொம்பவே நோகடிச்சுட்டேன்.



"இனிமே நான் யாரையும் நோகடிக்க மாட்டேன். உ... உங்க இஷ்டப்படி நடந்துக்கிறேன்பா..." என்ற மகனின் கேசத்தைப் பாசமாய் கோதி விட்டார் கங்காதரன்.

"கனன்ற வயித்துல பாலை வார்த்தாப்பல இருக்கு. நீ சம்மதிச்சுட்டேல்ல...? இனிமே பாரேன்... எல்லாம் நல்ல படியா நடக்கும்பா... அந்த சஞ்சனாவோட நினைப்பை வேரோட பிடுங்கி எறி... இந்த உலகத்துல நல்ல பெண்கள் நிறைய பேரு இருக்காங்கப்பா."

ஆனால்... கோகுலுக்கு மீண்டும் மிகப் பெரிய அதிர்ச்சி ஒன்று... ஒரு பெண் வடிவில் வரக் காத்திருந்தது.



## 7

**கா**லச் சக்கரம் படு வேகமாய் சுழன்று கொண்டிருந்தது. இப்போதெல்லாம் மீரா வுக்கு நிற்கக் கூட நேரம் இருப்பதில்லை.

காலையில் எழுந்து குளித்து விட்டு, தோட்டத்துப் பூக்களை பறித்து சுவாமி படங்களுக்குப் போட்டு வணங்கி விட்டு சமையலறைக்குள் புகுந்து விட்டால்... டிபன் வேலையை முடித்து விட்டுத்தான் வெளியே வருவாள்.

இவள் இங்கு வந்த ஒரு சில நாட்களிலேயே... சமையல்காரர் தனது மூட்டை முடிச்சுகளுடன் கிராமத்திற்குச் சென்று வருவதாகக் கூறி விட்டுப் போனவர் தான்!

ஆள் திரும்பவும் இந்த திசைப் பக்கம் தலை காட்டவே இல்லை.

மீரா உரிமையாய் கரண்டியைத் தூக்கிக் கொண்டு களத்தில் இறங்கி விட்டாள்.

டிபன் வேலை முடிந்து விட்டால்... வீட்டு வேலைகள் அடுக்கடுக்காய் அவளுக்காகக் காத்து நின்றன.

ஏற்கனவே இருந்த வேலைக்காரி, அவ்வப்போது மட்டம் போட்டு விடுகிறாள்... கமலா ஞாபக மறதியாய் பாத்ரூமில்

கழற்றி வைத்த மூக்குத்தியை அவள் திருடிக் கொண்டு விட்டாள்... என்று அப்படி இப்படி சாக்கு போக்குகள் சொல்லி... அந்த வேலைக்காரியை நிறுத்தி விட்டிருந்தனர்.

பம்பரமாய் சுழன்று பெருக்கி, துடைத்து, கழுவி நிமிர்வதற்குள் மதிய சாப்பாடு தயாரித்தாக வேண்டும்.

அனைவருக்கும் பரிமாறி முடித்து இரண்டு வாய் சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டு... பாத்திரங்களை ஒழித்துப் போட்டு கழுவிக் கவிழ்த்து விட்டு... தனது பாடப் புத்தகங் களை எடுத்து வைத்துக் கொண்டு... அதில் கவனம் செலுத்துவாள்.

மணி மாலை நான்காகி விடும். கமலாவிற்கு காபி, டிபன் கொடுத்து விட்டு... கம்ப்யூட்டர் கிளாஸுக்குச் சென்று விடுவாள்.

கிளாஸை முடித்துக் கொண்டு விழுந்தடித்து ஓடி வந்து இரவு டிபன் வேலையை கவனித்தாக வேண்டும்.

இந்த வீட்டு வேலைகள், சமையல் வேலை... அவளுக் குப் புதிய விஷயங்களல்ல... தாத்தாவுடன் அவள் வாழ்ந்த வீட்டில் அனைத்தையும் சுலபமாகச் செய்து பழக்கப்பட்டவள் தான்.

ஆனால் அவளை மெல்ல மெல்ல தன் வீட்டு வேலைக் காரியாக்கிக் கொண்ட திருமதி. கமலாவின் சாமர்த்தியத்தை எண்ணி அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் அவளை, ''கொஞ்சம் அந்த கியாஸ் அடுப்பைப் பாரேன் மீரா'' என்றாள் கொஞ்சலாக...

''நாளைக்கு நம்ம வீட்டுல கிளப் மெம்பர்ஸ் எல்லாம் வர்றாங்க. கெட் டு கெதர் விருந்துக்கு ஏற்பாடு பண்ணணும். இந்த சமையல்காரன் கழுத்தை அறுத்துட்டானே மீரா?

''ஹோட்டல்லே இருந்து அயிட்டம்ஸ் வாங்கி வச்சா... அது நல்லாவா இருக்கும் மீரா? என்ன பண்றதுன்னு தெரியாம



ஒரே குழப்பமா இருக்குடா'' கவலை தோய்ந்த குரலில், முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு பேசுவதில்... கமலா கில்லாடி தான்!

''நானொருத்தி இங்க இருக்கும்போது நீங்க ஏன் கவலைப் படறீங்கம்மா? மெனு என்னன்னு சொல்லுங்க... தேவைப் பட்ட சாமான்களைத் தயாரா எடுத்து வச்சுக்கிட்டு காய்களை நறுக்கி அரைக்க வேண்டிய மசாலா வகையறாக்களை வறுத்து அரைச்சு... பிரிஜ்லே முன் கூட்டியே ரெடி பண்ணி வச்சுட்டா... விருந்து சமையலை மாயமாய் ரெடி பண் ணிடலாம்.

''இது ஒரு பெரிய விஷயமே இல்லம்மா... ஏக காலத்துல முப்பது பேர் மட்டுமல்ல... அம்பது பேர் வந்தாலும் என்னால சமாளிக்க முடியும். கவலைப் படாதீங்கம்மா... நானிருக் கேன்.''

''மீரா! ரொம்பவே சந்தோஷமா இருக்கும்மா... நீ இங்கே வந்தது... என்னோட அதிர்ஷ்டம்னு தான் சொல்லணும்.

''எங்க தாராவோட வயசு தான் உனக்கு! ஆனா... இந்தச் சின்ன வயசிலேயே எவ்ளோ பொறுப்புணர்ச்சியோட பாந்தமா நடந்துக்கிறே... ரொம்பவே சந்தோஷமா இருக்கு மீரா'' என்று உச்சி குளிரப் பேசியே... விருந்துக்கு சமைக்கும் மிகப் பெரிய வேலையையும் தலையில் கட்டி விட்டிருந்தாள் கமலா.

மீராவிற்கே தெரியாமல் படிப்படியாக ஒட்டு மொத்த வேலைகளும் அவள் மீது பொதிப் பொதியாக சுமத்தப்பட் டிருந்தன.

''நீ செய்யறது நல்லாவே இல்ல கமலா...! பாவம், அந்தப் பொண்ணு... நாம்ப தான் கெஞ்சிக் கூத்தாடி அவளை இந்த வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தோம்.

''வலியப் போய் கூட்டிட்டு வந்த பொண்ணை... நாம்ப நல்ல படியா வச்சுக்க வேணாமா? பார்க்கிறவங்க என்ன நெனப்பாங்க?

''நம்ம தாரா மாதிரி அவளும் படிக்கிற பொண்ணு... அவளைப் போய் இப்படி சக்கையாப் பிழியறியே? சமையல்காரன் வேலைக்காரின்னு ஒவ்வொருத்தரையும் நிறுத்திட்டு... எல்லாப் பொறுப்புகளையும் தலையில கட்டிட்டியே?'' ஒரு நாள் சாப்பாட்டு மேஜையருகே அமர்ந்த விநாயகமூர்த்தி, மனைவியைக் கடிந்து கொண்டார்.

''உஸ்... சும்மா இருங்க. இத்தோட எத்தனை சமையல் ஆள் வச்சிட்டேன்? இவளைப் போல் சாமர்த்தியமா, அழகா யாரு சமையல் செய்றாங்க?

''ஏக காலத்துல அம்பது பேர் வந்தாலும் சுவையும் மணமுமா காரசாரமா நாக்கைச் சுழற்றாப்பல சமைச்சு அசத்திடறாளே? வாய்க்கு ருசியா இருக்குன்னு உருளைக் கிழங்கு கட்லெட்டையும் பப்பாளி அல்வாவையும் நேத்தைக்கு ருசிச்சு ரசிச்சுச் சாப்பிட்டீங்களே... மறந்துட்டீங்களா?'' மனைவி மிரட்டினாள் அடிக்குரலில்.

மேஜை மீது உணவு பரிமாற வந்த மீராவின் செவிகளில் அந்த வார்த்தைகள் தெளிவாக விழுந்தன.

''சாப்பாடு வேளா வேளைக்கு ஒழுங்காக ருசியாக வேண்டுமானால்... மரியாதையாக வாயை மூடிக் கொள் ளுங்கள். இந்த அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுங்கள்'' என்று கமலா தன் கணவரை மிரட்டினாள்.

சட்டென சமையலறைக்குள் சென்று விட்டு... அப்போது தான் வருபவள் போல மீரா சாப்பாட்டு மேஜையருகே சென்றாள்.

''இன்னிக்கு 'பாகற்காய் பிட்லை' ரொம்பப் பிரமாதம் மீரா. அபாரமா சமைச்ச உன் கைக்கு தங்கக் காப்பு தான் போட ணும்'' குற்ற உணர்வை மறைத்துக் கொண்டு பாராட்டுப் பத்திரம் வாசித்தார் விநாயக மூர்த்தி.

கீழுதட்டை அழுந்தக் கடித்து பொங்கி வந்த அழு கையைக் கட்டுப்படுத்தினாள் மீரா.



தாத்தாவுடன் வாழ்ந்த நாட்களை ஏக்கத்துடன் எண்ணிப் பார்த்தாள்.

அந்த வீட்டில் வசதிக்குக் குறைவிருந்தாலும் வீட்டு எஜமானியாகச் சுதந்திரமாய் வளைய வந்தாளே?

ஆனால் இங்கு... சம்பளமில்லாத கௌரவ வேலைக் காரியாய், கொத்தடிமையாய் அல்லவா வாழ்கிறாள்?

'அங்கு தனிமையில் இருந்தால்... என் பெண்மைக்குப் பங்கம் வந்து விடும் என்று பயந்து தானே இங்கு வந்தேன்?

'இங்கு...? வீட்டு வேலை செய்ய வரும் வேலைக்காரி கூட... மளமளவென்று வேலைகளை முடித்துவிட்டு வெளியேறி விடுவாள்.

'ஆனால் நான்...? வீட்டோடு தங்கி இருப்பதால்... காலை நான்கு மணியிலிருந்து இரவு பதினோரு மணி வரை ஓய்வு, ஒழிச்சல் இல்லாமல் செக்கு மாடாய் உழைக்கிறேனே தாத்தா?

'ஆரம்பத்தில்... நாக்கில் தேன் தடவிக் கொள்ளாத குறை யாக இனிக்க இனிக்கப் பேசி, அன்பாய் நடந்து கொண்ட சித்தி கமலா... நாளாக ஆக... எரிந்து விழ ஆரம்பித்து விட்டாளே?

'காய்ச்சல் தலைவலி என்று வந்தால்... நிம்மதியாக சுருண்டு படுத்துக் கொள்ளக்கூட எனக்கு சுதந்திரம் இல்லையே தாத்தா?

'அடைக்கலமாய் அண்டி வாழ வந்த அனாதைக்கு... நம்மை விட்டால் வேறு கதி இல்லை' என்று இளக்காரமாய் பார்க்கிறாளே? தாரா?

'அவளது ஆடைகளைத் துவைத்துக் காய வைத்து அயர்ன் செய்து மடித்து வைக்கிறேன். அவளுக்குப் பிடித்த டிபன் வகையறாக்களை செய்து தருகிறேன்.

'ஒரு நாள் கூட இதமாய் என்னைப் பார்த்து முறுவலித்தது கூட இல்லையே தாத்தா? இங்கு தன்மானத்தை இழந்து விட்டேனே?

'உழைத்து ஓடாய் தேய்ந்து ஒரு கொத்தடிமையாய் இந்த வீட்டில் வாழ்வதை விட.... அனாதையாய் தனிமையிலேயே வாழ்ந்திருக்கலாம் போலிருக்கிறதே?

'படிப்பு முடியும் வரை பல்லைக் கடித்துக் கொண்டு இங்கேயே இருக்க வேண்டியது தான்!

'ஒரு டிகிரி முடித்து விட்டால் எங்காவது வேலை தேடிக் கொண்டு... அதன் பின் ஏதாவது லேடீஸ் ஹாஸ்டலில் தங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

'பாவம் சித்தப்பா! மனைவிக்கு அடங்கியே பழக்கப்பட்டு விட்டார்.

'என் நிலைமையைப் பார்த்து மிகவும் பரிதாபப்படுகிறார்.

'குற்ற உணர்வில் என்னை ஏறிட்டுப் பார்ப்பதைக் கூட தவிர்க்கிறார்.

'படிப்பை முடிப்பதற்கு முன்பே... வீட்டை விட்டுப் போய் ஹாஸ்டலில் தங்கிக் கொள்வதாக நான் கூறினால்... மிகவும் வேதனைப்படுவார்.

'என்னால் அவர் மனம் ஏன் நோக வேண்டும் தாத்தா?

'படிப்பு முடித்து வேலை கிடைக்கும் வரை... இந்த அவலத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான் தாத்தா!'

வழக்கம் போல் தாத்தாவின் புகைப்படத்தைப் பார்த்து மானசீகமாகப் பேசி... தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாள் மீரா.

இங்கு அவள் வந்த இரண்டே வாரங்களில்... மாடியிலிருந்த கெஸ்ட் ரூமை விட்டு வெளியேறி... சமையலறைக்குப் பக்கத்தில் இருந்த ஸ்டோர் ரூமில் அடைக்கலமாகி விட்டிருந்தாள்.

"ஊர்லே இருந்து கெஸ்ட் வர்றாங்க மீரா. அவங்க வந்து தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணி வச்சுடணுமே?" என்று கமலா இழுத்த இழுப்பிலேயே புரிந்து கொண்டாள்.



"எ... என்னோட உடைமைகளை அஞ்சே நிமிஷத்துல எடுத்துடறேன். நான் எங்க தங்கிக்கணும்னு சொல்லுங்கம்மா..."

"கிச்சனுக்குப் பக்கத்துல தங்கிக்கோயேன். ஸ்டோர் ரூம் விசாலமாகத் தானிருக்கு. எத்தனை வாட்டி மாடியேறி ஏறி இறங்குவே பாவம்?

"கிச்சனுக்குப் பக்கத்துலேயே இருந்தா... உனக்கும் இன்னும் வசதியா இருக்கும் இல்லையா?

"சரியா மீரா? ஸ்டோர் ரூமில ஜன்னல்கள் கிடையாது. காற்றோட்டம் இல்லாம ஒரே புழுக்கமா இருக்கும். அதனால அங்க ஒரு பேனை மாட்டச் சொல்லியிருக்கேன். சரி தானே?" அன்பொழுகப் பேசியபடி அவளது தாடையை தொட்டு வருடியதும்... பலமாகத் தலையாட்டி விட்டாள் மீரா.

ஸ்டோர் ரூமில் மாட்டப்பட்ட ஃபேனை... சித்தி கமலா பழைய இரும்பு சாமான்கள் விற்கும் கடையில் மலிவு விலையில் வாங்கி விட்டிருந்தாள் போலும்.

ஹைதர் காலத்தில் உருவாக்கப்பட்டது போல் அரதப் பழசான கோலத்தில் அந்த பேன் 'கடக்... கடக்' என்று ஒலி எழுப்பியபடி இறக்கைகளைச் சுழற்றியதே தவிர... அதிலிருந்து மருந்துக்குக் கூட காற்று வந்ததே இல்லை.

தரையில் பாயை விரித்து ஓரமாய் முடங்கிக் கொள்ளும் மீராவுக்கு அறைப் புழுக்கத்தில் தொப்பலாக வியர்த்துக் கொட்டும்.

தாத்தாவுடன் வாழ்ந்த வீடு அரதப் பழசு தான்! ஆனால் முற்றம், தாழ்வாரம் என்று இருப்பதால்... தோட்டத்தின் வழியே வரும் காற்று... வீட்டை அள்ளிக் கொண்டு போகும்.

இந்த அறைப் புழுக்கம் போதாதென்று... எலிகள், சுண்டெலிகளின் தொல்லை வேறு!

வியர்த்து வழிய அவளையும் மீறி தூக்கம் இழுத்துக் கொண்டு போகும்போது... பொத்தென்று அவளது மடி

யிலோ, முதுகிலோ எலி குதித்து நர்த்தனமாடி விட்டு ஓடுவது வழக்கம்!

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு... பயத்தில் மேல் மூச்சு வாங்க எழுந்து அமர்ந்து கொள்வாள் மீரா.


வியர்வையோடு சேர்ந்து கண்ணீரும் சங்கமிக்க... புடவைத் தலைப்பால் கை ஓயும் வரை விசிறி விட்டுக் கொண்டு... தன்னை மீறிய களைப்பால்... சிறிது நேரம் கண் அயர்வாள்.

அதிகாலை நான்கு மணிக்கே 'டாண்' என்று எழுந்து பம்பரமாய் சுழல ஆரம்பித்து விடுவாள்.

அதீத உழைப்பு, தூக்கமின்மை, கவலை, சோகம்... எல்லாமாகச் சேர்ந்து அவளை மிகவும் உருக்கி விட்டிருந்தன.

அனாதை என்கிற சோகம், தனிமை... இவற்றைப் பற்றிய கவலை தான்... இது நாள் வரை அவளுக்கு இருந்து வந்தது.

ஆனால்... வெள்ளைக் காகிதமாய் இருந்த அவளது பால் மனதில்... காதல் அதிரடியாய் புகுந்து ஓராயிரம் கவிதைகளை ஓசையின்றி எழுதி விட்டுச் செல்லும் என்று அவள் கற்பனை கூடச் செய்ததில்லை என்பது நிஜம்!



## 8

மீராவுக்கு கால்கள் இர்ண்டும் துணியாய் துவண்டன. காய்ச்சல் கொதித்துக் கொண்டிருந்ததால்... மூச்சுக் காற்று அனலாய் வெளிப்பட்டது.

முதுகுத் தண்டு வடம் இரண்டாய் விண்டு விடும் போல் விண் விண் என்று வலி தெறித்தது.

பகல் நேரத்தில்... வேலைகளுக்கிடையே ஓய்வு எடுக்க சிறிது நேரம் அவகாசம் கிடைத்தால்... அவள் பின்புறத் தோட்டத்திற்குச் சென்று வேப்ப மரத்தடியின் அருகிலிருந்த துணி துவைக்கும் கல்லின் மீது அமர்ந்து கொள்வாள்.



குகை போன்று இருக்கும் ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்த கணமே அவளுக்கு தெப்பலாய் வியர்த்துக் கொட்டி விடும்.

இரவில் வேர்த்து வேர்த்து தலையில் அவளுக்கு நீர் கோர்த்துக் கொண்டு... தலைவலி வேறு வந்து மண்டையைப் பிளந்தது.

வேலைப்பளு, உடல் அசதி காரணமாகக் காய்ச்சல் வேறு வந்து விட்டிருந்தது.

'அக்கடா என்று நிம்மதியாகப் படுத்து ஓய்வு எடு' என்று அவளது சோர்ந்த உடல் கெஞ்சத்தான் செய்தது.

அவளுக்கு உடம்புக்கு முடியவில்லை என்றாலே... கமலா முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

கடுகடுவென்று முகத்தை வைத்துக் கொண்டு... ஜாடைமாடையாக இவளைக் குத்திப் பேசி வறுத்தெடுத்து விடுவாள்.

அதைக் கேட்கும் போது... மீராவுக்கு மனமும் ரணப்பட்டுப் போய்விடும் என்பதால்... உடம்புக்கு எந்த உபாதை வந்தாலும்... அதை அவள் வெளிப்படுத்தவே மாட்டாள்.

பற்களைக் கடித்துக் கொண்டு பலாத்காரமாகத் தெம்பை வரவழைத்துக் கொண்டு... அன்றாட அலுவல்களை நிதானமாகச் செய்து முடித்து விடுவாள்.

இன்று கூட மதியத்தில்... அனைவரும் சாப்பிட்டு முடித்த பின்பு... பாத்திரங்களை அள்ளிப் போட்டுத் தேய்த்து விட்டு டைனிங் டேபிளைத் துடைத்துச் சுத்தப்படுத்திவிட்டு அடுக்களையை விட்டு நகர எத்தனித்த வேளையில்... காலியான வயிறு உறுமலாய் 'எனக்கு?' என்று கேள்வி கேட்ட போதுதான்... அதுவரை வயிற்றைக் காயப் போட்ட விஷயம் மீராவுக்கு ஞாபகத்திற்கு வந்தது.

அதீத காய்ச்சலில் வாய் கசந்து தொலைத்ததில்... அவளுக்கு சாப்பிடவே பிடிக்கவில்லை.

வெறும் வயிற்றில் மாத்திரை போட்டுக் கொள்ளக் கூடாதே? என்ற எண்ணத்தில் மீந்து போயிருந்த ஒரு டம்ளர் மிளகு ரசத்தைக் குடித்து விட்டு மாத்திரையைப் போட்டுக் கொண்டாள்.

அவளையும் மீறிய அசதியில் கண்கள் சொருகிக் கொண்டு வர... ஸ்டோர் ரூமுக்குச் செல்லப் பிடிக்காமல் தோட்டத் திற்கு வந்து அமர்ந்து விட்டிருந்தாள்.

சிலு சிலுவென்று வீசிய வேப்ப மரக் காற்று... அவளது மேனியை இதமாய் தொட்டு வருடியது.

இமைகள் இதமாய் மூடிக் கொள்ள... பத்து நிமிடங்கள் முழுதாய் கரைந்த நேரத்தில்... கமலா அவளைத் தேடிக் கொண்டு தோட்டத்திற்கே வந்து விட்டாள்.

"மீரா! இங்க உட்கார்ந்திருக்கியா? உன்னை எங்கெல்லாம் தேடறது? ஒரு சந்தோஷமான சமாச்சாரம்!

"நம்ம தாராவை இன்னிக்கு பொண்ணு பார்க்க வர்றாங்க... சாயந்தரம் நாலரைக்கு வர்றதா தகவல் சொல்லி இருக் காங்க...

"டிபன் பிரமாதமா இருந்தாகணும் மீரா! முந்திரி பக் கோடா, உருளைக்கிழங்கு பஜ்ஜி, பயத்தம் பருப்பு அல்வா, ரவா லட்டு போதும் இல்லையா? நாலே நாலு அயிட்டம்ஸ் தான்!

"அவங்க வர்றதுக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கே? வா... நானும் உனக்குக் கூட மாட ஒத்தாசை செய்யறேன். சரியா?"

சித்தி கமலா கொடுத்த மெனுவைக் கேட்கும்போதே அவளுக்கு கிர்ரென்று தலை சுற்றுவது போலிருந்தது.

'நான்கே நான்கு அயிட்டங்கள் தான் என்று எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டாள் கமலா?

'ஆனால் அவற்றைப் பதமாகப் பக்குவமாக சுவை குன் றாமல் மணக்க மணக்கத் தயாரிப்பதற்கு மீரா எத்தனை பாடுபட வேண்டும்?



'அதுவும் உடம்புக்கு முடியாத தருணத்தில்... எண்ணெய் சட்டியின் அருகிலேயே நின்று வேகாமல் வெந்து சாக வேண்டுமே.'

நீண்ட பெருமூச்செறிந்தபடி... வாரப்படாமல் கலைந்து சிக்கலாகிக் கிடந்த நீண்ட கூந்தலை அள்ளிக் கொண்டை யிட்டுக் கொண்டாள்.

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரப்போறாங்க... உங் களுக்கு கவனிக்க ஆயிரம் வேலைங்க இருக்கும். டிபன் வேலையை என்கிட்டே விட்டுருங்கம்மா... நான் ஜமாய்ச் சுடறேன்" வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் கமலாவை ஏறிட்டாள் மீரா.

"கரெக்டா சொன்னே மீரா! என்னோட நெருங்கின சிநேகிதி கள் ரெண்டு பேத்துக்கு போன் பண்ணி வரச் சொல்லணும்.

"தாராவோட புது பட்டுப் புடவைக்கு மேட்சிங்கா நகை களை எடுத்து வச்சுடணும். ஒரு பந்து மல்லிகை பூவுக்கு ஆர்டர் பண்ணணும்.

"நீ டிபன் வேலையை கவனி மீரா!" செல்லமாய் மீராவின் கன்னத்தில் தட்டி விட்டு, குதூகலமாய் நடையை எட்டிப் போட்டாள் கமலா.

டிபன் வேலையை மளமளவென்று முடித்துவிட்டு காபிக்கு டிகாக்ஷன் போட்டுத் தயாராக வைத்து விட்டு... ஈரக் கைகளை முந்தானையால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தபோது... அவசரமாய் கிச்சனுக்குள் புகுந்தாள் கமலா.

"மீரா! பார்த்தா ரொம்பக் களைப்பா தெரியறே... தலை சீவி பொட்டு வச்சுக்கோ... இந்தப் புடவையை களைஞ்சுட்டு வேற மாத்திக்கோ...

'மைசூர் சில்க், காட்டன் சில்க்னு பார்க்க பளிச்சுனு எதை யாவது கட்டிக்கோ... தாராவுக்கு வச்சது போக... மீதம் ஒரு முழம் பூ இருக்கு பாரு... ஃப்ரிஜ்லே வச்சிருக்கேன். எடுத்துத் தலைக்கு வச்சுக்கோ...

''பகோடா வாசனையும் அல்வா வாசனையும் ஆளைத் தூக்குது போ! வந்தவங்க உன் கை மணத்தைப் பார்த்துட்டு... ஒரு பிடி பிடிக்கப் போறாங்க மீரா!''

சக்கையாய் பிழிந்தெடுத்து விட்டு தலையில் பெரிய ஐஸ் கட்டியை வைப்பதில் கமலா கை தேர்ந்தவள் என்பதை மீரா நன்கறிந்திருந்தாள். இரண்டு மாதங்களுக்கு முன்பு...

தனது பழைய புடவைகளில் ஏழெட்டை பொறுக்கி யெடுத்து தாராளமாக மீராவுக்குத் தந்து விட்டிருந்தாள் கமலா.

''இதுலே மைசூர் சில்க், கிரேப் சில்க், காட்டன் சில்க். புடவைங்க இருக்கு பாரு! நம்ம வீட்டுலே விசேஷம் ஏதாச்சும் நடந்தா... ஐ மீன் பார்ட்டி, கெட் டு கெதர் நடக்கிற சமயங் கள்லே... என்னோட பிரண்ட்ஸ் நிறைய பேரு வருவாங்கல்ல?

''அவங்க வர்ற போது நீ இவைகளைத் தான் கட்டிக்கணும். பார்க்க பளிச்சுனு பாந்தமா நடமாடணும். சரியா மீரா?'' என்று ஏற்கனவே உத்தரவிட்டிருந்தாள் கமலா.

'தூரத்து உறவுக்காரப் பெண் மீரா அனாதையாகி விட்ட பின்பு... அவளுக்கு அடைக்கலம் தருவது போல் போக்குக் காட்டி... அவளைத் தன் வீட்டு வேலைக்காரியாகவே ஆக்கி விட்டாள் கமலா!

'அந்தப் பெண்ணை பார்க்கவே ரொம்பப் பாவமா இருக்கு. கொத்தடிமையை விட ரொம்பவே கொடுமைக்கு ஆளாகி யிருக்கு பாவம்' என்று கிளப்பில் உள்ள உறுப்பினர்கள்... கமலாவின் தலையை உருட்டத் தொடங்கிவிட்ட விவரம்... அவளது காதுக்கு எட்டி விட்டதால்... நல்ல சேலைகளைக் கொடுத்து கட்டச் சொல்லி விட்டாள் என்பது நிஜம்!

கமலா கூறியது போல்... மயில் கழுத்து வண்ண மைசூர் சில்க் புடவையைக் கட்டிக் கொண்டு... துளி மல்லிகைகைப் பூவைக் கிள்ளிக் கூந்தலில் சூடிக் கொண்டாள் மீரா.

அலங்காரம் செய்து கொண்டிருந்த தாராவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன.



பெண் பார்க்கும் படலத்திற்கு வேண்டா வெறுப்பாக தயாராகிக் கொண்டிருப்பவளைப் போன்ற முக பாவனை!

''பார்த்தியா மீரா! படிச்சு முடிச்சு ரிசல்ட் வந்த பின்னாடி மேரேஜுக்கு ஏற்பாடு பண்ணலாமே? இப்பவே என்ன அவசரம் வந்ததாம்? அம்மா என்னத்துக்கு அவசரமா இந்த ஏற்பாட்டைப் பண்றாங்க?'' தாரா ஆதங்கப்பட்டாள்.

''நல்ல வரன் தகைஞ்சிருக்கும். நல்ல இடம் கை விட்டுப் போகக் கூடாதுன்னு... உடனடியா பெண் பார்க்க வரச் சொல்லி இருப்பாங்க...

''பெரியவங்க ஏதாச்சும் பண்ணினா... அது நம்ம நன் மைக்குதான்னு புரிஞ்சுக்கணும் தாரா! அந்தக் கல் வச்ச நெத்திச் சுட்டியை எடேன். நான் வச்சு விடறேன்.''

அதற்கு மேல் தாரா எதுவும் முணுமுணுக்கவில்லை. பொங்கிய பாலில் தெளித்த நீராய் கப்பென்று அடங்கிப் போய்... அலங்காரத்தில் ஆர்வமாய் மூழ்கிப் போனாள்.

பெண் பார்க்கும் படலம் நடந்த தருணத்தில்... மீரா அடுக்களையை விட்டு எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

கமலாவும் அவளை வெளியே அழைக்கவில்லை. 'வந்தவர் களின் கண்களில் மீரா பட்டு விட்டால்...?

'அவர்களுக்கு மீராவை மிகவும் பிடித்துப் போய் விட்டால்...?

'ஒப்பனை, நகை அலங்காரம் ஏதுமின்றியே பூரண நிலவாய் ஜொலிக்கிறாளே? எதற்கு வம்பு?' என்ற பயத்தில்... டிபன் தட்டுக்கள், காபியை ட்ரேயைக் கூட அவளே தான் ஹாலுக்கு எடுத்துக் கொண்டு போனாள்.

''மீரா! சம்பந்தியம்மா உடம்புக்கு முடியாதவங்க போல... எண்ணெய் பலகாரம் ஒத்துக்காதாம். அதனால பஜ்ஜி, பகோடா வேண்டாம்... ஒரு தட்டுல லட்டை மட்டும் எடுத்து வை... கொஞ்சம் லட்டையாவது டேஸ்ட் பண்ணட்டும்.

''வந்தவங்க கை நனைக்காம போகக் கூடாது இல்லியா? அவங்களுக்கும் நம்ம தாராவை ரொம்பவே பிடிச்சுப்

போச்சாம் மீரா!'' கிச்சனுக்குள் நுழைந்த கமலா... சந்தோஷம் பிடிபடாமல் அடிக்குரலில் பேசினாள்.

''ரொம்ப சந்தோஷம் அம்மா! இந்தாங்க... சம்பந்தியம்மாவுக்கு குடுங்க'' என்று தட்டை நீட்டினாள் மீரா.

கமலா அடுக்களையை விட்டு நகர்ந்ததும்... ஆர்வம் தாளாமல் ஜன்னல் வழியே பார்வையை ஓட்டினாள்.

ஹால் சோபாவில் நடு நாயகமாக அமர்ந்திருந்த இளைஞனில் பார்வையைப் பதித்தாள்.

ஆஜானுபாகுவான தோற்றம், உடைத்த கோதுமையின் நிறம், களையான முகம்... அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே மீராவுக்குப் பிடித்துப் போய் விட்டது.

அவனுக்கு இரு மருங்கிலும் அமர்ந்திருந்தவர்கள்... அவனைப் பெற்றவர்கள் போலும்!

அவ்வப்போது அவர்கள் அவனிடம் அடிக்குரலில் கேட்கும் கேள்விகளுக்கு... பவ்யமாய் குனிந்து அடக்கமாய் பாந்தமாய் அவன் பேசிய விதத்தை... மீரா அவளையும் அறியாமல் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'பார்த்தால் நல்ல குடும்பமாகத் தெரிகின்றது. அவரும் பெற்றவர்களுக்கு அடங்கின கண்ணியமான இளைஞராகத் தெரிகிறார்.

'தாரா மிகவும் கொடுத்து வைத்தவள் தான்' எண்ணமிட்டபடியே அடுப்பு மேடைப் பக்கம் நகர்ந்தாள் மீரா.

நெஞ்சில் திடுமென மிகப் பெரிய பாரம் ஏறினாற் போல் இருந்தது.

'ஏன் மனசு கனக்கிறது?' காரணம் புரியாமல் தவித்தாள் மீரா.

'தாராவுக்கு அமையப் போகும் வாழ்க்கையை நினைத்துப் பொறாமைப் படுகிறேனா?

'சேச்சே... சின்ன வயதிலிருந்து நான் யாரையும் பார்த்துப் பொறாமைப் பட்டதில்லையே?



'ஆங்... புரிந்து விட்டது. அந்த இளைஞன்...! அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனை சட்டென்று பிடித்து விட்டதே?

'விழியில் நுழைந்து இதயம் புகுந்து உயிரில் கலந்த உறவாகி விட்டானே...?

'என்னது இது? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படலாமா?' அவன் யார்? பெயர் என்ன? என்று எதுவும் தெரியாது. அதுவும் கூடிய விரைவில் எனது ஒன்று விட்ட சகோதரியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடப் போகிறான்.

'அவனைப் போய் மனம் விரும்புகின்றதே?

'ஊகூம்! இது மிகவும் தவறு!' தன்னைத் தானே கடிந்து கொண்டு மனதை இழுத்துக் கட்டுக்குள் வைத்தாள்.

மறுகணமே... மனம் சண்டிக் குதிரையாய் தாவிக் குதித்து அந்த இளைஞனிடம் போய் நின்றதும்... மீராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.



## 9

அடுத்த மாதமே திருமணதிற்கு நாள் குறித்து விட்டதால்... விநாயக மூர்த்தியும் - கமலாவும் கால்களில் சக்கரத்தை மாட்டிக் கொள்ளாத குறையாகப் பறந்து கொண்டிருந்தார்கள்.

குஷி பிய்த்துக் கொண்டு போனதில் கமலா அவ்வப்போது தன் தோழிகளுடன் போனில் பீற்றிக் கொண்டிருந்தாள்.

''மாப்பிள்ளை கோகுல் ரொம்ப தங்கமானவராம். வீட்டுக்கு ஒரே பிள்ளை. சம்பந்தி கங்காதரன் கடல் மாதிரி சொத்து சேர்த்து வச்சிருக்காரு. இன்னமும் ஓடி ஓடி பிஸினஸை கவனிச்சுட்டுத்தானிருக்காரு.

''கோகுல் தம்பி நெனச்சா அத்தனை கம்பெனிகளையும் கட்டி ஆண்டுகிட்டு ஜம்முனு இருக்கலாம். ஆனா அவருக்கு சுய கவுரவம் ஜாஸ்தியாம்.

"சொந்தமா பெரிய சாஃப்ட்வேர் கம்பெனியை ஆரம்பிச்சு அதை இன்டர்நேஷனல் லெவல்லே வெற்றிகரமா நடத்திக் காட்டணும்னு ஆசையாம்.

"கொஞ்ச காலம் கழிச்சு பொறுப்புகளை ஏத்துக்கிறேன்னு சொல்லியிருக்காராம். அவருக்கு எந்தக் கெட்டப் பழக்கங் களும் இல்லையாம்...

"அடக்கமான பிள்ளை. பெரியவங்களை மதிச்சு நடக்கிற பண்பு... அடிக்கடி அனாதை இல்லங்களுக்கும், முதியோர், இல்லங்களுக்கும் போய் நிதியுதவி பண்ணிட்டு... அவங் களோடு ஒரு நாள் முழுவதும் தங்கி அன்பா அளவளாவிட்டு வருவாராம்.

"இந்தக் காலத்துப் பசங்க மாதிரி இல்லாம... தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருப்பாராம்.

"மொத்தத்துல இப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை கிடைக்க... எங்க தாரா கொடுத்து வச்சிருக்கணும். இல்லையா?"

தினமும் யாரிடமாவது மாப்பிள்ளை புராணத்தைப் பாடி தம்பட்டம் அடித்து விட்டுத் தான்... பத்திரிகைகளை விநி யோகம் செய்ய விநாயக மூர்த்தியுடன் காரில் கிளம்புவாள் கமலா.

கோகுலைப் பற்றிய விவரங்களைத் தினமும் கேட்டுக் கேட்டு...

அவன் மீது இருந்த மதிப்பும் மரியாதையும் நாளுக்கு நாள் மீராவுக்குக் கூடிக் கொண்டே போனது.

எத்தனை கட்டுப் படுத்தியும் அவன் மீது கொண்ட நேசமும் காதலும் நாளுக்கு நாள் புதுப் புனலாய் பெருக் கெடுத்துக் கொண்டிருந்தன.

'கோகுல்! நான் யார்னுகூட உங்களுக்குத் தெரியாது. ஆனா நான் உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே... என் மனசைப் பறி கொடுத்துட்டேன்.



'இது ஒரு தலைக்காதல்... கை கூடாத காதல்னு தெரிஞ்சும் நிதர்சனத்தோட நிஜத்தைப் புரிஞ்சும்கூட... இந்தப் பேதை நெஞ்சம் உங்களையே நேசிக்குது.

'கதைகள்லே 'கண்டதும் காதல்' சம்பவங்களைப் படிக்கும் போது... இப்படிக்கூட நடக்குமா?ன்னு எனக்குள்ளே நான் சிரிச்சிருக்கேன்.

'ஆனா இப்படியும் நடக்கும்னு... உணர்வுப் பூர்வமா புரிஞ்சுகிட்டேன்.

'என் மனசுலே உங்க உருவம் பதிஞ்சு போச்சு கோகுல்! என் வாழ்நாள் முழுவதும் உங்க நெனப்போடவே வாழ்ந்து முடிச்சிருவேன்.

'இதை வெளியில நான் சொன்னா... என்னைப் பைத்தியக் காரின்னு நெனப்பாங்க...

'மனசை விட்டு வெளியில சொல்றதுக்குக் கூட எனக் குன்னு யார் இருக்காங்க?

'அந்தக் காலத்துல கோகுலத்து கிருஷ்ணரை மனசுல சுமந்தாளே பக்த மீரா?

'புராணங்கள்லே இதிகாசங்கள்லே... காதலைக்கூட ஒரு வகை பக்தின்னு தான் சொல்லியிருக்காங்க...

'இந்த மீராவோட காதலும் அப்படித்தான்! அந்த 'பக்த மீரா' மாதிரியே இந்த மீராவும் உங்களை என் மனசுல சுமந்துகிட்டு வாழ்ந்துடப் போறேன் கோகுல்! இது சத்தியம்...

'தாத்தா! தாத்தா! என்னை மாலையும் கழுத்துமா பார்க் கணும். ஒரு நல்லவரை நான் கைப் பிடிக்கணும்னு நீங்க ரொம்பவே ஏங்குனீங்களே தாத்தா? அந்த ஏக்கத்தோடவே போயிட்டீங்க...

'அந்த ஆசை எப்பவும் நிறவேறாது தாத்தா!

'ஏன்னா... நான் மானசீகமா கோகுலை நேசிக்கிறேன்.

'இது ஒரு தலைக்காதல் தான்! ஊமை கண்ட கனவுதான்... ஆனா இது ஒரு ஆத்மார்த்தமான காதல்... புனிதமான காதல் தான்!'

மீரா வழக்கம் போல் மானசீகமாக தன் தாத்தாவுடனும்... நெஞ்சில் புதிதாகக் குடி புகுந்த காதலன் கோகுலுடனும் தனக்குள்ளே பேசிச் சிரித்துக் கொண்டாள்... அழுது கொண்டாள். நெகிழ்ந்து போனாள்.

அந்த அனாதைப் பெண் மீரா தனக்கென்று ஒரு உலகை சிருஷ்டித்துக் கொண்டு... தனிமையில் அதில் சஞ்சரித்து வந்தாள் என்பது நிஜம்!

* * *

தீர்க்க சுமங்கலி திருமண மண்டபம்! தி.நகரில் உள்ள மிகப் பிரமாண்ட கல்யாண மண்டபங்களுள் ஒன்று..!

மண்டபத்தின் உடம்பு முழுவதும் வண்ண வண்ண பல்புகள் மாட்டப்பட்டு ஜெகஜ்ஜோதியாய் ஜொலித்துக் கொண்டு இருந்தது.

முதல் நாள் மாலை ரிசப்ஷன்... ரிசப்ஷன் முடிந்த கையோடு நெருங்கின உறவுக்காரர்கள் முன்னிலையில் பரிசம்...!

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு முகூர்த்தம் என்று முடிவாகியிருந்தது.

வரவேற்புக்கு பெண்ணை அலங்கரித்துத் தயார் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

நகைப் பெட்டியை மீராவின் பொறுப்பில் விட்டிருந்தாள் கமலா.

அலங்காரத்திற்கு வேண்டிய ஒவ்வொரு நகைகளாக எடுத்துக் கொடுத்து கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் மீரா.

''மீரா! என்னோட சிநேகிதிங்க எல்லாரும் சேர்ந்து வந்திருக்காங்க பாரு. அவங்களுக்கு கூல் ட்ரிங்க்ஸ் கொடுத்து உபசரிக்கணும் போய் கவனி!

''என்ன திரு திருன்னு முழிக்கிறே? எல்லா நகைகளைத் தான் எடுத்து தாராவோட உடம்புல மாட்டிட்டாங்களே? 'ஜுவல் கேஸ்' காலியாயிடுச்சுல்ல?



''அப்புறம் என்ன? அதை அந்த கப்போர்டிலே வச்சுட்டு வா! மசமசன்னு நிக்காம உபசரிக்கிற வேலையைப் பாரு... தாராவுக்கு அவளோட சிநேகிதிங்க ரெண்டு பேர் நிற்கிறாங்களே? நீ கிளம்பு மீரா.''

அவளை நெட்டித் தள்ளாத குறையாக விரட்டினாள் கமலா.

மீராவுக்குக் கூச்ச சுபாவம் அதிகம். பெரிய விசேஷங்களில் விழாக்களில் அவள் கலந்து கொண்டதே இல்லை.

கமலாவின் சிநேகிதிகளை முகம் மலர வரவேற்று அமர வைத்து கூல் ட்ரிங்க்ஸ் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தவளுக்கு... குப்பென்று வியர்த்து விட்டது.

கூட்டத்தில் இருந்த அனைவரின் கண்களும் தன்னையே மொய்ப்பது போன்ற பிரமை! கூச்சத்தில் கால்கள் பின்னின

அவள் ஊகித்தது சரிதான்! இறந்து போன தாயாரின் பழைய வாடாமல்லி வண்ணப் பட்டுச் சேலையை உடுத்தி இருந்தாள் மீரா.

கைகளில் இரு வளையல்கள், இடது கை மோதிர விரலில் நீலக்கல் பதித்த மோதிரம், கழுத்தில் 'ஓம்' டாலர் பதித்த நீண்ட செயின், காதுகளில் கல் பதித்த ஜிமிக்கிகள்... என்று எளிய அலங்காரத்தில் இருந்தாலும் தேவதையாய் ஜொலித்தவளை... அனைவரும் ஒரு முறைக்குப் பலமுறை திரும்பிப் பார்த்து... அவளைப் பற்றி தங்களுக்குள் பேசிக் கொள்ளத் தான் செய்தனர்.

முகத்தில் பூத்த வியர்வையை கர்ச்சிப்பால் ஒற்றியெடுத்தபடி வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந்த மீராவின் அருகில் பதட்டமாய் ஓடி வந்து நின்றாள் கமலா.

''மீரா! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டிருக்காங்க. வரவேற்கணும்... இ... இந்த சமயத்துல பார்த்து தாராவைக் காணோமே மீரா? உ... உங்க சித்தப்பா எங்கே போய் தொலைஞ்சாரு?

"இத்தனைக் கூட்டத்துல... அதுவும் என்னோட சிநேகிதிங்களுக்கு முன்னாடி என் முகத்துல கரியைப் பூசிட்டாளே என் மக?

"சனியன்! இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லைன்னா... கட் அண்ட் ரைட்டா எடுத்துச் சொல்லியிருக்கலாம்லே?

"இந்த அவமானம் அவசியமா மீரா? பாவி மக கல்லைத் தூக்கிப் போட்டுட்டாளே?" அவளை ஓரமாக அழைத்துச் சென்று அடிக் குரலில் தழுதழுத்தாள் கமலா.

"ஐயோ! ப... பயப்படாதீங்கம்மா... தைரியமா இருங்க. தாரா இங்க கூட்டத்துல எங்கேயாவது பிரண்ட்ஸ் கூட பேசிட்டிருக்காளோ என்னவோ? செல் போன்லே சிக்னலே கிடைக்கலேன்னு சொல்லிட்டிருந்தா...

"தாரா எங்கேயும் போயிருக்க மாட்டா... சித்தப்பாவை நான் கூட்டிட்டு வர்றேன். நீங்க அந்த ரூமுலே இருங்கம்மா..."

பதற்றம் அவளையும் தொற்றிக் கொள்ள... அந்த பலத்த கூட்டத்தில் ஆண்கள் குழுமியிருந்த பக்கத்தில்... 'சித்தப்பா இருக்கிறாரா?' என்று பார்வையாலேயே சலித்தபடி மெல்ல மண்டப வாசலை நோக்கி நடந்தாள்.

வாசலுக்கு சற்று முன்னால் தெரிந்த நபரை கை குலுக்கி வரவேற்றுச் சிரித்துப் பேசியபடி இருந்த விநாயக மூர்த்தியின் அருகில் நெருங்கினாள்.

கலவரம் பூசிய முகத்துடன் தயங்கி வந்தவளைப் பார்த்ததும் "என்னம்மா மீரா? ஏதாச்சும் அவசரமா தேவைப்படுதா? இல்ல... வீட்டுலே முக்கியமான பொருளை மறந்து வச்சுட்டீங்களா?" என்று படபடத்தார்.

"சி... சித்தப்பா! சித்தி உங்களைக் கூப்பிட்டாங்க.. ரொம்ப பதட்டமா இருக்காங்க... தா... தாராவைக் காணோமாம்!"

"ஐயையோ... இப்படி குண்டைத் தூக்கிப் போட்டுட்டாளே மீரா. சபையில வச்சு கழுத்தையறுத்துட்டாளே?



"இந்த அவமானத்துக்கு அப்புறம் நாங்க எப்படி வெளியில தலைகாட்டப் போறோம்?" மேனி பதற கண்கள் கலங்க சித்தப்பா மெல்லிய குரலில் அரற்றியபோது... மீராவுக்கும் கண்கள் குபுக் என்று ஊற்றெடுத்தன.

'பாவம் சித்தப்பா! இவ்வளவு பெரிய அவமானத்துக்கு ஆளாகி விட்டாரே? பெற்றவர்களுக்கு இப்படி ஒரு அதிர்ச்சியைத் தருவதற்கு... தாராவுக்கு எப்படி மனசு வந்தது?

'இன்னும் சற்று நேரத்தில் விஷயம் வெட்ட வெளிச்சமாகி விடுமே? மண்டபமே ரெண்டு பட்டுப் போகுமே?'

சித்தப்பாவின் மீதிருந்த பாசத்தில் அவளது மனம் பாகாய் கரைந்தது.

பயத்திலும் திகிலிலும் அவளது உடம்பு தந்தியடிக்கத் தொடங்கியது.



## 10

'மணமகள் அறை'யை மூடிச் சாத்தி விட்டு... விநாயக மூர்த்தியும் கமலாவும் அழுது புலம்பிக் கொண்டிருந்தனர்.

"இன்னமும் கொஞ்ச நேரத்துல எல்லாருக்கும் தெரிஞ்சுடுமே? மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு நாம்ப என்ன பதிலைச் சொல்லப் போறோம்?

"ஊரைக் கூட்டி வச்சு கரும்புள்ளி செம்புள்ளி குத்தாத குறையா அவமானத்துல நம்மைத் தள்ளிட்டாளே பாவி!" கமலா வேதனையில் கண்ணீர் உகுத்தாள்.

தேற்றும் வழி வகை தோன்றாமல் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தாள் மீரா.

தனக்கு அடைக்கலம் கொடுத்த குடும்பம்... இன்று அவமானப்பட்டு நிற்கிறதே? என்று உள்ளூர பச்சாதாபப் பட்ட மீராவின் கண்கள் ஏகத்திற்கும் கலங்கின.

இதயத் துடிப்பு எகிறித் துடிக்க... மிரண்டு போய் விழித்துக் கொண்டிருந்தாள்.

"அவமானப் பட்டது பட்டதுதான்! சம்பந்தி வந்து காறித் துப்பாத குறையா நம்மை நாலு கேள்வி கேட்கறத்துக்கு முன்னாடி... நாம்பளே விஷயத்தைப் போட்டு உடைச்சிட வேண்டியதுதான்!

"இரு... நான் போயி கங்காதரன் சாரை மட்டும் தனியா அழைச்சுட்டு வந்துடறேன். இப்படியொரு பொண்ணைப் பெத்த பாவத்துக்கு அவரோட கால்லே விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டியதுதான்."

புலம்பியபடி விருட்டென்று வெளியேறினார் விநாயக மூர்த்தி சற்று நேரத்தில்...

"என்ன சம்பந்தி? என்ன பீடிகை பலமா இருக்கு?" என்று கேட்டபடியே உள்ளே நுழைந்த கங்காதரனிடம்... தயங்கித் தயங்கி உண்மையைப் பிட்டு வைத்ததும்... அவர் வெகுவாய் வெகுண்டு போனார்.

"நீங்க பெத்த பொண்ணுக்காக உங்க குடும்பம் தலை குனிஞ்சு நிக்கலாம். நானும் எங்க குடும்பமும் இந்த சபை யில அவமானப் படணும்னு தலை விதியா?

"என் மனைவி சாந்தா ரொம்ப உடம்புக்கு முடியாதவ... இந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கவே மாட்டா...

"என் மகன் கோகுல்... கல்யாணம் செய்துக்கவே இஷ்ட மில்லாம இருந்தவன்... இப்போ உங்களால... அவன்... அவனோட பிரண்ட்ஸ்களுக்கு மத்தியில அவமானப் பட்டு கூனிக் குறுகி நிக்கணுமா? அவன் எப்படி வெளியில நடமாடுவான்?

"எனக்கொரு வழி சொல்லுங்க விநாயக மூர்த்தி?" கர்ஜித் தார் கங்காதரன்.

"எ... என்னால உங்க கால்லே விழுந்து மன்னிப்பு தான் கேட்க முடியும். வேறென்ன செய்யட்டும் சார்?" கை யெடுத்துக் கும்பிட்டார் விநாயக மூர்த்தி.



"தங்கு தடையில்லாம எல்லாமே எனக்கு நடந்தாகணும். பெரிய அளவில சோதனை கொடுத்தாலும்... கடவுள் சின்னதா கருணை காட்டவும் செய்திருக்காரு...

"என்ன முழிக்கிறீங்க... அதோ நிக்கிறாளே? உங்க ஒண்ணு விட்ட அண்ணன் பொண்ணு... இனி அவதான் எங்க வீட்டு மருமகள்.

"சீக்கிரமா அலங்கரிச்சு கூட்டிட்டு வாங்க... வரவேற்புக்கு நேரமாயிட்டிருக்குல்ல?" அதட்டி விட்டுத் திரும்பிப் பார்த்தார்.

"அம்மாடி! உன் பேரென்னம்மா?"

"மீ... மீரா!" இப்படியொரு திருப்பு முனை வரும் என்று அவள் கனவிலும் கருதவில்லை ஆதலால்... அப்பட்டமான அதிர்ச்சி அழகிய முகத்தில் அப்பிக் கொள்ள... மருண்ட விழிகள் வியப்பில் மேலும் விரிந்தன.

"மீரா! எங்க குடும்பத்து கவுரவமே உன் கையில தான் இருக்கும்மா... எங்க வீட்டுக்கு வந்து விளக்கேத்த உனக்கு சம்மதம் தானேம்மா?

"இந்தத் தகப்பனோட தவிப்பைப் புரிஞ்சுக்கோம்மா" என்று சட்டென்று உரிமையுடன் அவளது கரத்தைப் பற்றிக் கொண்டார் கங்காதரன்.

மீரா மிரண்டு போய் பயத்துடன் விநாயக மூர்த்தி - கமலா தம்பதியினரை ஏறிட்டாள்.

"சின்னு சொல்லும்மா மீரா! அவங்க வீட்டுக்கு மருமகளாப் போற பாக்கியத்தைத் தான் எங்க பொண்ணு இழந்துட்டா...

"நல்லா சீரழியட்டும். அப்போ தான் புத்தி வரும்.

"அதிர்ஷ்ட தேவதை உன்னைக் கண்ணைத் திறந்து பார்த்துட்டா மீரா!

"கங்காதரன் சாருக்கு மருமகளாக நீ கொடுத்து வச்சிருக் கணும். இத்தனை வருஷங்களா பல கஷ்டங்களை நீ

பட்டுட்டே... இப்போ கடவுள் இப்படியொரு ராஜயோகத்தை கொடுத்துட்டாரு... தயங்காதம்மா'' விநாயகமூர்த்தி நெகிழ்ந்து போய் கூறியது தான் தாமதம்...

மீராவின் விழிகளில் கண்ணீர் குளம் கட்டியது. சட்டென்று கங்காதரனின் பாதங்களில் பணிந்தாள்.

அடுத்து நடந்த நிகழ்ச்சிகள் யாவும் கனவில் நடப்பதைப் போன்றே பிரமிப்பாக இருந்தது மீராவுக்கு.

உறவுக்காரப் பெண்கள் புடைசூழ... கையில் தாம்பாளத்தை ஏந்தியபடி அதிர்ச்சி இன்னமும் விலகாத முகத்துடன் சாந்தா வந்தாள்.

ஊதா வண்ணத்தில் விலை உயர்ந்த பட்டுப் புடவை, நீண்ட மாங்காய் ஸ்டார், கல் பதித்த வளையல்கள், மோதிரம் போன்ற நகைகள் அடங்கிய பெட்டியையும் மேலாக வைத்து... தாம்பாளத்தை மீராவிடம் நீட்டினாள் சாந்தா.

பவ்யமாக நமஸ்கரித்து எழுந்தவளின் சிரம் தொட்டுத் தடவினாள் சாந்தா.

பத்தே நிமிடங்களில் துரித கதியில் அலங்கரிக்கப் பட்டு விட்டாள் மீரா.

மண்டபத்தில் மேடைக்கு அவள் அழைத்து வரப் பட்டபோது... கூட்டத்தில் எதிர்பார்த்தது போல் பயங்கர சலசலப்பு ஏற்பட்டது நிஜம்!

''அட... பொண்ணு மாறிப் போச்சு... பாத்தீங்களா?''

''கமலாவோட பொண்ணு தாராவுக்கு என்னாச்சு?''

''இந்த மாப்பிள்ளை பிடிக்கலைன்னு சொல்லிட்டாளோ?''

''கமலாவோட முகம் பேயறைஞ்சாப்பல இருக்கே? பொண்ணு ஓடிப் போயிட்டா போலிருக்கு.''

''இது அவங்க வீட்டுல தங்கியிருந்த வேலைக்காரப் பொண்ணு... இவளுக்கு அடிச்சது யோகம்!''



''வேலைக்காரப் பொண்ணு இல்லை... விநாயகத்துக்கு தூரத்து உறவுக்காரப் பொண்ணாம்... அனாதையாம்... இவங்க வீட்டுல அடைக்கலமா இருந்துச்சாம்.''

மண்டபத்தில் ஏக காலத்தில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் கலந்த குரல்கள் எழும்பின.

மீரா கூடியிருந்தவர்களைப் பார்க்க அஞ்சி, மகிழ்ச்சியும் அச்சமும் கலந்த உணர்விலே... நெஞ்சு படபடக்க மெல்ல நடந்து வந்து கோகுலுக்கு அருகில் நின்றாள்.

கண்களில் வழிந்த கண்ணீரை சட்டென்று துடைத்துக் கொண்டார் கங்காதரன்.

சாந்தாவுக்கு சமீப காலமாக பி.பி. வந்து விட்டதால்... அதிர்ச்சியோ மகிழ்ச்சியோ ஏற்பட்டால் படபடப்பு வந்து விடும்.

முன் வரிசையில் வியர்க்க விறுவிறுக்க அமர்ந்து கொண்டு ஆனந்தக் கண்ணீருடன் மகனையும் மருமகளை யும் ஆசை தீர நோட்டமிட்டாள்.

பட்டுப் புடவை கட்டி நகைகளை சூட்டிக் கொண்டதும்... மீரா கிட்டத்தட்ட ஆகாயத்திலிருந்து இறங்கி வந்த தேவலோகப் பெண்ணாக ஜொலி ஜொலித்தாள்.

கோகுலுக்கு அருகில் வந்து நின்றதுமே... அவளது முகத் தில் அவளையும் அறியாமல் விளக்கு போட்டாற் போல் வெளிச்சம் பரவியது.

அழகிய முகத்தில் மத்தாப்பு சிதறியது. நாணத்தால் கன்னங்களில் செம்மை பரவியது.

கழுத்து வரை ஐஸ் துண்டுகளை நெருக்கமாக வைத்துக் கட்டி விட்ட மாதிரி விறுவிறுவென்று ஒரு சில்லிப்பு அவளது நெஞ்சுக்குள் படர்ந்தது.

'தாத்தா! நீங்க ஆசைப் பட்டாற் போலவே... எனக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சுடுத்து தாத்தா!

"ஆஞ்சநேயா! ஐயனே... வால்லே அனுதினமும் குங்குமப் பொட்டு வச்சு நான் பிரார்த்தனை பண்ணினது வீண் போகலே...

"இப்படி ஒரு அதிசயத்தை நிகழ்த்திக் காட்டிட்டியே? எனக்குப் பிடித்தவரையே எனக்குக் கணவராகக் கொடுத்துட்டியே பகவானே...

"உமக்கு அனந்த கோடி நமஸ்காரம்!" மகிழ்ச்சி தாளாமல் கண்ணோரங்களில் கசியத் தொடங்கிய கண்ணீரை... கண்களை மெல்லச் சிமிட்டி உள்ளிழுத்துக் கொண்டாள் மீரா.

போகஸ் லைட்டின் வெளிச்சம் வெள்ளமாய் மேடையின் மீது பாய்ந்தது.

வெளிச்ச வெள்ளத்தில் அவளது அழகிய கண்கள் மின்னுவதைக் கண்டு... கமலாவின் வயிறு பற்றி எரிந்தது.

இன்பச் சிலிர்ப்புடன் மெல்ல நிமிர்ந்து கோகுலை ஏறிட்டாள் மீரா.

நெருப்பாக ஏன் அவளை அவன் வெறிக்கிறான்? அப்படியென்றால் அவனுக்கு அவளைப் பிடிக்கவில்லையா?

சட்டெனத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் மீரா.

கண் இமைகளினின்று இரண்டு சொட்டுக் கண்ணீர் கைகள் மீது முத்துக்களாய் உதிர்ந்தன.



## 11

கோகுல் தனது பார்வையாலேயே பெற்றவர்களை சுட்டெரித்து விடுவது போல் முறைத்துக் கொண்டிருந்தான்.

ஆரத்தி கரைத்துத் திலகம் தீட்டி மணமக்களை வீட்டுக்குள்ளே வரவேற்கும் வரை தான்... சாந்தாவால் தாக்குப் பிடிக்க முடிந்தது.

இதயம் படபடவென்று அடித்துக் கொண்டு வியர்த்து வழிய... தலை சுற்றிக் கொண்டு வரவே... தன் அறைக்குள் போய் சுருண்டு படுத்துக் கொண்டாள்.



பூஜையறைக்கு மணமக்களை அழைத்துச் சென்ற கங்காதரன் மீராவைப் பார்த்து "உன் கையால விளக்கேத்தும்மா... லட்சுமி நரசிம்மர் தான் நம்ம குலதெய்வம்... அந்தப் படத்துக்கு முன்னாடி உதிரிப் பூக்களைத் தூவிக் கும்பிட்டுக்கோ" என்று அன்புடன் உத்தரவிட்டார்.

விளக்கேற்றி, மண்டியிட்டு நமஸ்கரித்து அவள் எழுந்ததும்... நேராக சாந்தாவின் அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றார் கங்காதரன்.

காலடி சப்தம் கேட்டு மெல்ல எழுந்து கட்டிலில் சாய்ந்து அமர்ந்தாள் சாந்தா.

"உங்க ரெண்டு பேத்துக்கும் இப்போ ரொம்ப நிம்மதி தானே? என்னை அக்கடான்னு நிம்மதியா இருக்க விடுங்கன்னு... எவ்ளோ கெஞ்சினேன்... கேட்டீங்களா?

"வீணா கவலைப்பட்டு பெரிய வியாதிகளை இழுத்து விட்டுக் கிட்டாங்களே அம்மான்னு... எனக்கு மனசாட்சி அறுத்ததால உங்க இஷ்டப்படி கல்யாணம் செய்துக்க சம்மதிச்சேன்.

"கல்யாணம் செய்துகிட்டா ரணப்பட்டுப் போன மனதுக்கு மருந்து தடவினாப்பல இருக்கும். ஆறுதல் கிடைக்கும்னு சொன்னீங்க...

"ஆனா... என்ன நடந்துச்சு பாத்தீங்களா? கல்யாணத்துக்கு நிச்சயம் பண்ணின பொண்ணு ஓடிப் போயிட்டா...

"என்னோட ஆபீஸ் நண்பர்கள் எல்லாரும் வந்திருந்தாங்க. அதுல வம்பு பிடிச்ச ஆசாமிங்க எப்படியெல்லாம் கேலி பேசிச் சிரிக்கிறாங்க தெரியுமா?

"உனக்கு பொண்ணுங்க ராசி இல்லை போலிருக்கு கோகுல் அதான்... நிச்சயிக்கப்பட்ட பொண்ணு ஓடிட்டா...

"நல்ல காலம்! இந்தப் பொண்ணாவது கிடைச்சாளே? வாழ்த்துக்கள்! அப்படின்னு முகத்துக்கு நேரா கிண்டலடிச்சுச் சொல்லிட்டுப் போறாங்க... தெரியுமாப்பா?

''இந்த அவமானமும் வேதனையும் எனக்குத் தேவையா சொல்லுங்க?

''வெறும் வாயை அசை போடறவங்களுக்கு அவல் கிடைச்ச மாதிரி... இனிமே என்னோட சங்கதியைப் பத்தியே பேசித் தீர்க்கப் போறாங்க.

''ச்சே! எல்லாம் என்னோட தலையெழுத்து'' பொரிந்து தள்ளின மகனை நிதானமாய் ஏறிட்டார் கங்காதரன்.

''இப்போ என்ன குடி முழுகிப் போச்சு கோகுல்? எல்லாம் நல்லதுக்குத்தான்னு நெனச்சுக்கணும்.

''நம்ம வீட்டுக்கு விளக்கேத்த ஒரு மகாலட்சுமியே வந்திருக்காள்னு... என் மனசுக்குப் படுது.

''அடக்கமான, குடும்பப் பாங்கான, பொறுப்புள்ள குண வதி கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும் கோகுல்!

''மீராவுக்கு என்னடா குறைச்சல்? அந்தத் தாராவைவிடப் பன்மடங்கு அழகு, பண்பு, பதவிசா இருக்காளே? அப்புறம் என்ன வேணும்?

''டேய்... கோகுல்! அந்த மண்டபத்துல கல்யாணம் நடக்காம நம்ம உறவுக்காரங்களுக்கு மத்தியில நாம்ப ஏமாந்து திரும்பி வந்தாத்தானே... அது அவமானம்?

''குறிச்ச முகூர்த்தத்துலே கல்யாணம் ஜாம் ஜாம்னு நடந்ததே? அப்புறமென்ன உனக்கு அவமானம் வேண்டிக் கிடக்கு?

''வம்பு பிடிச்சவங்க... பொறாமை பிடிச்சவங்க... ஆயிரம் பேசட்டுமே? உனக்கென்ன வந்தது?

''சட்டை செய்யாமப் போயிட்டு இரு... தன்னால அடங்கிப் போயிடுவாங்க.. சரியாடா?''

''கோபத்துல கண்ணு மண்ணு தெரியாம தாம் - தூம்னு குதிச்சுடுவியே? உங்கம்மாவுக்கு இன்னமும் உடம்பு முடியலை ஞாபகம் வச்சுக்கோ!



''நீயும் டென்ஷனாகி எங்களையும் டென்ஷன் படுத்தாதே ராஜா! எல்லாம் நல்லபடியாத் தான் நடந்திருக்கு. எங்களுக்கு மனசு நெறஞ்சு போச்சு தெரியுமா?

''நீ கடுகடுன்னு முகத்தைத் தூக்கி வச்சுக்கிட்டதைப் பார்த்ததும்... பயத்துல உங்கம்மாவுக்கு படபடப்பு அதிக மாயிடுச்சு... வந்து சுருண்டு படுத்துட்டா... தேவையா இது?

''வாம்மா மீரா! சேர்ந்து நில்லு... அம்மா கிட்டே ஆசீர் வாதம் வாங்கிக்கோங்க'' குரலுயர்த்தி அவர் அதட்டியதும் சட்டென்று மௌனமானான் கோகுல்.

சாந்தா மெல்ல கட்டிலை விட்டு இறங்கி, கங்காதரனின் அருகில் வந்து நின்றதும்... மணமக்கள் இருவரும் கால் களைத் தொட்டு நமஸ்கரித்தனர்.

மீராவை ஏறிட்டுக்கூடப் பாராமல்.... விருட்டென்று வெளியேறினான் கோகுல்.

மீராவை அருகில் வைத்துக் கொண்டே... கோகுல் தனது பெற்றவர்களிடம் பொரிந்து தள்ளியபோது... அவமான உணர்வில் கூசிக் குறுகிப் போய் விட்டாள்.

'எல்லாம் என்னோட தலையெழுத்து' என்று கோகுல் நொந்துபோய் கூறிய வார்த்தைகள்... திரும்பத் திரும்ப அவளது செவிகளில் எதிரொலித்தன.

''அம்மாடி மீரா! இந்த நல்ல நாளும் அதுவுமா நீ கண் கலங்கக் கூடாது ராஜாத்தி! அவன் கிடக்கிறான்... இப்படித் தான் டென்ஷன் ஆனா... தாம் தூம்னு குதிப்பான்... கொஞ்ச நேரத்துல ரியலைஸ் பண்ணிடுவான்.

''அப்புறம் குற்ற உணர்வுல பரிதாபமா முகத்தை வச்சுக்கிட்டு நம்மளை சுத்தி வருவான். அவனொரு குழந்தை மாதிரி... எதையும் மனசுல வச்சுக்காதே...

''நீ இந்த வீட்டுக்கு மருமகள் இல்ல... எங்க மகள். உனக்கு நாங்க இருக்கோம், சரியாடா?'' மாமனார் கனிவாய் இதமாய்

கேட்டபோது... மரியாதை நிமித்தமாக பலமாகத் தலையாட்டி வைத்தாள் மீரா.

முதலிரவு!

வெள்ளிச் சொம்பைக் கைகளில் ஏந்தி... தயங்கியபடி அறைக்குள் புகுந்தாள் மீரா.

பயமா? பரவசமா?... எது என்று இனம் பிரித்தறிய முடியாத கலவை உணர்வில் அவளது இதயத்தில் புறா சிறகடித்தது.

வெள்ளிச் சொம்பை கட்டிலின் அருகிலிருந்த சிறு டேபிளின் மீது வைத்து விட்டு... தயக்கமாய் அவன் மீது பார்வையைப் பதித்தாள்.

முகத்தில் காலையில் காணப்பட்ட கடுகடுப்பு சற்றே குறைந்ததிருந்தாற் போல் தெரிந்ததும்... மனதில் சிறு நிம்மதி எட்டிப் பார்த்தது.

''எ... என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்றபடி சட்டென்று கால்களில் பணிந்தாள்.

''இரு... இருக்கட்டும்...'' என்று வார்த்தையை உதிர்த்த கோகுல் தனது பாதங்களைத் தொட்டு நிமிர்ந்தவளை... ஏற இறங்கப் பார்த்தான்.

'அப்பா சொன்னது நிஜம் தான்! செதுக்கப்பட்ட செல்லுலாய்டு பொம்மை போல் அழகுப் பெட்டகமாகத் தானிருக்கிறாள்.

'அழகோடு பணிவும் பவ்யமும் அடக்கமும் ஒருங்கே அமையப் பெற்றவளாகத்தான் இருக்கிறாள்...' அவனுக்குள் ஒரு குட்டி திருப்தி பரவியது.

அதைச் சட்டென்று வெளிக் காட்டிக் கொள்ள... அவனது முரட்டுப் பிடிவாதம் தடுத்தது.

''இதோ பார் மீரா! ஆ... ஆபீஸ்லே என்னோட வேலை பார்த்த சஞ்சனாவை உயிருக்கு உயிரா நேசிச்சேன். அவளும் அப்படித்தான் இருந்தா...



''திடீர்னு எனக்கு டாட்டா காட்டிட்டு அமெரிக்க கோடீஸ்வரனைக் கட்டிக்கிட்டுப் போயிட்டா... மனசே வெறுத்துப் போச்சு! பொண்ணுங்க மேலேயே ரொம்ப வெறுப்பு வந்திருச்சு...

''கல்யாணமே வேண்டாம்னு இருந்தேன். அம்மாவுக்கு உடம்புக்கு முடியாமப் போனதாலே... பெத்தவங்க விருப்பத்துக்காக கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சேன்.

''நல்ல குடும்பம், நல்ல பொண்ணுன்னு சொன்னாங்க. ஆனா அவ கல்யாணத்துக்கு முதல் நாள் ஓடிப் போயிட்டா...

''என்னோட ஆபீஸ்லே வேலை பார்க்கிற சில விஷமிங்க... கோகுல்கிட்ட ஏதோ குறை இருக்கு... அதான் சஞ்சு கை கழுவிப் போயிட்டா... இப்போ விஷயம் தெரிஞ்சு தாராவும் ஓடிட்டாள்னு பேசினாங்க...

''எனக்கு இந்தப் பொண்ணுங்களை நினைச்சாலே... ரத்தம் கொதிக்குது. என் மனசு நார்மலுக்கு வர... கொஞ்ச நாளாகும்.

''சமய சந்தர்ப்பத்தாலே நாம்ப கணவன் மனைவியாயிட்டோம். ரெண்டு பொண்ணுங்களாலே ரணப்பட்டுக் கிடக்கிற மனசு ஆறணும்.

''அப்பா காலையிலே எவ்வளவோ எடுத்துச் சொன்னாரு... ஆனா... என் மனசுக்கு ஒரு தெளிவு பிறக்கணும். இல்லையா?

''மனசு இன்னமும் சஞ்சலப்பட்டு சங்கடப்படுத்திக்கிட்டிருக்கிற இந்த சமயத்துல நான் எப்படி மனப்பூர்வமா... குடும்ப வாழ்க்கையில ஈடுபட முடியும் மீரா?

''நான் சொல்ல வர்றது உனக்கு...'' அவன் தயங்கி நிறுத்தியதும் சிறு முறுவலுடன் அவனை ஏறிட்டாள் மீரா.

''நீங்க சொல்ல வர்றது எனக்கு நல்லாவே புரியுதுங்க... அப்பா கிட்ட வருத்தமா நீங்க காலையில பேசினப்பவே... உங்க மனநிலை என்னன்னு... எனக்கு நல்லாப் புரிஞ்சுடுச்சு.

"இது நியாயமான கோபம் தான்! வருத்தம் தான்... உங்க மனசு எவ்ளோ பாடுபடுதுன்னு... என்னால புரிஞ்சுக்க முடிஞ்சப்ப ரொம்பப் பாவமா இருந்தது.

"என் ஒண்ணு விட்ட சகோதரி தாராவால... உங்களுக்கு ஏற்பட்ட தர்ம சங்கடத்துக்காக... நான் உங்க கிட்டே மன்னிப்பு கேட்டுக்கிறேன்.

"மீரான்னு... பேர் சொல்லிக் கூப்பிட்டு மனைவிங்கிற உரிமையில உங்க மனசுல இருக்கிறதை என் கிட்ட கொட்டினீங்களே? ரொம்ப சந்தோஷமா இருக்குங்க... இது போதும் எனக்கு!

"உங்க மனசு தெளிவடையணும். ரணம் ஆறணும்... அதான் முக்கியம்!

"காலப் போக்குல அந்த ரணம் கொஞ்சம் கொஞ்சமா ஆறிடும்னு நான் நம்பறேன்..." புன்னகை மாறாமல் பேசியபடி சொம்பிலிருந்த பாலை டம்ளரில் சரித்து அவனிடம் கொடுத்தாள்.

கட்டிலின் மீது இருந்த பெட் ஸ்பிரட்டை தரையில் விரித்தாள்.


ஆச்சரியத்தில் கோகுலுக்கு சப்த நாடியும் அடங்கிப் போனது. அழகு, அடக்கம், பணிவோடு... புரிந்து கொள்ளும் குணமும் இவளிடம் இருக்கிறதே?

ஏமாற்றமோ கவலையோ சிறிதும் எட்டிப் பார்க்காமல்... புன்னகை பூத்த முகத்துடன் அமைதியாகப் பேசிவிட்டு... முதுகு காட்டி தரையில் படுத்துக் கொண்டவளின் மீது... நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது.

சட்டென்று மனதில் ஒரு பிடித்தம் ஏற்பட்டது நிஜம்! அதை வெளிப்படுத்த ஆசையும் கிளர்ந்தது நிஜம்!

ஆனால் அவனது வறட்டு கவுரவம் அவளை நெருங்க விடாமல் தடை செய்தது.





## 12

திருமணமாகி வந்த நாளன்றே... சாவிக் கொத்தை மருமகளின் கையில் தந்து விட்டிருந்தாள் சாந்தா.

சாந்தா உடல் நலம் குன்றியதிலிருந்து... வீட்டு நிர்வாகம் சீர் குலைந்திருந்தது.

திருமணமான மறுநாளே வீட்டு நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருந்தாள் மீரா.

மூன்று நாட்கள் நகர்ந்தன. மீராவின் கை வண்ணத்தில் அந்த பங்களா புதுப் பொலிவுடன் லட்சுமி கரமாகத் திகழ்ந்தது என்றால்... அது மிகையல்ல!

காலை நான்கு மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்த கூந்தலை முடிச்சிட்டுக் கொண்டு... தோட்டத்தில் பூத்த பவள மல்லிப் பூக்களைக் கோர்த்து, அரளிப் பூக்களை நாரில் தொடுத்து... ஸ்வாமி படங்களுக்குச் சாற்றி பூஜை செய்துவிட்டு... அடுக்களைக்குள் நுழைவாள்.

மிக இயல்பாக பெற்று வளர்த்த மகளைப் போல் கங்காதரன் - சாந்தா தம்பதியினருடன் அவள் பாசமாய் உறவாடியதை... விழிகள் விரியப் பார்த்தான் கோகுல்.

தேனீ போன்ற சுறுசுறுப்புடனும்... சதா கால்களில் சக்கரத்தை மாட்டிக் கொள்ளாத குறையாக பரபரப்புடன் செயல்பட்டவளைக் கண்டு அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை தான்.

பின்புறம் தோட்டத்தைத் தாண்டி தரிசாகக் கிடந்த காலி நிலத்தையும் செப்பனிட்டு... பெரிய தோட்டமாக விஸ்தரிக்க ஏற்பாடு செய்து, துரிதமாக ஆட்களை அமர்த்தி... அவர்களுடன் சேர்ந்து தோட்டத்தில் இறங்கி முனைப்புடன் வியர்க்க விறு விறுக்க செயல்பட்டுக் கொண்டிருந்த மீராவை... பால்கனியிலிருந்து வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் கோகுல்.

'அப்பாவின் கணிப்பு என்றுமே தவறாய் போனதில்லை. இவள் வந்ததிலிருந்து பெரியவர்களின் முகத்தில் பெருத்த நிம்மதி நிலவுகிறது.

'இவள் கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கனும் கோகுல்' என்று அப்பா கூறினாரே?

'அவர் கூறியது போல் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கிறாள்.

'உங்கள் நிம்மதி தான் எனக்கு முக்கியம்'... என்ற ரீதியில் பரிமாறும் போதும் சரி... அவனுக்கு வேண்டிய உடைகளை அயர்ன் செய்து வைத்து. அவனது ஷூக்களுக்கு பாலீஷ் போட்டு வைக்கும் போதும் சரி...

'தனது கடமையைச் செய்து விட்டு அப்பால் நகர்ந்து விடுவாள். முதலிரவின்போது அவனுக்கு ஆறுதலாய் நான்கு வார்த்தைகள் பேசியவள் தான்...

அதன் பின்பு அநாவசியமாய் ஒற்றை வார்த்தை பேசவும் முயற்சித்ததில்லை.

அவன் மனதைத் தெள்ளத் தெளிவாய் புரிந்து கொண்டு... அதற்கேற்ற வகையில் மீரா நாசூக்காய் நாகரீகமாய் பாங் காய் நடந்து கொண்ட விதம்... அவன் இதயத்தை அழுத்த மாய் தொட்டது.

தீவிர யோசனையுடன் வைத்த கண் வாங்காமல்... தோட்டத்தில் துறுதுறுவென்று வளைய வந்தவளையே நோட்டமிட்டுக் கொண்டு இருந்தான் கோகுல்.

தனக்கு எதிர்பாராத சூழ்நிலையில்... திடீர் திருமணம் நடந்து விட்டதை போன் மூலம் பர்வதம் அம்மாளுக்கு மீரா தெரிவித்திருந்தாள்.

வெகு காலமாக தாயும் பிள்ளையுமாகப் பழகியவள் என்ப தால்... பர்வதம் அம்மாள் திருநீர் மலைக் கோவிலில் மீராவின் பெயருக்கு அர்ச்சனை செய்து விட்டு... கோவில் பிரசாதம்



பூ, பழங்கள் ஸ்வீட் எடுத்துக் கொண்டு மீராவின் பங்களா வுக்கு வந்து விட்டிருந்தாள்.

சாந்தா - கங்காதரன் தம்பதியினரைப் பார்த்து நன்றி தெரிவித்துவிட்டு... மீராவின் நல்ல குணத்தைப் பற்றியும் பொறுப்புணர்ச்சி, பொறுமையையும் எடுத்துச் சொல்லி விட்டு...

''வர்ற தைப்பூசத்தன்னிக்கு தான் மீராவுக்கு பிறந்த நாள். ஒவ்வொரு தைப்பூசத்தன்னிக்கும் கோவிலுக்குப் போயிட்டு வந்துட்டு... அவங்க தாத்தாவை நமஸ்காரம் பண்ணிட்டு... என்னை அவங்க வீட்டுக்குக் கூப்பிட்டு... கையில் தாம்பூலத் தைக் கொடுத்து... என்கிட்டே குழந்தை ஆசீர்வாதம் வாங் கிக்குவா...

''அதான் என்னால அந்த விசேஷ தினத்தை மறக்க முடி யலை. அவ குணத்துக்கு ஏத்த மாதிரியே நல்ல வாழ்க்கை அமைஞ்சதைப் பார்த்து... நான் ரொம்பவே சந்தோஷப் படறேன்.

''அப்ப நான் கிளம்பறேங்க... மீரா! உன்னோட பிறந்த நாளைக்கு மாப்பிள்ளையைக் கூட்டிக்கிட்டு நம்ம திருநீர் மலைக் கோவிலுக்கு வந்துட்டுப் போயேன்.

''கோவிலுக்கு வர்றப்ப... நம்ம வீட்டுக்கும் ஒரு எட்டு வந்துட்டுப் போ ராஜாத்தி சரியா?'' என்று தலையாட்டி பர்வதம் அம்மாள் விடை பெற்ற போது... பரிவுடன் அவளது கைகளைப் பற்றிக் கொண்டு... வாசல் வரை வழியனுப்பச் சென்றாள் மீரா.

ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டான் கோகுல்.

''மீராவைப் பத்தி சகலத்தையும் அந்தம்மா சொன்னாங் கல்ல? கஷ்டப்படற நிலைமையில இருந்தும் கூட... அடுத்தவங்களுக்கு உதவி செய்யணுங்கிற நோக்கத் தோடவே வாழ்ந்திருக்கா பாரேன்!

''மனித நேயம், இரக்க குணம், பொறுப்புணர்ச்சி இதெல்லாம்... அவளோட தாத்தாவோட வளர்ப்புல வந்ததுன்னு... கேள்விப்படறப்போ... ரொம்ப சந்தோஷமார்க்கு கோகுல்!

''அப்பா சொன்ன மாதிரி இவ கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும். நாளன்னிக்கு தைப்பூசம்!

''மீராவை அழைச்சுக்கிட்டு காலையில திருநீர் மலை கோவிலுக்குப் போயிட்டு வா... சாயந்தரமா அவளை அஷ்டலட்சுமி கோவிலுக்கும் கூட்டிட்டுப் போ!

''சரியா கோகுல்?'' என்று சாந்தா கேட்டபோது... அவனால் மறுக்கவே முடியவில்லை.

**தி**ருநீர் மலைக்கோவில்!

சுயம்பாக எழுந்தருளியிருந்த ரங்கநாதரைக் கண் குளிர சேவித்து விட்டு கல்கி மண்டபத்திற்கு வந்து நின்றார்கள்.

அங்கிருந்து பார்க்கும்போது... தெப்பக்குளமும் பச்சைப் பசேலென்று கண்களைக் கட்டிப் போட்ட வயல் வெளிகளும் பிரமாண்டமான ஏரியும்... தூரத்தில் மிகச் சிறியதாய் தெரிந்த குன்றத்தூர் முருகன் கோவில் கோபுரமும்... ரம்யமாய் மனதை ஈர்க்கத்தான் செய்தன.

கல்கி மண்டபத்து திண்டில் அமர்ந்தபடி... தூரத்தில் தெரிந்த குன்றத்தூர் கோவில் கோபுரத்தில் யோசனையுடன் பார்வையைப் பதித்திருந்த மீராவை ஊன்றிப் பார்த்தான் கோகுல்.

சுத்தமான மலைக் காற்று மந்த மாருதமாய் தவழ்ந்து வந்து அவளது கூந்தலைக் கலைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

முகத்தில் மோதிய முடிக் கற்றையை ஒதுக்கி விட்டாள்... காலை நேரத்து பொன் மஞ்சள் வெயிலில் சிற்பி செதுக்காத பொற் சிலையாய் அமர்ந்திருந்தவளையே கூர்ந்து பார்த்தான்.

''இந்த இடம் ரொம்ப ரம்யமா இருக்கு மீரா! மலைக்காத்து அள்ளிக்கிட்டுப் போகுதே! மனசுக்கு நிறைவா இருக்கு. இத்தனை காலமா இப்பேர்ப்பட்ட அற்புதமான கோவிலைப் பார்க்காம மிஸ் பண்ணிட்டேனே?



''நீ தினமும் இங்க வந்து தரிசனம் பண்ணுவியா? டெய்லி படியேறி வர்றது சிரமம் தான் இல்லையா? நூத்தம்பது படிக்கட்டு இருக்குமா?''

''இருநூத்தம்பது படிக்கட்டுகள். சனி, ஞாயிறு நாட்கள்லே வெளியூர் பக்தர்கள் நிறைய வருவாங்க... நான் சனி, ஞாயிறு நாட்களைத் தவிர்த்து தினமும் வந்துருவேன்.

''கூட்டத்தைப் பார்த்தா... மனசு ஸ்வாமி மேல லயிக்காது. நான் இந்த விஷயத்துல மட்டும் தனிமை விரும்பி! மலைக்காத்தை சுவாசிச்சிக்கிட்டே... ரம்யமான காட்சிகளைப் பார்த்து லயிச்சுக்கிட்டே மாயமாய் படியேறிடலாம்.

''சிரமம் தெரியாது. கீழே இருக்கிற ஆஞ்சநேயர் ஸ்வாமி மிகுந்த வரப்பிரசாதி! கீழேயும் பெரிய கோவில் இருக்கு. நீர்வண்ணப் பெருமாளுக்கு தனி சன்னதி.

''திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற ஸ்தலம். மொத்தத்துல இது பிரார்த்தனை ஸ்தலம்! நினைச்சது நிறைவேறும்னு சொல்வாங்க.''

தன்னுடைய ஊரில் அமைந்துள்ள திருக்கோவிலைப் பற்றிப் பேசும்போது... மீராவின் அழகிய விழிகள் அசாத்தியமாய் பளபளப்பதை ரசித்துப் பார்த்தான் கோகுல்.

''நூத்தியெட்டு திவ்ய தேசங்கள்லே இதுவும் ஒண்ணு. மூச்சிரைக்க வேகமாப் படியேறி வந்து மூலவரையும் ரங்கநாயகித் தாயாரையும் தரிசனம் பண்ணிட்டாலே... மனசுல உள்ள கவலை பாரம் எல்லாம் குறைஞ்சு போயிடும்.

''சில சமயங்கள்லே தாத்தாவும் கூட வருவாரு. அவர் வந்தா சட்டுன்னு மலையை விட்டு இறங்க மனசு வராது. புளியோதரை பொட்டலங்களை வாங்கி... மெல்லக் கொறிச்சுக்கிட்டே... அந்திச் சூரியன் வானத்தை செக்கர் வானமாய்

சிவக்க வைச்சுட்டு மெல்ல அஸ்தமிக்கிற அழகை... அணு அணுவாய் ரசிப்போம்.

"வித விதமாப் பறவைங்க சங்கிலித் தொடர் போல கூட்டம் கூட்டமா மலையைச் சுத்தி பறந்து போறதை... அண்ணாந்து ரசிச்சு கிட்டே இறங்க ஆரம்பிப்போம்.

"கோடை காலத்துல கூட இந்த கல்கி மண்டபத்துல மலைக் காத்து அள்ளிக்கிட்டுப் போகும்."

"இனி நாமளும் அடிக்கடி இங்க வந்துட வேண்டியது தான்" என்று கூறியபோது... மீராவுக்கு சந்தோஷம் பிடிபட வில்லைதான். இன்று...

அதிகாலையில் தான் கண்ட கனவு அவளுக்கு மெல்ல ஞாபகத்திற்கு வந்தது.

'குளித்து விட்டு ஈரம் சொட்டச் சொட்ட வெளியில் வந்த கோகுல்... மீரா எதிர் பாராத தருணத்தில் அவளருகே வந்து தலையை வேகமாக அசைக்கிறான்.

'மழையில் நனைந்த பஞ்ச வர்ணக் கிளியொன்று சிறகு களைப் படபடவென்று உதறும்போது... திடுதிப்பென்று அந்த நீர்த்துளிகள் முகத்தில் பட்டாற் போன்று... சுகானுபவமாக இருக்கின்றது.

'அன்றலர்ந்த பன்னீர் ரோஜா! அதன் இதழ்களுக்கிடையே பனி முத்துக்கள் ஒளிந்து கொண்டிருக்க... அதை மிருதுவாக இலையுடன் சேர்த்துப் பறித்து... மிக மென்மையாக இடது கன்னத்தில் தட்டியது போல்... கோகுல் தன் இதழ்களால் அவளது இடது கன்னத்தில் ஒற்றிய போது... சிலிர்த்துப் பரவசம் அடைகிறாள் மீரா.'

கனவு தந்த பரவசத்தில் தூக்கம் இழுத்துக் கொண்டு போனதில் மீராவால் வழக்கம் போல் நான்கு மணிக்கு எழுந்து கொள்ள முடியவில்லை.

ஐந்து மணியாகும்போது தான் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.



அதிகாலைக் கனவு பலிக்கும் என்பார்களே? இந்தக் கனவு பலிக்குமா? உள்ளூர குட்டியாய் ஏக்கம் ஜனித்தது.

இருவரும் இணையாய் படிக்கட்டுகளில் இறங்க ஆரம் பித்தனர்.

"பள்ளி கொண்ட பெருமாளே! கோகுலை என் உயிரினும் மேலாக நேசிக்கிறேன். நேசித்தவரையே கை பிடிக்கும் பாக்கியத்தை எனக்குக் கொடுத்தாய்.

"அவர் மனதில் நான் இடம் பெறும் பாக்கியத்தையும் எனக்குத் தந்தருள் பகவானே."

மனதிற்குள் பிரார்த்தனை செய்தபடியே படியிறங்கி யவள்... தழையக் கட்டியிருந்த பனாரஸ் பட்டுச் சேலையில் கால் இடற குபீரென்று தடுமாறிச் சரிந்தாள்.



## 13

கோகுலுக்கு சர்வமும் பதறியது.

சட்டென்று வலது கரத்தால் அவளது இடுப்பை வளைத்து தடுமாறி சரிந்து விழப் பார்த்தவளை... தாங்கிப் பிடித்தான்.

"ஏ... என்ன மீரா இது? தடுமாறி படிக் கட்டுலே விழுந்திருந்தா... என்னவாகி யிருக்கும்?

"பார்த்து ஜாக்கிரதையா இறங்குடா" அவன் பதறிய பதற்றத்தையும் அவனது கரிசனத்தையும் கண்டவளுக்கு... சந்தோஷத்தில் ஜிவ்வென்று பறப்பதைப் போன்றிருந்தது.

சங்கோஜத்துடன் சட்டென்று விலகிக் கொண்டாள்.

"பிறந்த நாளும் அதுவுமா... இந்நேரம் படிக்கட்டுலே தடுக்கி விழுந்து எசகு பிசகா காயம் பட்டிருந்தா... மனசுக்கு எவ்ளோ கஷ்டமா இருக்கும்? நல்ல காலம்...!"

அவனது அக்கறை சுமந்த வார்த்தைகள்... மனதிற்குள் சிலுசிலுவென்று சாரலடித்தன.

'பார்த்து ஜாக்கிரதையா இறங்குடா' என்று அவன் கூறியது... திரும்பத் திரும்ப இதமாய் மென்மையாய் எதிரொலித்து அவளது மேனியை சிலிர்க்க வைத்தது.

'கூடிய விரைவில் இவரது மனதில் உள்ள ரணம் ஆறி விடும். மனம் தெளிவடைந்து... மனப்பூர்வமாக இவர் என்னை விரைவில் ஏற்றுக் கொள்ளுவார்' என்று மீராவின் மனதில் நம்பிக்கை முளை விட்டது.

அம்மா சாந்தா உத்தரவிட்டது போல்... மாலையில் அஷ்ட லட்சுமி ஆலயத்திற்கும் அவளை அழைத்துச் சென்றான்.

தரிசனம் முடிந்து அர்ச்சனைக் கூடையுடன் காரில் ஏறும் போது புன்னகை தவழ அவன் ஏற இறங்கப் பார்த்தபடி, "இளஞ்சிவப்பு வண்ண பனாரஸ் பட்டுப் புடவை உனக்கு ரொம்பவே எடுப்பா இருக்கு மீரா" என்றான்.

"தேங்க் யூ! இ... இது அம்மா எனக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்தது தான்."

"ஓ... நான் உனக்கு பெர்த் டே கிஃப்ட் எதுவுமே தரலை இல்லையா?"

இன்பப் பரவசத்தில் மீராவுக்கு மூச்சுத் திணறுவது போலிருந்தது.

"அ... அதெல்லாம் எதுக்கு? எனக்கு உங்க எல்லாருடைய அன்பும் ஆசீர்வாதமும் கிடைச்சிருக்கே?

"ஒரு பொண்ணுக்கு இதைவிட வேற என்ன வேணும்? உங்க முகத்துல இருந்த வருத்தமும் குழப்பமும் கொஞ்சம் மறைஞ்சிருக்கு.

"என்கிட்ட சகஜமா சந்தோஷமா நாலு வார்த்தை பேசறீங்க... உங்க வேலைகளை எல்லாம் ஒதுக்கி வச்சுட்டு... என்னோட பிறந்த நாளுக்காக காலையில திருநீர் மலைக் கோவிலுக்கு வந்தீங்க...



"நாங்க முன்பு குடியிருந்த தெருவுக்கு வந்து... பர்வதம் அம்மா வீட்டுக்கு என் கூட வந்து... அந்த தம்பதிங்க கிட்டே சேர்ந்தாப்பல ஆசீர்வாதம் வாங்கினீங்களே?

"இதோ... இப்பவும் அஷ்ட லட்சுமி தாயாரை வணங்கிட்டு வந்திருக்கோம்.

"அம்மா அப்பாவை இழந்த அனாதை நான். தாத்தாவோட நிழல்ல அவரோட அன்பை மட்டுமே பார்த்து வளர்ந்தவ. அவர் திடீர்னு கண்ணை மூடினதுமே... உலகமே சூனிய மாயிடுச்சு.

"விநாயக மூர்த்தி சித்தப்பா வீட்டுலே அடைக்கலமா அண்டி வாழ்ந்தப்போ... எனக்கு 'அன்பு' கிட்டவே இல்லை...

"பூர்வ ஜென்மத்துல நான் ஏதோ பண்ணியம் பண்ணி இருக்கணும். உங்களைக் கைபிடிக்கிற பாக்கியம் கிடைச்சது.

"வீட்டுலே அம்மாவும் அப்பாவும் பெற்ற மகளுக்கும் மேல... என் மேல பாசத்தைப் பொழியறாங்க...

"கார்த்தால அம்மாவோட அறைக்குப் போனப்போ... என்னைக் கிட்டக்க வரச் சொல்லி தலையைத் தொட்டுத் தடவி பிறந்த நாள் வாழ்த்துக் கூறி... 'ஃபோன் பண்ணி நான் புடவையைக் கடையிலிருந்து வரவழைச்சேன். கலர் பிடிச்சிருக்கா பாரு'ன்னு சொன்னப்போ...

"நான் கண் கலங்கிட்டேன் தெரியுமா? கோடானு கோடி கொடுத்தாலும் இந்த சந்தோஷத்துக்கு ஈடாகுமா?

"மனசுக்கு நிறைவா இருக்குங்க... எனக்கு இது போதும்!" கண்களில் நீர்த்திரையிட... நா தழு தழுக்க மீரா நீளமாகப் பேசி முடித்தபோது... கோகுலின் இதயத்தில் ஈரம் சுரந்தது.

அன்றிரவு... அனைவரும் சாப்பிட்டு முடித்த பின்பு பாத்திரங்களை ஒழித்துப் போட்டு தேய்த்துக் கழுவிக் கவிழ்த்து விட்டு... காஸ் அடுப்பையும் மேடையையும் துடைத்து விட்டு... ஈரக் கைகளை டவலில் துடைத்துக் கொண்டு...

அவள் கிச்சனை விட்டு வெளிப்பட்டு மாடியேறப் போன போது... கங்காதரன் எதிரில் வந்து நின்றார்.

''எ... என்னப்பா? குடிக்க தண்ணி வேணுமா?''

''இல்லம்மா... உன் கிட்ட தான் பேச வந்தேன். இந்தக் கோகுல் பயலுக்கு 'வேவரிங் மைண்ட்' ஜாஸ்தி!

''பழசைப் போட்டு இன்னமும் குழப்பிக் கிட்டு இருக்கான். இன்னமும் மன உளைச்சல்லே இருந்து அவன் விடுபட லேங்கிறது... என் உள் மனசுக்கு நல்லாவே தெரியுது...

''இன்னிக்கு ஏதோ அவன் கிட்டே மாற்றம் தெரியுது. சகஜமா இயல்பா பேசிச் சிரிக்கிறதைப் பார்த்தப்போ... மனசுக்கு சந்தோஷம் தான்!

''இந்த சந்தோஷம் நீடிக்கணும்கிறது தான் என்னோட வேண்டுதல்!

''சரி... விஷயத்துக்கு வர்றேன் மீரா! உன்னோட படிப்பு பாதியில நிக்க வேணாம்... தொடர்ந்து படிச்சு நீ முடிக்கணும்.

''கம்ப்யூட்டர் கோர்ஸ் ஏதோ கத்துக் கிட்டிருந்ததா நீ சொன்ன ஞாபகம்... அதை நீ தொடரணும்.

''கம்ப்யூட்டர் சென்டர்லே பேசி ஏற்பாடு பண்ணிட்டேன். தினமும் சாயந்தரம் நம்ம கார்லே போயிட்டு வந்துடு.

''அப்புறம் கொஞ்சம் டயம் ஒதுக்கி அதோ அங்க இருக்கிற என்னோட ஆபீஸ் ரூமுக்கு வந்துடு...

''அரை மணி நேரம் ஒதுக்கி கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்து பைல்ஸை ஒபன் பண்ணிப் பாரு. நானும் எக்ஸ்ப்ளைன் பண்றேன்.

''நம்ம கம்பெனிகளைப் பத்தின அத்தனை விவரங்களையும் நீ நல்லாப் புரிஞ்சுக்கணும்.

''எத்தனை காலத்துக்கு நானே எல்லாத்தையும் கட்டி மேய்க்க முடியும் சொல்லு?



''இந்தப் பயலும் இப்போதைக்கு எட்டிப் பார்க்க மாட்டான் போல... ஸோ... கூடிய விரைவில நிர்வாகத்தை நீ ஏத்து நடத்தற அளவுக்கு உன் திறமையை வளர்த்துக்கணும். அதான் ஆசை. சரியாடா?''

''என்னப்பா இது? நா... நானா?'' திணறினாள் மீரா.

''நீயே தான். உன்னால முடியும்.. உன்கிட்ட அந்தத் திறமை இருக்கு. இந்தப்பா சொன்னா மறுக்க மாட்டே இல்லியா? ஒகேமா... ஆல் தி பெஸ்ட்!'' அவளது உச்சந் தலையில் கையை வைத்து வருடி விட்டு நகர்ந்தார் கங்காதரன்.

மாமனாரின் பாசத்திலும் பரிவிலும் நெக்குருகிப் போனாள் மீரா.

ஆனந்தத்தில் ஊற்றெடுத்து வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு... மாடியேறி மெல்ல தங்களது அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டாள்.

படுக்கையை தரையில் விரித்துவிட்டு தலையணையை எடுத்துப் போட்ட தருணத்தில்... பாத்ரூமிலிருந்து குளித்து விட்டு ஈரம் சொட்டச் சொட்ட வெளிப்பட்டான் கோகுல்.

''மீரா!'' என்றழைத்தபடி வலது கண்ணை மெல்லக் கசக்கிக் கொண்டு அவளருகே வந்த கோகுல்... திடீரென்று தலையை பலமாக ஆட்டினான்.

நீர்த் திவலைகள் சிதறி அவளது பூ முகத்தை ஸ்பரிசித்த போது... மீராவுக்கு நாடி நரம்புகளில் குளிர் பரவியதைப் போன்றிருந்தது.

'என்னது இது? அதிகாலையில் கனவில் கண்டது போல் நடக்கிறதே?' திக் பிரமை பிடித்தாற் போன்று... சிலையாய் நின்று விட்டாள்.

''மீரா... சாயந்தரம் அஷ்ட லட்சுமி கோவிலுக்குப் போயிட்டு அப்படியே கடற்கரையோரமா காத்தாட நின்னுட்டு வந்தோமே? அப்போ கண்ணுல ஏதோ தூசு பட்டாப்பல இருந்தது.

''அப்பத்துலே இருந்து நெருநெருன்னு கண்ணை அது உறுதிக்கிட்டே இருக்கு. நல்லா ஜலம் விட்டு அலம்பிப் பார்த்தும் போகலை.

''கொஞ்சம் கண்ணுல ஊதி விடறியா?'' என்றபடி நெருங்கி வந்து நின்றான்.

சங்கோஜத்துடன் பார்வையைத் தழைத்துக் கொண் டிருந்தவள்... நிஜமான அக்கறையுடன் நிமிர்ந்து லேசாய் சிவந்து போயிருந்த வலது கண்ணை ஊன்றிப் பார்த்தாள்.

''ரொம்ப உறுத்துதா? கண்ணு சிவந்து போச்சே?'' என்றவள் உப்பென்று வாயைக் குவித்து மூன்று முறை ஊதினாள்.

''இ... இப்போ பரவாயில்லையா?'' விழிகளை நான்கைந்து முறை மூடி மூடித் திறந்தவன்... மெல்லத் தலையாட்டினான்.

''அப்பாடா... இப்போ தான் உறுத்தல் நின்னுருக்கு மீரா. ஆனா இன்னொரு உறுத்தல் ஸ்டார்ட் ஆயிடுச்சே?'' பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு பேசியவனை... குழப்ப முலாம் பூசிய முகத்தோடு ஏறிட்டாள் மீரா.

''இன்னொரு உறுத்தலா? அ... அந்தக் கண்ணுலேயுமா?'' வெகுளியாய் கேட்டாள்.


''இல்லல்ல... உறுத்தல் மனசுல தான்! உனக்கு பெர்த் டே கிஃப்ட் எதுவும் நான் தரலை இல்லையா? அதான் உறுத்துது. எனக்கு இந்த உறுத்தல் தேவையா மீரா? தேவை இல் லைன்னு... டிஸைட் பண்ணிட்டேன். சரிதானே குட்டி? அதனால்...'' என்றபடி விழிகளில் குறும்புத் தனம் வழிய... மந்தகாசமாய் புன்னகைத்தபடியே அவளது அழகு முகத்தை பூவைப் போல்... இரு கைகளினால் ஏந்தினான்.

குனிந்த மிக மிருதுவாக தன் இதழ்களால் அவளது இடது கன்னத்தில் ஒற்றினான்.

மிரண்டு போய் அவனை விழிகள் விரியப் பார்த்த மீரா... கூச்சத்துடன் சட்டென்று மான் விழிகளை மூடிக் கொண்டாள்.



இதழ்களில் குட்டி முறுவல் பூக்க... உரிமையாய் அவளை தன் நெஞ்சோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான்.



# 14

'நல்லவர்களைக் கடவுள் சதா சோதித் துக் கொண்டே இருப்பார்' என்பார்கள்.

மீராவின் விஷயத்திலும் அது சரியாகத் தான் இருந்தது.

ஒரு தலையாய் கோகுலை அவள் காதலித்தாள். அவனையே கரம் பிடிக்கும் பாக்கியம் அவளுக்கு அதிர்ஷ்ட வசமாய் கிடைத்தது.

கடைசியில்... அவனது மனதிலும் இடம் பிடித்து விட் டாள். மனப்பூர்வமாக அவன் மனைவி என்ற அந்தஸ்தை... அவளுக்கு வழங்கி விட்டான்.

பெற்ற தாய் தந்தையரைப் போல் பாசத்தைக் கொட்டும் மாமனார் - மாமியார்.

உயிருக்கும் மேலான கணவன் கோகுலின் அருகாமையும் அரவணைப்பும் கிடைத்து விட்டன.

'தாத்தா! நான் பாக்கியசாலி தாத்தா... உங்க ஆசீர்வாதத் தால எனக்கு நிறைவான வாழ்க்கை கிடைச்சிருச்சு. காலமெல் லாம் நான் பட்ட கஷ்டத்துக்கு கடவுள் என்னைக் கண் திறந்து பார்த்துட்டாரு தாத்தா!

'உங்க வாக்கு பலிச்சுடுச்சு தாத்தா... உங்க ஆத்மாவும் குளிர்ந்து சாந்தியடைஞ்சிருக்கும்னு நம்பறேன் தாத்தா' என்று வழக்கம் போல் தாத்தா சதாசிவத்தின் படத்தைப் பார்த்து மானசீகமாகப் பேசினாள் மீரா.

அவளது நிம்மதியும், சந்தோஷமும் மூன்றே நாட்களோடு முடிவுக்கு வந்து விடும் என்று... அவள் கனவிலும் கருத வில்லை.

அன்று, அலுவலகத்தில் தனது கேபினுக்குள் அமர்ந்த படி... தான் உருவாக்கிய பிராஜெக்ட் ரிப்போர்ட்டை சரி

பார்ப்பதற்காக கணினி திரையில் பார்வையைப் பதித்தபடி... மௌஸை நகர்த்திக் கொண்டிருந்தான் கோகுல்.

திடீரென்று அவனது செல் போன் சிணுங்கியது. கணினி திரையிலிருந்து பார்வையை விலக்காமல்... 'செல்'லை எடுத்து ''ஹலோ'' என்றான்.

''ஹலோ... ஹலோ... நான் தான் கோகுல்... ச... சஞ்சு பேசறேன்.''

அந்தக் குரலைக் கேட்டதும் பகீரென்று தூக்கி வாரிப் போட்டது. 'இவள் எதற்கு நமக்கு போன் செய்கிறாள். திடீரென்று?' என்ற கேள்விக் குறியுடன் நெற்றி சுருங்க ஒரு கணம் யோசித்து விட்டு,

''சொல்லு... ஸாரி... சொல்லுங்க சஞ்சனா'' என்றான்.

''கோகுல்! நீங்க பேசற விதத்துலேயே நான் புரிஞ்சு கிட்டேன். உங்களுக்கு என் மேல இருக்கிற கோபம் தணிய லேன்னு... நான் நல்லாவே புரிஞ்சுகிட்டேன்.

''தப்புதான்... நான் செஞ்சது மகா தப்பு தான்! என் வீட்டுலே உள்ளவங்க என்னை 'பிரெய்ன் வாஷ்' பண்ணி... தப்பான முடிவை எடுக்க வச்சுட்டாங்க கோகுல்.

''புத்தி பிசகிப் போய் நானும் தப்பு பண்ணிட்டேன் கோகுல். உங்களைத் தூக்கியெறிஞ்சுட்டு நிரஞ்சனுக்கு கழுத்தை நீட்டினது உண்மைதான்!

''கல்யாணமாகி அமெரிக்கா போன பின்னாடி தான்... ஒரு உண்மை தாமதமா எனக்குப் புத்தியில உறைச்சது கோகுல்!

''உங்களை என்னால என் மனசுல இருந்து வேரோட தூக்கி எறிய முடியலைங்கிறதை நான் புரிஞ்சுகிட்டேன். நம்மோட காதல் உண்மையானது தான்... என் மனசு பூராவும் நீங்க தான் விஸ்வரூபம் எடுத்திருக்கீங்கன்னு புரிஞ்சுகிட்டேன்.

''என்னால அந்த வாழ்க்கையில ஒட்ட முடியலை. உங் களை உதாசீனம் பண்ணிட்டுப் போன பாவத்துக்கு... எனக்கு



நல்ல தண்டனை கிடைச்சிருச்சு. நிரஞ்சன் நல்லவரில்ல கோகுல்! ஹி இஸ் எ வுமனைஸர்! எஸ்...

''இந்த உண்மை தெரிஞ்சதும் நான் வெடிச்சுட்டேன். நியாயம் கேட்டதுக்கு 'நான் பணத்துலேயே புரள்ற கோடீஸ் வரன்... அப்படித்தானிருப்பேன். இஷ்டமிருந்தா இரு... இல் லேன்னா விலகிப் போயிடு' அப்படின்னு... சர்வ சாதாரணமா சொன்னப்போ... நான் ஷாக் ஆயிட்டேன்.

''என் வாழ்க்கையில இப்படி மண்ணள்ளிப் போட்டுட் டீங்களேப்பா?' அப்படின்னு அப்பாவுக்கு போன் பண்ணிக் கதறினேன்.

''அட்ஜஸ்ட் பண்ணி வாழ்ந்து பாருன்னு... அட்வைஸ் பண்ணினாங்க... ப்ச்! டெர்ம்ஸ் ஒத்துப் போகலை...

''மனசுக்குள்ளே உங்களை சுமந்துகிட்டு... பிடிக்காத வாழ்க்கையை அந்த ஆளோட வாழறதுலே... என்ன அர்த்தம் இருக்க முடியும்?னு தோணுச்சு...

''நிரஞ்சனும் டைவர்ஸுக்குத் தயாரா இருக்கிறப்போ... எனக்கு அதுலே எந்தப் பிரச்சினையும் இல்லை... எல்லாப் பேப்பர்ஸ்லேயும் ஸைன் பண்ணி முகத்துல தூக்கி எறிஞ் சுட்டு... ஒரு சுதந்திரப் பறவையா நான் திரும்பி வந்துருக் கேன் கோகுல்!

''நீ கிடைத்தற்கரிய பொக்கிஷம் கோகுல்! உன்னைப் போய் நிராகரிச்சேனே? கண்ணிருந்தும் குருடியாயிட்டேனே?

''அதை நெனச்சு நெனச்சு குற்ற உணர்ச்சி தாங்காம... நான் கதறிட்டிருக்கேன்.

''என் தலையில நானே மண்ணள்ளிப் போட்டுக்கிட்டேன் கோகுல்.

''துக்கம் தாளாம மனசு வெடிச்சே நான் செத்துருவேன் போலிருக்கு கோகுல்!

''கோகுல்... மை டியர்... டார்லிங்! என்னை 'சஞ்சு'ன்னு உரிமையா நீங்க கூப்பிடவே மாட்டீங்களா?

"இந்தப் பாவியை மன்னிக்கவே மாட்டீங்களா? மன்னிப் பீங்க உங்களுக்கு இளகின மனசு தானே?

"இரக்க சுபாவம் ஜாஸ்தி உள்ளவராச்சே? உண்மையான புனிதமான காதல்... என்னிக்கும் மாறாது அழியாதுன்னு சொல்வாங்கல்ல?

"என் மேல உங்களுக்கு கருணை பிறக்கலையா? கொஞ்சம் கூட மனசு இளகலையா?

"இப்போ மறுபடியும்... நல்லா உணர்ந்து சொல்றேன். இது பூர்வ ஜென்ம பந்தம் தான் கோகுல்! ஐ லவ் யூ ஸோ மச் டியர்!

"அதான்... இத்தனை நடந்த பிறகும்... இப்போ உங்க கிட்டே மறுபடியும் நான் பேசிட்டிருக்கேன்.

"நம்ம ஆபீசுக்குப் பின்னாடி இருக்கற திறந்த வெளி உணவகத்துல உட்கார்ந்து தான் பேசிட்டிருக்கேன்.

"நீங்க வர்றீங்களா கோகுல்? உங்களைப் பார்த்து நான் கதறணும். உங்க கால்லே விழுந்து நான் மன்னிப்பு கேட்கணும்.

"அதுக்கு வாய்ப்பு தருவீங்க தானே கோகுல்?

"இல்லேன்னா... எதிர்த்தாப்ல இருக்கிற பீச்சுல... ஐ மீன் என்னோட பாவத்தைக் கழுவிக்கிறதுக்காக.. மொத்தமா கடல் நீர்லே இறங்கிப் போயிடறேன்.

"பத்து நிமிஷத்துக்குள்ளே நீங்க வரலேன்னா... என்னோட முடிவுல எந்த மாற்றமும் இருக்காது கோகுல்!

"இது உங்க மேல சத்தியம் டார்லிங்!"

உருக உருகப் பேசிவிட்டு... பட்டென்று செல்போனை வைத்து விட்டாள் சஞ்சனா.

ஆடிப்போய் விட்டான் கோகுல்.

கல் மனதும் கரையும் வண்ணம் அவள் கதறிக் கொண்டே பேசியதில்... அவள் மீது இருந்த கோபமும் ஆத்திரமும் மாயமாய் மறைந்து விட்டிருந்தன.



அதுவும் தன்னை 'கிடைத்தற்கரிய பொக்கிஷம்' என்றும் 'டார்லிங்' என்றும் 'மைடியர்' என்றும் அருமை உணர்ந்து அவள் பேசியபோது... கோகுலின் கோப தாபமெல்லாம் பஞ்சாய் பறந்து விட்டிருந்தன.

கோகுல் உண்மையில் ஆத்மார்த்தமாகத் தானே சஞ்சனாவைக் காதலித்தான்.

மனம் தெளிவடைந்து தேறி... மனைவியுடன் ஒன்றி வாழத் தொடங்கி விட்ட போதிலும்... உள்ளூர நீறு பூத்த நெருப்பாய் சஞ்சனாவின் நினைப்பு இருந்து வந்தது என்பது தான் நிஜம்!

உருகி உருகிக் காதலித்தவள்... மனம் திருந்தி வந்திருக் கிறாள். தன் அருமையை உணர்ந்து வருந்துகிறாள்.

அவனது கருணைக்காக இறைஞ்சுகிறாள். அவன் கல் மனதுடன் பாரா முகமாய் இருந்து விட்டால்...

உயிர் துறக்கவும் துணிந்து விட்டாளே?

எல்லாவற்றையும் விட... அவள் ஒரு பேரழகி ஆயிற்றே?

உலகி அழகிப் போட்டியில் கலந்து கொண்டால்... கட்டாயம் பரிசைத் தட்டிக் கொண்டு வந்து விடுமளவு... கட்டான தேகமும் ஒயிலான எழிலும் கொண்ட தேவதை... மனம் திறந்து பேசி விட்டாள்.

'ஐ லவ் யூ ஸோ மச் டியர்' என்று சொல்லி விட்டாள்.

தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் சஞ்சுவின் உயிருக்கு ஆபத்தாய் முடிந்து விடுமே...?'

அவனையும் அறியாமல்... விருட்டென்று ஆபீஸை விட்டு வெளியேறினான்.

... வீட்டைப் பற்றியும் அப்பா அம்மாவைப் பற்றியும்... சமீபத்தில் தாலி கட்டிய மனைவி மீராவைப் பற்றியும்... சமூகத்தைப் பற்றியும் அவன் சிறிதும் பயப்படவில்லை.

அவன் மனதை முழுவதுமாக ஆக்கிரமித்து விட்டிருந்தாள் சஞ்சனா.

திறந்த வெளி உணவகத்தில் அவளைக் காணாமல் பதறிப் போனான். கலவரத்துடன் சுற்றும் முற்றும் பார்வை யால் சலித்தான்.

கடலை நோக்கி விரக்தியுடன் நடந்து போய்க் கொண் டிருந்தவள் இவனது கண்களில் சிக்கியது தான் தாமதம்...

"சஞ்சு! டோண்ட் கோ... நான் வந்துட்டேன். அவசரப்பட்டு தப்பான முடிவை எடுத்துடாதே டார்லிங்" என்று வயிற்றை எக்கிக் கத்திவிட்டு தபதபவென்று ஓடினான்.

அவனது இளகிய உள்ளத்தைப் புரிந்து கொண்டவள் சஞ்சனா. தான் கண்ணீர் விட்டுக் கதறினால் அவன் தாங்க மாட்டான் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும்.

அவனது பலவீனத்தைப் புரிந்து கொண்ட சாகசக்காரி... கோகுல் அருகில் வந்து நின்றதுமே... முகத்தில் அறைந்து கொண்டு கோவென்று கதறினாள்.

"நீங்க என்னை மன்னிப்பீங்கன்னு... எனக்குத் தெரியும் கோகுல்! எல்லாம் போச்சே... என்னோட முட்டாள் தனத்தால உங்களை இழந்துட்டு நிக்கிறேனே?

"உங்களுக்கும் மனைவி வந்துட்டாளே? இனி என் கதி என்ன கோகுல்? எப்படிப் பார்த்தாலும் நான் சாகறது தான் சரி."

"பைத்தியம் மாதிரிப் பேசாதே சஞ்சு! உனக்கு நானிருக் கேன். இனி... யாருக்காகவும் எதுக்காகவும் உன்னை நான் விட்டுக் கொடுக்கப் போறதில்லை.

"வாழ்க்கை வாழறதுக்குத் தான்... நாம்ப நமக்காக வாழ் வோம் சஞ்சு! உனக்கு முன்னாடி... எனக்கு இந்த உலகமே தூசுக்குச் சமானம் டியர்."

"யூ ஆர் கிரேட் கோகுல்! ஐ... ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங்" தேம்பிய வண்ணம் அவனது பரந்த மனதில் சாய்ந்து



கொண்டவளை... இறுக அணைத்துக் கொண்டான் கோகுல்.



## 15

ஹாலில் அலங்காரமாக மாட்டப்பட் டிருந்த கடிகாரத்தில் "குக்... குக்... குக்" என்று இரட்டைக் குருவிகள் பன்னிரண்டு முறை வெளியில் தலைகாட்டி, கதவை மூடிக் கொண்டு அடங்கின.

டைனிங் டேபிளின் மீது தன்னையும் அறியாமல் தலை சாய்ந்து கண் அசந் திருந்த மீரா... தூக்கி வாரிப் போட கடிகாரத்தை ஏறிட்டாள். அடி வயிற்றில் பயப்பந்து வேகமாய் உருண்டது.

'அவர் ஒரு நாளும் இப்படித் தாமதமாய் வந்ததில்லையே? பத்தரை மணிக்கு அவருக்கு அப்பா போன் செய்தபோது... 'வருவதற்கு கொஞ்சம் லேட்டாகும்' என்றாராமே...?

'இவ்வளவு நேரமாகியும் வரவில்லையே? வரும் வழி யில்... அவர் ஓட்டி வரும் கார் ஏடாகூடமாக விபத்தில் சிக்கி விட்டதா?

'அவரது செல்லுக்கு முயற்சித்தால்... 'ஸ்விட்ச் ஆப்' என்ற அறிவிப்பு வருகிறதே?

'ஐயோ... கடவுளே! அவர் பத்திரமாக வீடு வந்து சேர வேண்டுமே?

'என் மனதில் ஏதோ ஒன்று பிசைகின்றதே? ஏதோ கெட்டது நடக்கப் போவது போல்... உள் மனதில் பட்சி சொல்கின்றதே?'

"டிங்... டாங்" என்ற காலிங் பெல்லைக் கேட்டதும் தான் அவளுக்குப் போன உயிர் மீண்டது.

கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் போய் கதவைத் திறந்தாள்.

சபாரி கோட்டைக் கழற்றி தன் தோளின் மீது போட்டுக் கொண்டிருந்த கோகுலின் கோலத்தைப் பார்த்ததுமே... அவளது அடிவயிறு சுருண்டது.

கலைந்த கேசம், சிவந்த விழிகள்... நாசிக்குப் பிடிக்காத நாற்றம்... அவனது தள்ளாடிய நடை... எல்லாமாகச் சேர்ந்து 'கோகுல் குடித்து விட்டு வந்திருக்கிறான்' என்று பறை சாற்றின.

'மைகாட்! இவருக்கு சிகரெட் பிடிக்கும் கெட்ட பழக்கம் கூட கிடையாதே? இன்று இப்படிக் குடித்து விட்டு வந் திருக்கிறாரே?

'வீட்டில் பெரியவர்கள் பார்த்து விட்டால்... எவ்வளவு மனவருத்தம் அடைவார்கள்?'

அவனது வலது கையைப் பற்றி தன் தோளில் போட்டுக் கொண்டு கைத்தாங்கலாக அவனை நடத்தி... மெல்ல மாடியேறி தங்களது அறைக்குள் புகுந்து கட்டிலில் அமர்த்தி னாள்.

அவனது கால்களில் இருந்த சாக்ஸை கழற்ற முனைந் தாள்.

சரக்கென்று தன் கால்களை நகர்த்திக் கொண்டான்.

''எல்லாம் என் தலையெழுத்து! கல்யாணமே வேண் டாம்னு ஒதுங்கி இருந்தவனை... இவங்க விட்டுத் தொலைக்க வேண்டியது தானே?

''அடம் பிடிச்சு வலுக்கட்டாயமா எனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வச்சு... என் வாழ்க்கையையே சூனியமாக்கிட்டாங் களே?

''எனக்கு வீட்டுக்கு வரவே பிடிக்கலே... லைபே பிடிக் கலை... வேண்டா வெறுப்பா தான் இன்னிக்கு வந்தேன்...''

விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு கோகுல்... உளறிக் குழறிப் பேசிய வார்த்தைகள்... மீராவின் செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றின.



குபுக் என்று விழிகளில் வெப்ப நீர் ஊற்று பொங்க... மெல்ல எழுந்து நின்றாள்.

''அப்படி வெறுத்துப் போற அளவுக்கு... திடீர்னு என்ன நடந்துச்சுங்க?''

''என் சஞ்சு வந்துட்டா... என் அருமையை உணர்ந்து மொத்தமா வந்துட்டா தெரியுமா?''

''சாகறதுக்கே துணிஞ்சுட்டா... பழசை எல்லாம் நான் மறந்துட்டேன். என் கோபம் எல்லாம் காத்துல பறந்துடுச்சு. ஏன் தெரியுமா? இன்னமும் அவ நீறு பூத்த நெருப்பா... என் மனசுல இருக்கா... அதான்!

''அவ எனக்கு வேணும். அவளுக்கு நான் வேணும்... நாங்க ஒண்ணா சேரணும். அது முடியுமா? நீ குறுக்கே வந்து தொலைஞ்சுட்டியே?

''எங்கப்பா அம்மா என் ஆசைக்கு எப்பவும் தடை சொல்ல மாட்டாங்க... எங்க காதலுக்கு பச்சைக் கொடி காட்டினவங்க தானே?

''அவங்களைப் பத்தி எந்தப் பிரச்சினையும் இல்ல... எடுத்துச் சொன்னா புரிஞ்சுப்பாங்க...

''வாழ்க்கை வாழறதுக்குத் தானே? மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையை மனம் போன போக்குல ஃப்ரீயா வாழறதுலே தானே ஒரு அர்த்தம் இருக்க முடியும்?

''எனக்குப் பிடிக்கலே... கல்யாணமாயிடுச்சுன்னு... சமு தாயத்துக்கு பயந்துகிட்டு ஒப்புக்காக ஒரு வாழ்க்கையை வாழப் பிடிக்கலே...

''அதான் மனசு வெறுத்து முதல் முறையா குடிச்சுட்டேன். கவலையை மறக்கத்தான்... இனி இது தொடரும்... போகப் போக வீட்டுக்கு வர்றதைக் கூட நான் நிறுத்திடுவேன்.

''அவசரக் கல்யாணம் பண்ணி வச்சாங்களே... என்னைப் பெத்தவங்க? அவங்களை சுடச்சுட நாலு கேள்வி கேட்க லாம்னு தான் வந்தேன்.

"கேட்பேன்... காலையிலே நல்ல நிதானத்துல கேட்கிறேன். என் வாழ்க்கையே வறண்டு போய் பாலைவனமாயிடுச் சுல்ல? அதுக்கு அவங்க தானே காரணம்?..."

மீராவுக்குக் காலடியில் தரை நகர்ந்து செல்வது போலிருந்தது. உலகமே தட்டாமாலையாகச் சுற்றுவது போலிருந்தது.

திடீரென்று வேருடன் பிடுங்கி தூர எறிந்து விட்டாற் போன்ற அதிர்ச்சியில்... கிடுகிடுவென்று அவளது மேனி நடுங்கியது.

மனதிலிருந்த குழப்பம் தெளிவடைந்து... அவளை மனப்பூர்வமாய் மனைவியாய் ஏற்றுக் கொண்டானே?

'கடந்த மூன்று நாட்களாய் என்னிடம் அன்னியோன்யமாய் அன்பாய் நடந்து கொண்டாரே?

'அளவு கடந்த சந்தோஷத்துடன் 'நீ கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும் மீரா'' என்று கிசுகிசுத்து விட்டு நெற்றியில் இதமாய் முத்தமிட்டாரே? பிடிக்காமலா அப்படி நடந்து கொண்டார்?

'அவரது சந்தோஷத்திற்கு குறுக்கே நான் வந்து விட்டதாகக் கூறுகிறாரே?'

''எ... என்னங்க! அவசரப்பட்டு பெரியவங்க கிட்ட ஏதாச்சும் பேசி அவங்க மனசைக் காயப்படுத்திடாதீங்க.

''இப்போ உங்ளுக்கு என்ன பிரச்சினை? குறுக்கே நான் நிக்கிறேன். அவ்ளோ தானே? இனிமே நான் நிக்க மாட் டேங்க... விலகிடுறேன்.

''விலகாம இருந்தா... நீங்க விரக்தியில குடிச்சு உங்களை நீங்களே அழிச்சுப்பீங்க... நான் என் உயிருக்கு மேலா உங்களை நேசிக்கிறேங்க.

''உங்க சந்தோஷம் தான் என் சந்தோஷம்! என்னால உங்க சந்தோஷம் கெட வேணாம்...



''உங்க வாழ்க்கை வறண்டு பாலைவனமா ஆகறதுக்கு... நான் காரணமா இருக்க மாட்டேன்.

''நீங்களும் உங்க சஞ்சனாவும் ஒன்னா சேரணும். நீங்க சந்தோஷமா வாழணும். உங்க வாழ்க்கை லட்சோப லட்சம் பூக்கள் பூத்துக் குலுங்கற சோலைவனமா ஆகணும். அதான் என் ஆசை!

''தயவு செய்து காலையில நீங்க எதைப் பத்தியும் பெரியவங்க கிட்டப் பேசவே வேணாம். நான் எல்லாத்தையும் பேசிக்கிறேன்.

''எ... எவ்ளோ சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரத்துல நான் வீட்டை விட்டுப் போயிடறேன்.

''இ... இப்போ உங்களுக்கு திருப்தி தானேங்க?'' தலையை சாய்த்து அவள் பேசுவதை உன்னிப்பாய் கேட்டுக் கொண்டிருந்த கோகுலுக்கு பரம திருப்தி!

''தேங்க் யூ மீரா! உன் கிட்ட எனக்குப் பிடிச்ச குணமே இதுதான்! அடுத்தவங்க மனசைப் புரிஞ்சு நடந்துக்கிறே... பாரு! அப்பாடா... மலை போல தெரிஞ்ச பிரச்சினை இப்போ பனி போல விலகியாச்சு.

''தேங்க் யூ... சஞ்சு கிட்ட இந்த விஷயத்தைச் சொன்னா... சந்தோஷம் தாளாம ஆகாசத்துக்கும் பூமிக்குமா ஒரு குதி போடுவா'' எங்க ரெண்டு பேத்தையும் ஒண்ணா சேத்து வச்சதுக்கு... உனக்கு ஆயிரம் நன்றி மீரா!

''நீ அற்புதமான பெண் தான் மீரா! பிரச்சினையோட மையம் எதுன்னு தெரிஞ்சு புள்ளி குத்தினாப்பல டக்குனு ஒரு தீர்வுக்கு வந்து விலகறியே கிரேட்!''

குமுறிக் கொண்டு வந்த அழுகையை... கீழுதட்டை அழுந்தக் கடித்து அடக்கினாள் மீரா.



## 16

மறுநாள் காலை அவன் அலுவலகத் திற்குக் கிளம்பிச் சென்றதும்... கங்கா தரனின் அறைக்கு வந்தாள் மீரா.

"என்னம்மா மீரா? ஏதோ முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேசணும்னு சொன்னியே? சொல்லும்மா..." அவரும் அலுவலகத்திற்கு செல்லத் தயாராய் இருந்தார்.

விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டு... "நான் விலகிடறேன் அப்பா! நான் வீட்டை விட்டுப் போயிட்டா... அவருக்கு நிம்மதி நிச்சயமா கிடைச்சுடும். அவரோட சந்தோஷம் தான் எனக்கு முக்கியம். என் முடிவுலே எந்த மாற்றமும் இல்ல அப்பா" என்று கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு... வைராக்கியமாய் பேசி முடித்தாள்.

"என்னம்மா இது? அந்தப் பயல் என்ன நினைச்சுகிட்டான்? கல்யாணங்கிறது ஆயிரங் காலத்துப் பயிர்... அதை என்ன கிள்ளுக் கீரைன்னு நினைச்சட்டானா?

"ஊரறிய உனக்கு தாலி கட்டியிருக்கான். இவனுக்கு துரோகம் பண்ணிட்டுப் போனவள் திரும்பி வந்தாக்க... இவன் என்ன பண்ணி இருக்கணும்?

"நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு கேள்வி கேட்டுட்டுத் திரும்பிப் பார்க்காம வந்திருக்க வேணாமா? முதல்லே அவ இருக்கிற திசைப் பக்கம் தலை வச்சுப் படுக்கலாமா?

"இவனை உதறிட்டு இன்னொருத்தனுக்குக் கழுத்தை நீட்டினவள்... இப்போ கட்டின புருஷனையே உதறிட்டு வந்து நிக்கிறா...

"நீறு பூத்த நெருப்பா இன்னமும் அவ மேல எனக்குக் காதல் இருக்கு. அவ கூட வாழப் போறேன்'னு சொல்றானே?

"நாளைக்கு இவனையே அவ உதறிட்டு ஓட மாட்டாள்னு என்ன நிச்சயம்? அதையெல்லாம் விடு மீரா!



"இந்த வீட்டுக்கு வாழ வந்த மருமக நீ... உன்னை அனுப்பிட்டு அந்த சாகசக்காரி கூட இவன் குடும்பம் நடத்தினா... சமுதாயம் காறித் துப்பாதா?

"இவன் போடற ஆட்டத்துக்கெல்லாம்... நாங்க தலை யாட்டிட்டு தாளம் போடுவோம்னு நினைச்சுட்டானா? முடியாதும்மா... அவனை..." கொதித்துக் கொந்தளித்துப் போய் கர்ஜித்தார் கங்காதரன்.

"ப்ளீஸ் அப்பா! நிதானமா யோசிங்க... எடுத்துச் சொன்னா கேட்டுக்கிற மனநிலையில உங்க பிள்ளை இல்லைப்பா...

"வாழ்க்கையை வெறுத்து புல்லா குடிச்சுட்டு தள்ளாடிட்டு நேத்து வந்து சேர்ந்தாரு... வர்ற வழியில ஏதாச்சும் ஆயிருந்தா... என்னவாகி இருக்கும்?

"இப்போ நான் என்னோட உரிமையை நிலைநாட்டிப் போர்க்கொடி தூக்கினா... அவர் என்ன பண்ணுவாருன்னு நினைக்கறீங்க?

"பிடிவாதம் இன்னமும் ஜாஸ்தியாகும். தினம் தினம் குடிச்சுட்டு வருவாரு. வீட்டுக்கே வரப் பிடிக்கலைன்னு... வேற சொன்னாரே?

"ஒட்டு மொத்த வெறுப்பும் என் மேல தானே திரும்பும்? குடிச்சு தன்னை அழிச்சுக்கத் தயாராயிட்ட மனிதர் கிட்டே... போராட முடியுமாப்பா?

"போராட்டம் வாழ்க்கை இல்லைப்பா... நரகம்! விட்டுக் கொடுத்து விலகினா... அவராவது சந்தோஷமா இருப்பாரில்லையா?

"நான் போயிட்டா... இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்துடும். சஞ்சனாவை ஏற்கனவே நீங்க மருமகளா ஏத்துக்கத் தயாரா இருந்தீங்க தானே? அப்புறம் என்னப்பா?

"பிள்ளையோட சந்தோஷம் தான் நமக்கு முக்கியம்னு நினையுங்க... மத்ததெல்லாம் ரெண்டாம் பட்சம் தான்.

"கணவனுக்கு நிம்மதியும் சந்தோஷத்தையும் தர வேண்டியது... ஒரு நல்ல மனைவியோட கடமைன்னு... நான் நெனைக்கிறேன்.

"அவரோட வெறுப்பை சம்பாதிச்சுகிட்டு இந்த வீட்டுலேயே நான் இருந்தா... அவர் ஆரோக்கியத்தை இழந்து நடைப் பிணமா ஆயிடுவாரு... வீட்டுப் பக்கமே வர மாட்டாரு... எனக்கும் எங்கே நிம்மதி இருக்கும்?

"கிட்டத்தட்ட ஒரு வாழா வெட்டியா இங்க இருந்து என்னத்தை சாதிக்கப் போறேன். விட்டுக் கொடுத்துட்டுப் போயிட்டா... அதுல ஒரு ஆத்ம திருப்தி இருக்கும்!

"இந்த விஷயத்துல நான் முடிவெடுத்தது எடுத்தது தான். யார் பேச்சையும் கேட்க மாட்டேன். எனக்கு அவர் நிம்மதியா சந்தோஷமா இருக்கணும் அதான் முக்கியம்...

"நீங்க மறுத்தாலும்... நான் கண்டிப்பா வீட்டை விட்டுப் போகத் தான் போறேன் அப்பா! இது சத்தியம்."

கங்காதரன் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டார்.

இனி தலைகீழாக நின்று மன்றாடிப் பார்த்தாலும்... எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று தெளிவாகப் புரிந்து கொண்டார்.

மீராவின் தியாக உள்ளத்தையும் விட்டுக் கொடுத்து விலகும் பெருந் தன்மையையும்... பின்னால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று சீர் தூக்கிப் பார்த்து... அவள் எடுத்த முடிவையும் எண்ணிப் பார்த்தபோது... அவரது அடிவயிறு பச்சாதாபத்தில் பிசைந்தது போலிருந்தது.

"சரிம்மா மீரா! நான் உன்னைத் தடுக்கப் போறதில்லை. உன் புருஷனுக்கு நீயும் சளைச்சவ இல்லைம்மா... பிடிவாதம் பிடிக்கிறதுலே ரெண்டு பேரும் ஒத்துமையாத் தான் இருக்கீங்க.

"நீ தாராளமா எங்களை விட்டுப் போகலாம்... ஆனா... எனக்காக இந்தத் தகப்பனுக்காக ஒரே ஒரு காரியம் பண்ணு



வியா மீரா?" சட்டென்று அவளது இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்.

"சொல்லுங்கப்பா. நான் என்ன செய்யணும்?"

"எங்களை விட்டா உனக்கு யாரும்மா இருக்காங்க? அந்த சித்தப்பா வீட்டுக்கு நீ திரும்பவும் போய் கஷ்டப்பட... நான் அனுமதிக்க மாட்டேன்.

"எங்க வீட்டு மகாலட்சுமி நீ... படியிறங்கிப் போறே... இனி இந்த வீட்டுலே என்னென்ன நடக்கப் போகுதோ? சரி விடு!

"அம்மாடி! நீ எங்கேயோ கண் காணாத இடத்துல... தன்னந்தனியா இந்த உலகத்துல போராடிக் கிட்டிருக்கிறதை நெனச்சாலே... கொஞ்சம் கொஞ்சமா நாங்க செத்துடுவோம் ராஜாத்தி!

"எங்களுக்காக உன் முடிவை மாத்திக்க வேணம். ஆனா ஒரு பத்திரமான இடத்துல நீ பாதுகாப்பா இருக்கேங்கிற நிம்மதியையாவது... எங்களுக்குக் கொடும்மா...

"பாண்டிச்சேரியில என் நண்பன் காசி எறால் பண்ணை நடத்திட்டு இருக்கான். அவனோட மனைவியும் மகனும் ரெண்டு வருஷத்துக்கு முன்னே ஒரு கார் விபத்துல இறந்து போயிட்டாங்க...

"கோவில் குளத்துக்கும் ஆசிரமத்துக்கும் அப்பப்போ போயிக் கிட்டு... பண்ணையை விரக்தியா நடத்திட்டு வர்றான்...

"நீ அங்க போய் இரும்மா... காசிக்கும் ஒரு அன்பான மகள் கிடைச்ச மாதிரி இருக்கும்... பண்ணை நிர்வாகத்தைப் பார்த்துக்கோ... உன் படிப்பையும் தொடர்ந்துகிட்டிரு...

"நாங்களும் இங்கே ஓரளவுக்காவது திருப்தியா இருப்போம். ஐ மீன் பாதுகாப்பான எடத்துல இருக்கியேங்கிற திருப்தி!

"நான் அப்பப்போ உன்னை வந்து பார்த்துக்கிறேன். நீ எங்கே இருக்கே? எப்படி இருக்கேங்கிறதைப் பத்தி... நான் கோகுல் கிட்ட மூச்சு விட மாட்டேன்.

''சம்மதம்னு சொல்லும்மா ப்ளீஸ்'' குரல் தழுதழுக்க பரிதாபமாகப் பார்த்தபடி அவர் கெஞ்சியபோது மீராவால் மறுப்பு தெரிவிக்க முடியவில்லை.

''ச... சரிப்பா! இன்னிக்கே நான் கிளம்பறேன் அப்பா! அவர் சாயந்தரம் வீட்டுக்கு வர்றப்போ... நான் இங்கிருந்து போயிட ணும். அம்மா கிட்டே இந்த விஷயத்தை.''

''நோ... நோ! அவ கிட்ட நான் பக்குவமா எடுத்துச் சொல்லிக்கிறேன். நிதானமா எடுத்துச் சொல்லணும். இனி அவளை எப்படிச் சமாளிக்கப் போறேனோ தெரியலை...

''இப்படிப்பட்ட புள்ளையைப் பெத்ததுக்கு... அவளுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தான் போ!

''நான் இப்பவே காசிக்கு போன் பண்ணிடறேன். நீ ரெடியாகு! உன்னைக் கொண்டு அங்க விட்டுட்டு வந்துடறேன்.

''மீரா! ரொம்ப நன்றிம்மா! இந்த மட்டுமாவது காசி வீட்டுக்குப் போறதுக்கு நீ சம்மதிச்சியே?

''உன்னோட தங்கமான குணத்துக்கு ஒரு குறையும் வராதும்மா... இந்த முட்டாள் பயலுக்கு உன்னோட அருமை புரியத்தான் போகுது பாரேன்!

''கிட்டக்க இருக்கிறப்போ தெரியாத அருமை... விலகிப் போனதும் அவனுக்கு நல்லாப் புரிஞ்சுடும்.

''கூடிய சீக்கிரம் பயல் தப்பை உணர்ந்து உன்கிட்ட மன்னிப்பு கேட்பான்கிற நம்பிக்கை எனக்கிருக்கு மீரா.''

''எனக்குச் சுத்தமா அந்த நம்பிக்கை இல்லப்பா... அவர் சஞ்சனாவோட சந்தோஷமா வாழ்ந்தா... அதுவே போறும்பா... எனக்காகப் பரிஞ்சுகிட்டு நீங்க அவர் கிட்ட எதுவும் பேசிடாதீங்கப்பா... ப்ளீஸ்.''

''சரி... உனக்காக பரிஞ்சுகிட்டு பேசலை போதுமா? ஆனா நான் அவன் கிட்டே வேற விதமா பேசித் தான் ஆகணும்.''

''சரிப்பா... அம்மாவுக்கு சத்து மாவு கஞ்சியும் மாத்திரையும் கொடுத்துட்டுக் கிளம்பறேன். அவங்களுக்கு எந்தெந்த



நேரத்துல என்னென்ன மருந்து மாத்திரை தரணும்... அவங்களோட டயட் பத்தின டிடெய்ல்ஸை எழுதி வச்சுட்டுப் போறேன்.

''அது பிரகாரம் அவங்களுக்கு வேளா வேளைக்குக் கொடுத்து கவனிச்சுக்கணும். ஜாக்கிரதையா பார்த்துக்கோங் கப்பா'' கண்கள் கலங்க கரிசனத்துடன் கூறியவள்... அடுக் களைக்கு விரைந்து சத்து மாவுக் கஞ்சியைப் பக்குவமாய் காய்ச்சி இறக்கினாள்.

கண்களில் நீர்த் திரையிட... கடமையே கண்ணாகச் செயல்பட்ட மருமகளையே பார்த்துக் கொண்டிருந்தார் சுங்காதரன்.

மகன் கோகுலின் அடாத செயலை எண்ணும்போதே... உள்ளுக்குள் தளபுளவென்று உலை கொதித்தது.

தீர்மானித்தபடியே மீராவை பாண்டிச்சேரியில் உள்ள காசியின் வீட்டில் விட்டு விட்டுப் பிரியா விடை பெற்றுக் கிளம்பி சென்னைக்கு வந்தபோது இரவு மணி பத்தரையைத் தொட்டிருந்தது.



## 17

அன்று சாயந்தரம் அலுவலகத்தை விட்டு வெளியேறியதும்... கோகுல் நேராக கடற்கரைக்குத் தான் சென்றிருந்தான்.

விரித்த கூந்தல் காற்றில் அலை பாய... தனக்காகக் காத்திருந்த சஞ்சனாவைக் கண்டதும் அவனது மனம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

நந்திபோல் குறுக்கே நின்ற மீரா... விரைவில் தன் வாழ்க் கையிலிருந்து விலகி விடுவாள் என்று கோகுல் கூறியது தான் தாமதம்... சஞ்சனா சந்தோஷம் தாளாமல் முழங்கையை உயர்த்தி இழுத்தபடி 'யா... ஹூ' என்று கத்தி விட்டு உரிமையாய் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

படகு மறைவில் அமர்ந்தபடி கைகளைக் கோர்த்துக் கொண்டு எதிர் காலத்தைப் பற்றிய இன்பக் கனவில் மிதந்தவாறு... நேரம் போவது தெரியாமல் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல் எழுந்து சென்றனர்.

கோகுல் தன் வீட்டை அடையும் போது மணி ஒன்பதாகி விட்டிருந்தது.

பளிச்சென்று நெற்றியில் குங்குமம் துலங்க மெட்டி ஒலி சப்திக்க தெய்வீக அழகுடன் துறுதுறுப்பாக வளைய வந்த மீராவைக் காணவில்லை.

மெல்ல மாடியேறிப் போய் தன் ப்ரீப் கேஸை வைத்து விட்டு சாக்ஸைக் கழற்றினான்.

'போர்டிகோவில் அப்பாவின் காரைக் காணோம். மீரா பெரியவர்களிடம் என்ன சொல்லி வைத்தாள் என்று தெரியவில்லையே?

'மீரா எங்கே போய் விட்டாள்? கூடிய விரைவில் வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்' என்று தானே கூறினாள்?

'இன்றே போய் விட்டாளா?

'அப்படிப் போவதற்கு முன்... பெரியவர்களிடம் என்ன சொல்லி விட்டுச் சென்றாளோ?

'எங்கே சென்றிருப்பாள்?

'சித்தப்பாவின் வீட்டிற்கோ... திருநீர்மலைக்கோ... அவள் சென்றிருக்க மாட்டாள் என்று அவனது உள் மனம் உறுதியாய் அறுதியிட்டுக் கூறியது.

'இந்த உலகத்தில் அவளுக்கு வேறு போக்கிடம் இருக்கிறதா என்று நான் யோசிக்கவே இல்லையே?

'இந்த இளம் வயதில் தன்னந்தனியாக எங்கே வசிப்பாள்? எப்படிக் காலத்தைத் தள்ளுவாள்? என்று லவலேசமும் சிந்திக்காமல் போய் விட்டேனே?



'சஞ்சனாவுடன் சந்தோஷமாக வாழ வேண்டும்' என்ற வெறியில்... ஆசையில்... கண் மூடித்தனமாய் சுயநலமாய் இருந்து விட்டேனே?

'உங்களது சந்தோஷத்திற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன்' என்றாளே? சொன்னபடி நிறைவேற்றி விட்டாளே?

'மீராவுக்கு ஒரு சொல்... ஒரு வாக்கு தான் போலும்!

'என் மீதும் இந்தக் குடும்பத்தின் மீதும் எவ்வளவு ஆத்மார்த்தமான அன்பு வைத்திருந்தாள்? எங்கு சென்றிருப்பாள்?

'அம்மாவிடம் இதைப் பற்றிக் கேட்கலாமா?' யோசனையுடன் கீழே இறங்கி வந்து அம்மாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

"அம்மா... அம்மா! அப்பா இன்னமும் வரலை போலிருக்கே? போன் பண்ணி ஏதாச்சும் சொன்னாராம்மா?

"மீ... மீரா கூட வீட்டுலே இல்லையே" தயங்கியபடி கேட்டு விட்டான்.

முதுகு காட்டிப் படுத்திருந்த சாந்தா திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

"தெரியலைப்பா... இந்தக் கண்றாவியை எல்லாம் பார்க்கணும்னு என் தலையில எழுதிட்டான் பகவான்... இதுக்குப் பேசாம என்னைக் கொண்டு போயிட்டா தேவலை..." என்று படக்கென்று கூறி விட்டு முதுகு குலுங்கத் தேம்ப ஆரம்பித்து விட்டாள்.

கோகுலுக்கு முகத்தில் அறைந்தாற் போலிருந்தது. தணலின் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்ற அவதி!

சட்டென்று வெளியே வந்து விட்டான்.

அடுக்களையிலிருந்து சமையல்காரர் ராமையா மெல்ல எட்டிப் பார்த்தார்.

"சின்னய்யா! டிபன் எடுத்து வைக்கட்டுமா?" பவ்யமாய் கேட்டவரை ஏறிட்டான்.

மீரா இங்கு இருந்தவரை... 'நளபாகத்தை' அவளே கவனித்துக் கொண்டாள்.

ராமையா அவளுக்குக் கூடமாட காய் நறுக்கிக் கொடுத்து ஒத்தாசை செய்தார். இப்போது பொறுப்பு மீண்டும் அவரது கைக்கு வந்து விட்டது.

'மீரா நிரந்தரமாக வீட்டை விட்டுப் போய் விட்டாள்' என்ற விவரம் அவருக்கும் தெரிந்து விட்டது போலும்!

வயதானவரின் முகம் ஏகத்திற்கும் இருண்டு போயிருந்தது.

''ஒரே ஒரு தோசை மட்டும் போதும் ராமையா''. சாம்பாரும் சட்னியும் சுமார் ரகம் தான்!

மீரா சமைத்தால் வாசனை வீட்டை நிறைத்துக் கொள் ளுமே? 'சூடாக சுவையும் மணமுமாக பதார்த்தங்களை சிரித்த முகத்துடன் அவள் பரிமாறும் போதே... வயிறும் மனமும் நிறைந்து விடுவதாக'... அப்பா அடிக்கடி கூறுவாரே?

அது எந்த அளவுக்கு நிஜம் என்று இப்போது தானே உறைக்கிறது! ஒப்புக்கு பாதி தோசையைப் பிட்டு சாப்பிட்டு விட்டு எழுந்து விட்டான்.

அவனது செல்போன் செல்லமாய் சப்தித்தது.

''ஹலோ.''

''ஹலோ... கோகுல்! சந்தோஷத்துல எனக்குத் தூக்கமே வரலைப்பா. உனக்கும் அப்படித்தானே இருக்கும்? பெரிய வங்க என்ன சொன்னாங்க? நாம்ப எப்போ சேரப் போறோம்னு... தெரிஞ்சுக்க ஆவலா இருக்கு.

''மார்னிங் சீக்கிரமா போன் பண்ணணும் டார்லிங். ஸ்வீட் ட்ரீம்ஸ்பா... குட் நைட்'' சஞ்சனாவின் குரல் தேனாய் வழிந்து போதை ஏற்றியது.

அதுவரை... அவளது குரலைக் கேட்பதற்கு முன்பு வரை... அவனது மனசு முழுவதும் குற்ற உணர்வு நமநமவென்று படர்ந்து பிறாண்டியது நிஜம்!



அவளது குரலைக் கேட்ட மாத்திரத்தில்... என்ன மாயமோ? என்ன மந்திரமோ?

குற்ற உணர்வைத் துணி கொண்டு துடைத்து விட்ட தினுசில் மனம் லேசானது.

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட கதையாக மீண்டும் அவனுக்குள் முரட்டுப் பிடிவாதம் தலைதூக்கியது.

'ஊகூம்! சஞ்சுவும் நானும் வாழ்க்கையில ஒண்ணா சேரணும். அம்மா என்னிடம் முகம் கொடுத்துப் பேசா விட்டால்... போகட்டும். எனக்கென்ன வந்தது?

'எனக்கு என் சந்தோஷம் தான் முக்கியம்! நேற்று வந்தவள் மீரா! அவளே என் மனதைப் புரிந்து கொண்டு நாசூக்காக விலகி விட்டாள்.

'என்னைப் பெற்று வளர்த்தவர்களுக்கு... என் மனதில் உள்ள ஆசை புரியாதா என்ன?

'அப்பா வந்து கோபத்தில் எகிறிக் குதிப்பாரோ? குதிக்கட்டுமே..! குறுக்கே நின்ற தடை விலகி விட்டது...

'எந்த சலசலப்புக்கும் நான் அஞ்சப் போவதில்லை... இனிமேல் எதற்கு மூடுமந்திரம்? வெட்டு ஒண்ணு... துண்டு ரெண்டு என்று உடைத்துப் பேசி முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டியது தான்.'

தீர்மானித்தபடியே ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து அப்பாவின் வரவிற்காகக் காத்திருந்தான் கோகுல்.

மணி பத்தரைக்கு காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு நிதானமாய் வந்த கங்காதரனைக் கண்டதும் மெல்ல எழுந்து நின்றான்.

'கோபத்தில் தாண்டவமாடப் போகிறார் அப்பா' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் கோகுல்.

ஆனால்... அவரிடமிருந்து அப்படியொரு வார்த்தை வரும் என்று அவன் கனவிலும் கருதவில்லை தான்.



## 18

மகனை ஏற இறங்கப் பார்வையாலேயே அளவெடுத்தார் கங்காதரன்.

"மீரா எல்லா விஷயங்களையும் சொல்லிட்டா கோகுல்! சஞ்சனா கூட வாழ்ந்தா தான் அது வாழ்க்கைன்னு முடிவெடுத்துட்டே.... உன் இஷ்டம்!

"மீராவும் உன் சந்தோஷம் தான் முக்கியம்னு சொல்லி... விடுதலைப் பத்திரத்துல கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டுப் போயிட்டா...

"நான் நம்ம லாயர் கிட்டே பேசிட்டு தான் வரேன். எப்படியும் டிவோர்ஸ் கிடைக்க ஒரு வருஷமாயிடுமாம்...

"இந்தக் காலத்துப் பசங்க நீங்க... அவங்கவங்க இஷ்டப்படி தீர்மானம் பண்ணிட்டு முடிவெடுத்துடறீங்க... பெரியவங்களை எங்கே கலந்து பேசறீங்க? சரி... நடந்தது நடந்து போச்சு!

"சஞ்சனாவும் நீயும் சேர்ந்து வாழப் போறீங்க... அதுலே எந்த மாற்றமும் இல்ல... முறைப்படி விவாகரத்து கிடைச்சதும்... நீங்க கல்யாணம் பண்ணிக்கலாம்.

"இந்த விஷயத்திலாவது என் பேச்சுக்கு மதிப்பு கொடுப்பியா கோகுல்?" அவர் மெல்லிய குரலில் அதிராமல் கேட்ட போது... கோகுலுக்கு குத்தீட்டியாய் இதயத்தை சொருகி இழுத்தது போல் வலித்தது.

"எ... என்னப்பா இப்படிக் கேட்டுட்டீங்க! என் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து என் ஆசைக்கு முட்டுக்கட்டை போடாம... சஞ்சுவோட நான் ஒண்ணு சேர்றதுக்கு சம்மதிச்சீங்களே... அதுவே பெரிய விஷயம்பா...

"நீங்க சொல்ற மாதிரி... காத்திருக்கோம்பா... டிவோர்ஸ் கிடைச்சதும் கல்யாணம் செய்துக்கிறோம். தேங்க் யூ டாட்."

"அப்புறம் இன்னொரு விஷயம் கோகுல்! உங்கம்மாவுக்கு உடம்பு முடியாம படுத்தே கிடக்கிறா... நானும்



வீட்டுலே இருக்கிறதில்ல... சஞ்சனா இந்த வீட்டுக்கு வரப் போற மருமகள் தானே?

"அவளை தினமும் வந்து அம்மாவையும் வீட்டையும் பார்த்துக்கச் சொல்லு... நைட்லே அம்மாவுக்கு தர வேண்டிய ஆகாரத்தையும் மருந்து மாத்திரைகளையும் கொடுத்து முடிச்சுட்டு... அவ கிளம்பிப் போகட்டும்.

"என்ன முழிக்கிறே? கார்லே தானே பத்திரமா அனுப்பி வைக்கப் போறோம்? அப்புறம் என்ன? மீரா இங்கே இருந்த வரைக்கும் ஒரு மருமகளுக்குரிய கடமைகளை செவ்வனே செய்துட்டா இல்லையா?

"சஞ்சனாவுக்கும் அந்தக் கடமையும் பொறுப்புணர்ச்சியும் இருக்கணும்னு நீ நினைச்சா... இதுக்கு சம்மதம் சொல்லு! இல்லேன்னா..."

"இ... இல்லப்பா... அவசரப்படாதீங்க... சஞ்சுவும் ரொம்பப் பொறுப்பான பொண்ணு தான்! அவ அம்மாவ கவனிச்சுக்கிறதையும் இந்த வீட்டை நிர்வகிக்கிறதையும்... பார்த்துட்டு நீங்களே பிரமிச்சுப் போயிடுவீங்கப்பா...

"இந்த மட்டும் நீங்க மனசு இரங்கி அவளை மருமகளா ஏத்துக்கிட்டீங்களேப்பா... தேங்க்ஸ் அப்பா! நன்றி உணர்ச்சி என்னை விட அவளுக்குப் பன் மடங்காகவே இருக்குப்பா... இப்பவே போன் செய்து சொல்லிடறேன்.

"நாளைக்குக் கார்த்தாலே டாண்ணு வந்து நிப்பா... பாருங்களேன்" குதூகலத்தில் குஷி பிய்த்துக் கொண்டு போக... கோகுல் அவசரமாய் இரண்டிரண்டு படிகளாகத் தாவி மாடியேறியதை... நெஞ்சம் கனக்கப் பார்த்துக் கொண்டிருந்தார் கங்காதரன்.

நீண்ட பெருமூச்செறிந்தபடி... மீராவுக்கு தான் கொடுத்திருந்த செல் போனுக்கு முயற்சித்தார்.

"ஹலோ... சொல்லுங்கப்பா" சோகம் தொனித்த மென்மையான குரலைக் கேட்கும்போதே... பரிதாபத்தில் குடலைப் பிசைவது போலிருந்தது.

"நான் பத்திரமா வந்து சேர்ந்துட்டேன்டா... வீட்டுக்குப் போனதும் மறக்காம போன் பண்ணச் சொன்னியே... அதான்!

"தைரியமா இரும்மா... காசி உன்னைப் பெத்த தகப்ப னாட்டம் கவனிச்சுப்பான்... எதுவா இருந்தாலும் போன் பண்ணும்மா... நானும் தினமும் போன் பண்றேன். சரியாடா?"

"சரிப்பா... அவர் இன்னிக்கு குடிச்சுட்டு ஒண்ணும் வரலியே? சீக்கிரமா வந்துட்டாரா? நான் வீட்டை விட்டு வெளியேறினது தெரிஞ்சா... ரொம்பவே சந்தோஷப் பட்டுருப்பாரு. இல்லையாப்பா?

"ஏன் அப்பா? மீரா எங்கே போயிருக்காள்னு ஏதாவது கேட்டாராப்பா...? நானொரு பைத்தியம்!

"அவரோட சந்தோஷத்துக்கே நான் குறுக்கே வந்து தொலைஞ்சேன்னு பேசினவராச்சே? அவரு போய் என்னை விசாரிக்கிறதாவது?

"இருந்தாலும் மனசு கிடந்து அடிச்சுக்குதுப்பா... அதான்" மறுமுனையில் குரல் உடைந்து தழுதழுத்து தேம்பி விட் டாள் மீரா.

பதறிப் போய் விட்டார் கங்காதரன்.

"என்னம்மா நீ? 'என்னோட முடிவை மாத்திக்க முடி யாதுப்பா'ன்னு எவ்ளோ வைராக்கியமா தைரியமா பேசினே?

"காரண காரியங்களை அழகா எடுத்துக் காட்டிப் பேசி... என்னை வாயடைச்சுப் போக வச்சவளாச்சே?

"விட்டுக் கொடுத்து விலகிப் போய் எவ்ளோ பெரிய தியாகத்தைப் பண்ணியிருக்கே தெரியுமா?

"இந்த ஒரு குணமே... உன்னை வாழ வைக்கும். பாரேன்!

"கோகுல் ஒரு பைத்தியக்காரன். ஒரு அழகான பொக் கிஷத்தை அவனுக்குக் கடவுள் கொடுத்தாரு. அதோட அருமை பெருமை தெரியாம தவற விட்டுட்டான் பாவி!

"ஆனா... கண்டிப்பா கூடிய விரைவில அந்தப் பொக் கிஷத்தை இழந்ததை நினைச்சு அவன் கதறத் தான் போறான்.



"ஆயிரந்தான் இருந்தாலும் அவன் நான் பெத்த பிள்ளை தானே? அவன் புத்தி இப்போ கெட்டுப் போயிருந்தாலும்... உன் மனசுல உன்னைப் பத்தின நெனப்பு இருக்கத்தான் செய்யுதும்மா...

"உன்னைத் தொட்டு தாலி கட்டினவனாச்சே? உன்னைப் பத்தின கவலை இல்லாம இருக்குமா? ஆனா வெளிப் படையா அதைப் பத்தி கேட்கிறதுக்கு முடியாம... தொண்டைக் குள்ளே முள் சிக்கிக் கிட்டாப்பல திணறிக் கிட்டிருக்கான்.

"அதை நான் ஒரு பார்வையிலேயே புரிஞ்சுகிட்டேன் மீரா. அவன் குடிக்கலை. சீக்கிரமாவே வீட்டுக்கு வந்துட்டான்.

"இந்தப் பிரிவு நிரந்தரமில்லை மீரா! என் உள் மனசு சொல்லுது. நீ இந்த வீட்டுக்குத் திரும்பவும் வந்து... வாழ்வாங்கு வாழப் போறே இது சத்தியம்."

"நான் திரும்ப வரணும்னு நெனக்கலேப்பா... அவர் சந்தோஷமா நிம்மதியா இருக்கணும். அம்மாவை பத்திரமா பார்த்துக்கோங்கப்பா... குட் நைட்!"

"குட் நைட்... பை மீரா."

மறுநாள் காலை எட்டு மணிக்கு, ஜிகு ஜிகு என்று புடவை கட்டி சினிமா நடிகை போன்ற அலங்காரத்துடன் விரித்த கூந்தலுடன் வந்து நின்றாள் சஞ்சனா.

வந்ததும் வராததுமாக கோகுலிடம் "முதல் முதலா வந்திருக்கேன். பூஜை ரூம் எங்கேயிருக்கு கோகுல்! விளக் கேத்தட்டுமா என் கையால?" என்றாள்.

"ஓ... எஸ்! தாராளமா அதோ அங்கே ரைட் சைடுலே இருக்கு பாரு! அதான் பூஜை ரூம்..." கோகுலுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ஓரக் கண்ணால் பெருமையுடன் கங்கா தரனை நோட்டமிட்டான்.

விரித்த கூந்தலுடன் விளக்கேற்றியவளைக் கண்ட போது... உள்ளூர வெறுப்பு மண்டிக் கொண்டு வந்தது.

மீரா அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து குளித்து விட்டு... பிரம்ம முகூர்த்தத்திலேயே விளக்கேற்றி பூஜையை முடித்து விடுவாள்.

காலை ஐந்தரைக்கெல்லாம் சாம்பிராணி ஊதுபத்தி வாசம் வீட்டை நிறைக்க... தேவ லோகமாய் தெய்வீக மணம் கமழ்ந்து கொண்டிருக்கும்.

கங்காதரன் ஏளனத்துடன் மகனை ஊன்றிப் பார்த்தார். குற்ற உணர்வில் பார்வையைத் தழைத்துக் கொண்டான் கோகுல்.

''இந்தா சஞ்சு! அம்மாவுக்குத் தர வேண்டிய மருந்து மாத்திரைகள் பற்றிய விவரம்... அவங்களுக்குத் தர வேண்டிய ஆகாரம்... இதைப் பத்தி இதுலே குறிச்சு வச்சிருக்கேன்.

''நல்லா பார்த்து அதுபடியே கவனமா கொடுக்கணும். கேர் ஃபுல்லா அவங்களைக் கவனிச்சுக்கணும்.

''அவங்க கூடிய சீக்கிரம் உடல் நலம் தேறி... நம்ம கல்யாணத்தப்போ... ஓடியாடி வந்தவங்களை வரவேற்கணும். சரியா சஞ்சு?''

''ஷ்யூர் கோகுல்'' என்று ஸ்டைலாக தோள்களைக் குலுக்கினாள்.

கோகுலிடமிருந்த பேப்பரை வாங்கிப் பார்வையை ஓட்டினாள். நேராக அடுக்களைக்குச் சென்றாள்.

ராமையாவை அலட்சியமாய் ஏறிட்டாள்.

''அத்தைக்கு இந்நேரம் ஓட்ஸ் கஞ்சி கொடுக்கணுமாம்... சீக்கிரமா ரெடி பண்ணுங்க... எதெது எந்த நேரத்துல அவங்களுக்கு தரணும்னு... நல்லா ஞாபகம் வச்சுக்கோங்க.

''வேளா வேளைக்கு நான் வந்து ஞாபகப்படுத்தணும்னு நெனக்காதீங்க. கரெக்டா டைமுக்கு ரெடி பண்ணி ரூமுக்குக் கொண்டு வந்துடணும்.



''ஒன்பதரை மணிக்கு ஒரேயொரு கோதுமை தோசை ஒரு சின்ன டம்ளர்லே ஆரஞ்சு ஜூஸ்... லஞ்சுக்கு ஒரு கப் வரகரிசி சாதம்!

''நான் சொல்றதையெல்லாம் துண்டு பேப்பர்லே குறிச்சு வச்சுக்கோங்க சரியா?'' எஜமானி போல் அதட்டல் போட்டதும்... மிரண்டு போன ராமையா சஞ்சனாவின் முதுகுக்குப் பின்னால் வந்து நின்ற கோகுலை... ஏறிட்டு விட்டு பலமாய் தலையசைத்தார்.

சாந்தாவுக்கு கஞ்சியோ, ஆகாரமோ, ஜூஸோ, வெந்நீரோ... எதுவாக இருந்தாலும் மீரா தன் கையாலேயே பக்குவமாய் பதமாய் தயாரித்து தானே எடுத்துக் கொண்டு பெற்ற மகள் போல் பரிவாய் கொடுத்து உபசரித்து... மாத்திரைகளையும் வற்புறுத்தி விழுங்க வைப்பாள்.

''என்னது இது? வந்தவுடனே சமையல்காரரை அதிகாரத்துடன் ஏவ ஆரம்பித்து விட்டாள். வேலைக்காரர்களை ஏவி விட்டு... அம்மாவுக்கு பணிவிடை செய்யச் சொல்கிறாளே?

''மீராவுக்கும் இவளுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது போலிருக்கிறதே? ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லி... நான் திருத்த வேண்டும் போல் உள்ளதே? மைகாட்!''

கோகுலின் முகம் ஏமாற்றத்தில் அனிச்ச மலராய் வாடிப் போனது.



## 19

ஒரே மாதத்தில் சாந்தாவின் உடல் நிலை சீர்கேடு அடையத் தொடங்கியது.

பரிவாய் பாசமாய் கவனிப்பதை விட்டுவிட்டு... வேலைக்காரியிடம் மாத்திரை கொடுக்கச் சொல்லி... மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள் சஞ்சனா.

மனம் கசந்து போன சாந்தா மருந்து மாத்திரைகளை சாப்பிடாமல் புறக்கணிக்க ஆரம்பித்தாள். அம்மாவின்

உடல்நிலை அபிவிருத்தி அடைவதற்கு பதிலாக... மோசமாகப் போவதை உணர்ந்த கோகுலுக்கு... உள்ளூர குற்ற உணர்வு புழுவாய்க் குடையத் தொடங்கியது.

சமயோசிதமாய் ஒரு நர்ஸை வேலைக்கு அமர்த்தினான். சம்பளத்திற்கு வேலை பார்க்க வந்தவளும்... ஒப்புக்குத் தான் தன் கடமையைச் செய்தாள்.

பல வருடங்களாக குடும்பத்தில் ஒருவராக வேலை பார்த்து வந்த சமையல்காரர் ராமையா... சஞ்சனாவின் அடாவடித் தனத்தைப் பார்த்து விட்டு வேலையை விட்டு நின்று விட்டார்.

வயதுக்குக் கூட மரியாதை தராமல்... அதட்டி உருட்டி அவள் வேலை வாங்கிய விதம்... அவருக்கு சுத்தமாய் பிடிக்க வில்லை.

''போனா போகட்டும் கோகுல்! புதுசா ஆள் கிடைக்கிறவரை சமையலை நான் கவனிச்சுக்கிறேன். என்ன பெரிய பிரமாதம்?'' ஜம்பமாய் சவால் விட்டவளால்... ஒரு வாரம் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை.

சமையலறையே அலங்கோலமாகி விட்டிருந்தது.

''முடியாது கோகுல்! சதா அடுப்படியிலேயே அடைஞ்சு கிடக்கிறாப்பல இருக்கு. ஓயாத வேலை... சீக்கிரம் யாரை யாவது வேலைக்கு அமர்த்துங்க. இல்லேன்னா... ஆள் கிடைக்கிற வரை ஓட்டல்லே இருந்து வரவழைச்சுடலாம். சரியா கோகுல்?'' என்று அவள் கொஞ்சலாய் மிழற்றிய போது... கோகுலுக்கு அப்படியே பற்றிக் கொண்டு வந்தது.

இவள் அதிகாரமாய் தூள் கிளப்புவதைப் பொறுக்க மாட்டாமல்... வேலைக்காரி கூட மெல்ல மட்டம் போட ஆரம்பித்து விட்டாள்.

பூஜையறையில் ஸ்வாமி படங்களில் காய்ந்த பூச்சரம் தொங்கியது. வெள்ளி காமாட்சி விளக்கு தேய்க்கப்படாமல்... கறுத்து எண்ணெய் படிந்து பச்சை படர்ந்தது.



வீடு லட்சுமி களை இழந்தது.

'ஐயோ! நான் தவறான முடிவெடுத்து விட்டேனா? அப்பாவும் அம்மாவும் என்ன நினைப்பார்கள்? வீடா இது? ஏதோ பேச்சிலர்ஸ் ரூமுக்குள் நுழைவதைப் போல் அல்லவா இருக்கிறது?

'சஞ்சனா அலங்காரப் பூஷிதையாய் நாகரீகமாய் வலம் வரத்தான் லாயக்கு போலிருக்கிறதே?

'குடும்பத்திற்கு இவள் தோதுப் படவில்லையே? மீரா போய் 40 நாட்கள் கூட ஆகவில்லை. வீட்டையே தலைகீழாக்கி விட்டாளே?

'இவளது அராஜகத்தைப் பார்த்து விட்டு... எனக்கு தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருக்கிறதே? பெரியவர்கள் ஒரு வார்த்தை கூட இதைப் பற்றிச் சொல்லிக் காட்டாமல் இருப்பது... மனசாட்சியைக் கூறு போடுகின்றதே?

அம்மாவை நான் இழந்து விடுவேன் போலிருக்கிறதே? தனக்குள் புலம்பியே ஓய்ந்து போனான் கோகுல்.

பாண்டிச்சேரியில்... கடற்கரையோரமாக இருந்த காசியின் வீட்டில் பெற்ற மகள் போல் ஒன்றிப் போய் விட்டிருந்தாள் மீரா.

சமைத்து முடித்து இருவரும் அப்பா மகள் சேர்ந்து சாப்பிட்டு விட்டு எறால் பண்ணைக்குக் கிளம்பி விடுவார்கள். நாளடைவில்...

காசியை ஓய்வாக அமர வைத்துவிட்டுப் பண்ணையை மேற்பார்வை செய்து நிர்வகிக்கும் அளவுக்குத் தேறி விட்டிருந்தாள் மீரா.

அன்று காலை 11 மணிவாக்கில் பண்ணையைச் சுற்றி வந்தவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வர... தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே தள்ளாடிச் சரிந்தாள்.

''மீராம்மா மயக்கம் போட்டுட்டாங்க'' என்று சுற்றியிருந்தவர்கள் அலறவும் காசி பதறிப் போய் குடும்ப மருத்துவரை வரவழைத்தார்.

''எல்லாம் நல்ல சமாச்சாரம் தான்! அவங்க கன்சீவ் ஆயிருக்காங்க சார்.''

மீராவின் விழிகளிலிருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டியது.

''குறுக்கே நீ வந்து தொலைஞ்சுட்டியே?'' என்று கோகுல் பேசிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலித்து அடங்கியபோது... ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போலிருந்தது.

''கோகுல்! நான் உங்களை உயிரினும் மேலா நேசிக்கிறேன். அந்த அன்புக்கு அடையாளமா என் வயித்துல குட்டி ஜீவன் வளரத் தொடங்கியிருக்கு. உங்க சந்தோஷத்துக்கு குறுக்கே நிக்கக் கூடாதுன்னு... உங்க வாழ்க்கையிலிருந்து மொத்தமா விலகி வந்தப்புறம்... இப்படியொரு பந்தம் ஏற்பட்டிருக்கே?

''எந்தவொரு பொண்ணும் இந்த விஷயத்தைத் தன்னோட கணவன் கிட்டே தான் சொல்ல ஆசைப்படுவா... வாழ்நாள் முழுவதும் யார் வீட்டிலேயாவது அடைக்கலமா அண்டி வாழணும்கிறது என்னோட விதி!

''இந்த அனாதைக்கு வாழ்க்கையில பிடிப்பு ஏற்படணும் கிறதுக்காக... எனக்குக் கடவுள் இப்படியொரு வரப் பிரசாதத்தைக் கொடுத்திருக்காரு.

''உங்க நினைவு தந்த சுகத்தோட நம்ம குழந்தையை சுமந்துகிட்டு நான் வாழ்ந்து முடிச்சுடுவேன் கோகுல்'' என்று மானசீகமாகப் பேசியபடி தன் மென் வயிற்றை மிருதுவாகத் தடவிக் கொண்டாள் மீரா.

''மீரா! ஓர்க்கர்ஸ் எல்லாம் என்னவோ ஏதோன்னு பயந்துட்டிருக்காங்க... அவங்களுக்கு ஸ்வீட் வாங்கிக் கொடுத்து...



இந்த இனிப்பான செய்தியைச் சொல்லிட்டு வரேன்'' மகிழ்ச்சியுடன் வேகநடை போட்டார் காசி.

* * *

**கோ**குலுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. தனது பால்ய நண்பன் ஒருவனை வெகு காலம் கழித்துப் பார்த்துப் பேச 'டிரைவ் - இன்'னுக்குச் சென்று இருந்தான்.

நண்பனைப் பார்த்ததும் மனதிலிருந்த பாரத்தைக் கொட்டித் தீர்த்து விட்டிருந்தான்.

''டேய் என்னடா கோகுல்? இப்படியொரு முட்டாள் தனம் பண்ணியிருக்கே? உன்னைப் பெரிய ஜீனியஸ்னு நினைச்சேன். உங்கம்மாவோட கண்டிஷன் நாளுக்கு நாள் மோசமாகாமல் என்ன செய்யும்?

''உனக்கு அம்மான்னா உசுராச்சே? உன்னால தான் அவங்களுக்கு இந்த கதி ஏற்பட்டுச்சு? ஏண்டா முழிக்கிறே? ஊர் உலகத்துல உன்னை என்னடா பேசுவாங்க?

''வீட்டுல இருக்கிற ஸ்ரீதேவியை நோகடிச்சு அனுப்பிச்சுட்டு... ஒரு மூதேவியை கொண்டு வந்து நடு வீட்டுலே வச்சிருக்கியே? குடும்பம் உருப்படுமா?

''உன்னை விட்டுட்டு இன்னொருத்தனுக்குக் கழுத்தை நீட்டிட்டுப் போனவ... அவனை உதறிட்டு... மறுபடியும் உன்கிட்ட ஒட்டிக்கிட்டா... நாளைக்கே உன்னை வெட்டி விட்டுட்டு... வேற எவன் கூடவோ அது போறதுக்கு... எவ்ளோ நேரமாகும்?

''ஏண்டா உன்னோட மிஸஸ் எங்கே போயிருக்காங்க? எப்படி இருக்காங்கன்னு தெரியுமாடா? அவங்க மனசுக்குள்ளே எவ்ளோ இரத்தக் கண்ணீர் வடிச்சிருப்பாங்க...?''

''மீரா இருக்கிற இடம் அப்பாவுக்குத் தெரிஞ்சிருக்கும்னு தோணுது. ஆனா அதைப் பத்தி கேட்கிறதுக்கு வெட்கமா இருக்குடா... சஞ்சனாவால என்னோட நிம்மதியே போச்சு!

ஆபீஸ்லே உட்கார்ந்து முழு மனசோட என்னால வேலை பார்க்க முடியலை...

''அதைப் பத்தி அப்பாகிட்ட பேசறதுக்கு என்னோட வறட்டு கவுரவம் தடுக்குது.

'நீதானே எல்லாத்துக்கும் மூல காரணம்... இப்போ பலனை அனுபவிச்சுத் தானே ஆகணும்'னு முகத்துல அடிச்ச மாதிரி... அப்பா கேட்பாரோன்னு பயம். சொல்லவும் முடியாம முழுங்கவும் முடியாம... என்ன ஒரு அவஸ்தை.''

''டேய் வறட்டு கவுரவம் பார்த்தா... பழி பாவத்துக்கு ஆளாயிடுவே கோகுல்! யோசிச்சு சீக்கிரமா நல்ல முடிவா எடு'' என்று அந்த நண்பன் புத்தியில் உறைக்கும்படி கூறி விட்டிருந்தான்.

அலுவலகத்துக்கு லீவு சொல்லி விட்டு திடுதிப்பென்று வீட்டிற்குக் கிளம்பினான் கோகுல். இவன் வந்தது கூடத் தெரியாமல்... இவனது அறையில் கட்டிலில் குப்புறப்படுத்த படி செல்லில் யாருடனோ கொஞ்சிப் பேசிக் கொண்டிருந் தாள் சஞ்சனா.

''உன்னோட ஞாபகமாகவே இருக்கு சதீஷ்! பார்த்து எத்தனை நாளாச்சு? டெல்லியிலிருந்து எப்போ கிளம்பி வரப் போறே டார்லிங்...''

உச்சந்தலையில் யாரோ நெருப்பை அள்ளிக் கொட்டி னாற் போலிருந்தது. மனம் எரிமலையாய் குமுறியது.

''யூ... பிளடி... சீட்! தூ... நீயும் ஒரு பொண்ணா? உன் மேல ஆசைப்பட்டு... இந்த வீட்டு அன்பு தேவதையை வெளியே அனுப்பினேன். பாரு..? என்னை செருப்பால அடிக்கணும்.

''உன்னைப் பார்த்தாலே... சாக்கடைப் புழுவைப் பார்த் தாப்பல கேவலமா இருக்கு. கெட் அவுட் ஐ ஸே!''

''ஷட் அப் கோகுல்! எனக்கு மட்டும் இங்கிருக்க ஆசையா என்ன? எல்லாருக்கும் சேவகம் பண்ணிக்கிட்டு ஒரு



கொத்தடிமையா வாழ்ந்தா... நான் மூச்சுத் திணறியே செத்துடுவேன். சுதந்திரப் பறவையைக் கூண்டுக்குள்ளே அடக்கப் பார்க்கிற 'மேல் ஷாவனிஸ்ட்' கூட வாழ... எனக்குப் பிடிக்கலை தெரிஞ்சுக்கோ குட் பை.''

விழிகள் வெறுப்பை உமிழ... அவள் சென்ற திக்கையே வெறித்துக் கொண்டிருந்த கோகுல் 'ச்சே' என்று தலையில் அடித்துக் கொண்டான்.

''கால் போன போக்கிலே... மனிதன் போகலாமா?'' திடீரென்று கவிஞரின் காவிய வரிகள் அவனது நினைவு அலைகளினின்று எழுப்பி அவனது இதயத்தைப் பலமாய் மோதின.



## 20

பலத்த சிந்தனையில் மூழ்கியபடியே ஹாலுக்கு வந்த கோகுலை... டெலிபோன் மணி சத்தம் கலைத்தது. ரிசீவரை எடுத்து காதிற்குக் கொடுத்தான். ''ஹலோ.''

''ஹலோ... நான் தான் காசி பேச றேன்டா... உன்செல்லுக்கு ட்ரை பண்ணி னேன். லைன் கிடைக்கல. அதான்! டேய் கங்கா! நீ கூடிய சீக்கிரம் தாத்தாவாகப் போறேடா... நம்ம மீரா கண்ணு உண்டாகியிருக்காடா.

''முதல்லே இந்த சமாச்சாரத்தை சாந்தா கிட்டே சொல் லுடா... சந்தோஷத்துல ஆயிரம் யானை பலம் வந்துடும். நோய் பறந்தே போயிடும்டா... உடனடியா மீரா கிட்ட போன்லே பேசு! வச்சுடட்டுமா?'' கிட்டத்தட்ட கோகுலின் குரலும் கங்காதரனின் குரலும் ஒன்று போலவே இருப்பதால்... இவனிடம் விஷயத்தைத் தெரிவித்து விட்டார் காசி.

அவனையும் அறியாமல் அவனது கண்கள் உடைப் பெடுத்தன. சுவர்க்கத்தில் ஒரு பாகத்தைப் பிட்டு யாரோ அவனது கையில் கொடுத்தாற் போலிருந்தது.

'மீரா... அப்பழுக்கற்ற அன்பு தேவதையே? உன் முகத்துல முழிக்கக்கூட எனக்குத் தகுதி இருக்கா... என் கண்ணே?' மனசாட்சி ரம்பமாய் அறுத்தது.

அடுத்த நான்கு மணி நேரத்தில்.... காசியின் வீட்டில்...

அந்த அறையில் டேபிளின் மீது தலை சாய்த்து அமர்ந் திருந்தாள் மீரா.

"சொன்னது நீ தானா...? சொல்... சொல்... சொல்... என் னுயிரே...?"

எப்.எம். ரேடியோவிலிருந்து பி.சுசீலாவின் இனிய குரல் கசிந்து காற்றில் தேனைக் கலக்கியதோடு... மீராவின் விழிகளிலும் கண்ணீர் குளம் கட்ட வைத்தது.

வாசலில் நிழலாடியதும் தற்செயலாய் திரும்பிய வளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பரிதாபமான முகத்தோடு கோகுல் நின்றிருந்தான். அவனது முதுகுக்குப் பின்னால் மந்தகாசமான முகத்துடன் கங்காதரன்!

நான்கே எட்டில் அவளருகே வந்த கோகுல்... "மீ... மீரா! ஸாரிம்மா... உன் மனசை நான் ரொம்பவே நோகடிச்சுட்டேன். என்னை மன்னிச்சுடும்மா. என் புத்தியை செருப்பால அடிச்சுக்கணும். ஈவு இரக்கமே இல்லாம ரொம்ப சுயநலமா நா நடந்துகிட்டதை நெனச்சாலே... கூசிப் போகுது.

"உன் முன்னாடி நிக்கவே எனக்கு அருகதை இல்ல மீரா!" தழுதழுத்தான்.

நீண்ட பெருமூச்செறிந்தபடி நாசூக்காய் நகர்ந்து சென்று விட்டார் கங்காதரன்.

"வெ... வெட்கத்தை விட்டுச் சொல்றேன் மீரா! இப்போ என் மனசு பூராவும் விஸ்வரூபமெடுத்து நீ தான் வியாபிச் சிருக்கே... வீட்டை விட்டு நீ போன நாளிலிருந்து அணு அணுவா உன்னோட அருமையை உணர்ந்துட்டேன்.

"சஞ்சனாவால ரொம்பவே சங்கடப்பட்டுப் போயிட்டேன். 'நிழலின் அருமை வெயில்லே தெரியும்'னு சொல்வாங்க...



"என்னை மன்னிச்சு ஏத்துப்பியா மீரா? காலத்துக்கும் மாறாத காயத்தை நான் ஏற்படுத்திட்டேனே மீரா? இந்தப் பாவியை..." சட்டென்று இடை மறித்தாள் மீரா.

"பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க கோகுல்! உண்மையான காதலுக்கு முன்னாடி எந்தக் காயமும் ஒரு பொருட்டாகவே தோணாது தெரியுமா? பார்க்க வந்தப்போ... உங்களைப் பார்த்ததுமே என் மனசைப் பறி கொடுத் துட்டேன்.

"நான் கும்பிட்ட கடவுள்... நேசிச்சவரையே கைப்பிடிக்கிற பாக்கியத்தைக் கொடுத்தாரு... இப்பவும்... நான் உங்களை மனப்பூர்வமா நேசிக்கிறேன் கோகுல்.

"ஐ ரியலி லவ் யூ ஸோ மச்!"

"மீ...ரா! நிஜமாவாடா? இதைக் கேட்டதுமே எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா குட்டி?" சட்டென்று இறுக அணைத்துக் கொண்டான்.

"வீட்டுலே நமக்காக அம்மா காத்திருப்பா... நாம்ப கிளம்பலாமா?" வெளியில் இருந்தவாறே கங்காதரன் குரல் கொடுத்ததும்... குங்குமப் பூவாய் முகம் சிவக்க சட்டென விலகினாள் மீரா.

"இதோ வந்துட்டேன் அப்பா" என்றபடி நகரப் போன வளின் கன்னத்தில் அழுத்தமாய் இதழ் பதித்தான் கோகுல்.